24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

பக்கங்கள்: 24
விலை: 30

சுடர் 34 கதிர் 92 மாசி 15ஆம் நாள் புதன்கிழமை 27 பெப்ரவரி 2019 வள்ளுவர் ஆண்டு 2050



# பிராந்தியத்தில் போர்ப் பதற்றம்

## பாகிஸ்தானுக்குள் ஊடுருவி இந்திய வானூர்திகள் தாக்குதல்

புதுடெல்லி, பெப். 27

பாகிஸ்தானின் எல்லைக்குள் அத்துமீறி நுழைந்து இந்திய வானூர்திகள் நேற்று அதிகாலை தாக்குதல் நடத்தின. இதையடுத்து இந்தியா - பாகிஸ்தான் நாடுகளுக்கு இடையிலும் ஆசிய பிராந்தியத்திலும் போர்ப் பதற்றம் ஏற்பட்டுள்ளது. » 21

## ஓக. 15க்கு முன்னர் மாகாணத் தேர்தல்

### தேர்தல்கள் ஆணைக்குழு

யாழ்ப்பாணம், பெப். 27

மாகாணசபைத் தேர்தல்களை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் நடத்த முடியும் என்று எதிர்பார்ப்பதாக தேர்தல்கள் ஆணைக்குழு வட்டாரங்கள் தெரிவித்தன. அதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்று வருவதாகவும் அந்த வட்டாரங்கள் சுட்டிக் காட்டின.

மாகாணசபைத் தேர்தல் நடத்தப்படாமை தொடர்பில் பல விமர்சனங்கள் முன் வைக்கப்பட்டு வருகின்றன. இது தொடர்பில் தேர்தல்கள் » 21

## அரசியல்வாதிகளை நம்பாமையே வாக்களிப்பு வீழ்ச்சிக்குக் காரணம்

### மகிந்த தேசப்பிரிய தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப். 27

அரசியல்வாதிகள் மீதான நம்பிக்கை குறைவடைவதால், தேர்தல்களில் வாக்களிப்பு வீதம் குறைவடைந்து செல்கின்றது. இவ்வாறு தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம் பெற்ற செய்தியாளர்கள் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார். இந்தச் சந்திப்பில் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் எம்.எம். மொஹமட், சிறப்புக் » 21

## நீதிவானை அச்சுறுத்திய குற்றச்சாட்டில் இருவருக்கு மறியல்

மன்னார், பெப். 27

மன்னார் நீதிவானுக்கு அச்சுறுத்தல் விடுத்தனர் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட மூதூர் பகுதியைச் சேர்ந்த இருவரை 14 நாள்களுக்கு விளக்கமறிலில் வைக்க மன்னார் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

திருகோணமலையைச் சேர்ந்த இருவரும் நேற்று முன்தினம் மன்னார் நீதிவான் மன்றில் பதிவாளரிடம் சென்று, தாம் திருகோணமலை மூதூர் நீதிவான் மன்றிலிருந்து வந்துள்ளோம் என்று கூறி சில ஆவணங்களைச் சமர்ப்பித்துள்ளனர். நீதிவானைச் சந்திக்க வந்துள்ளோம் ஏன்று கூறினர். மன்னார் நீதிவான் ரீ. சரவணராஜாவின் மெய்ப்பாதுகாலருடன் உரையாடியுள்ளனர். அதன்போது ஒரு கட்டத்தில் நீதிவானுக்கு அச்சுறுத்தல் விடுக்கும் வகையில் » 05

## போர்க் குற்றத்துக்கு பொது மன்னிப்பாம்

### குற்றவாளிகளை இனங்காணாது அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிப்பு

கொழும்பு, பெப்.27

போர்க் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ள இலங்கை இராணுவத்தினருக்கும், விடுதலைப் புலிகளுக்கும் பொது மன்னிப்பு அளிக்கக் கோரும் அமைச்சரவைப் பத்திரம் ஒன்று நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப் பட்டுள்ளது.

இந்த அமைச்சரவைப் பத்திரத்தை அமைச்சர் சம்பிக்க ரணவக்க சமர்ப்பித்துள்ளார்.

இறுதிப் போரில் போர்க் குற்றங்கள் நடை » 21

## பொறிவெடியில் சிக்கி ஒருவர் பரிதாபச் சாவு

### வவுனிக்குளத்தில் சோகம்

யாழ்ப்பாணம், பெப்.27

முல்லைத்தீவு, வவுனிக்குளத்தில் ஒருவர் பொறிவெடியில் சிக்கி உயிரிழந்துள்ளார். வவுனிக்குளத் » 05

### புதிய அரசமைப்பு விவகாரம்

## மைத்திரி, ரணிலுடன் சம்பந்தன் சந்திப்பு

### அனைத்துக் கட்சிகளையும் அழைக்க அவர் வலியுறுத்து

திருகோணமலை, பெப். 27

புதிய அரசமைப்பு விவகாரம் தொடர்பில் ஆராய்வதற்கு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவையும், தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவையும் நாளை வியாழக்கிழமை நேரில் சந்தித்துப் பேசவுள்ளோம். இந்தக் கலந்துரையாடலுக்கு அனைத்துக் கட்சித் தலைவர்களையும் அழைக்க வேண்டும் என்று » 21

## பனிக்கன்குளத்தில் கோர விபத்து சம்பவ இடத்திலேயே ஒருவர் சாவு

மாங்குளம், பெப்.27

மாங்குளம், பனிக்கன்குளத்தில் நேற்று அதிகாலை நடந்த விபத்தில் சம்பவ இடத்திலேயே ஒருவர் உயிரிழந்தார். 5 பேர் காயங்களுக்குள்ளாகினர். கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த பயணி » 21



## ஒட்டுசுட்டானில் கைதானோரிடம் கோடிக் கணக்கில் பணமாம்!!

முல்லைத்தீவு, பெப்.27

முல்லைத்தீவு, ஒட்டுசுட்டானில் முச்சக்கர வண்டியொன்றில் இருந்து கிளைமோர், புலிகள் அமைப்பின் கொடி, புலிகள் அமைப்பின் சீருடை என்பன மீட்கப்பட்டமை தொடர்பாகக் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்க » 21

## தொழில்நுட்பபீட மாணவர்கள் பல்கலைக்குள் நுழையத் தடை

யாழ்ப்பாணம், பெப்.27

யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் தொழில்நுட்ப பீடத்தைச் சேர்ந்த மாணவர்கள் அறிவியல் நகரில் அமைந்துள்ள யாழ். பல்கலைக் கழக தொழில்நுட்ப பீட வளாகம், யாழ். பல்கலைக் » 21





# மணிவிழா வாழ்த்து

Congratulations

யா/விக்ரோறியாக் கல்லூரியின்
மணிவிழாக் காணும் ஆசிரியர் விக்ரோறியன்

## திருமதி இந்திரா தவநாயகம்

B.A(Hons),PGDE, SLTS - I)

**சேவை விவரம் முதல் நியனம் -**
05.08.1984 - 14.08.1989 (மா/இறத்தோட்ட இந்து ம.வி)
15.08.1989 - 26.02.2019 (யா/விக்ரோறியாக் கல்லூரி)

மணிவிழா நாயகி
விக்ரோறியன் இந்திரா
விக்ரோறியா சாம்ராச்சியத்தின் பொக்கிசமாய்
நிர்வாகத்தின் கலங்கரை விளக்கமாய்
பண்பாட்டின் அடையாளமாய்
மதிப்பார்ந்த ஆசானாய்
ஆவணப்படுத்தலில் ஆணிவேராய்
பல்துறை ஆளுமை கொண்ட
புதுமைப் பெண்

இவர் எமது கல்லூரியின் பழைய மாணவி. தனது கல்விச் சேவையில் முப்பது வருடங்களை எமது கல்லூரிக்காய் அர்ப்பணித்தவர். அவரை வாழ்த்துவதில் பெருமிதம் கொள்கின்றோம்.

எமது கல்லூரியில் 15.08.1989 இல் ஆசிரியராகப் பதவியேற்று 30.08.2006 இல் இருந்து பகுதித்தலைவராகவும், 01.01.2015 ஆம் ஆண்டில் உபஅதிபராகவும் 01.01.2016 - 31.12.2016 வரை பிரதி அதிபராகவும் பணியாற்றி 30 வருடகால ஆசிரியப்பணியை நிறைவு செய்து சேவையிலிருந்து ஓய்வுபெறும் அவரின் அர்ப்பணிப்பான சேவையைப் பாராட்டுவதுடன் ஓய்வுக்காலம் மேலும் சிறப்புற மனமுவந்து வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:-
**ஆசிரியர் நலன்புரிக் கழகம்,**
**யா/விக்ரோறியாக் கல்லூரி, சுழிபுரம்.**

(CS/23619) (11,17)

## 7ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 28 . 06 . 1961



மறைவு 27 . 02 . 2012

திதி: 12.03.2019

### அமரர் இராசையா ஜெயகோபால்

(தொழில்நுட்ப உத்தியோகத்தர்,
யாழ்.பல்கலைக்கழக பௌதீகவியற்துறை விஞ்ஞானபீடம்)

என்றும் நீங்கா நினைவுகளுடன் உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திப்போம்

தொல்புரம் மத்தி,
சுழிபுரம்.

குடும்பத்தினர்.

(CS/23611) (II. 17)


ஆங்கிலத்திற்கு No.1 பயிற்சி மையம்

# IELTS

- Latest training materials. ( Book 12 )
- Skills development in all four categories.
- Personalised guidance and ample of opportunities to interact with the lecturer.

சித்தியடைவதற்கான 100% உத்தரவாதம்

## IELTS Life Skills

திருமணம் செய்து நிரந்தர விசாவில் UK செல்பவர்களுக்கானது, புதிய நடைமுறை-க்கு அமைவாக இலகுவான முறையில் UK அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆங்கில பரீட்சை

**British Council'S IELTS Registration Centre**

கடந்த வருடமும் British Council இன் விருது பெற்ற IELTS பரீட்சைக்கு தனித்துவமான நிறுவனம்

புதிய நடைமுறைகள் பற்றி அறிய http://www.itdmi.com/ls

## Spoken English

| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சுன்னாகம் | கிளிநொச்சி |
| --- | --- | --- | --- |
| Mon,Wed,Fri 8:00 a.m Sat, Sun 3.00 p.m. | Tue, Thu 3.30 p.m. Sat, Sun 3:00 p.m. | Sat, Sun 11.30 a.m. Tue,Thu 9:00 a.m | Sat, Sun 11 a.m |

பதிவுகளினை முற்கூட்டியே உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்

**DMI COMPUTER EDUCATION**

DMI COMPUTER EDUCATION

| | | | | |
| --- | --- | --- | --- | --- |
| No.113, யாழ்ப்பாணம் Tel.: 021-222 4403 | M.M.V. வீதி, நெல்லியடி Tel.: 021-226 3470 | No. 174 சாவகச்சேரி Tel.: 021-227 0779 | No. 130 K. K. S வீதி சுன்னாகம் Tel.: 021-224 1970 | No.19, A9 வீதி கிளிநொச்சி Tel.: 021-228 5656 |

சண்டிலிப்பாய் - சீரணிச் சந்தி Tel : 021 225 6666 Hotline : 0777 17 35 17


## 17ஆம் ஆண்டு நினைவலைகள்

உதிப்பு 20 . 12 . 1935



உதிர்வு 03 . 02 . 2002

### அமரர் சின்னத்தம்பி பாலசுந்தரம்

திதி : 27.02.2019 நவமி

சிலர் அன்பை வார்த்தையால் உணர்தலாம்
சிலர் அன்பை உணர்வுகளாய் உணர்தலாம் - ஆனால்
சிலர் அன்பு புரியாது - அதைக்
காலம் உணர்த்தும் போது தான் கண்கள் கலங்கும்
நாம் கலங்கி பதினேழு ஆண்டுகள்
ஓடி மறைந்ததே அப்பா!

சங்கத்தானை, சாவகச்சேரி.

குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



கடந்த 28.01.2019 திங்கட்கிழமை அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத்தலைவர்

### அமரர் சுப்பையா கனகரத்தினம்

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (27.02.2019) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்தி பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அரியாலை கிழக்கு, அரியாலை.
077 878 2317

(CS 23613)(4.17)

குடும்பத்தினர்.


# CANADA , USA
## study & work visa

**Minimum Qualification O/L**

- VISA Consulting and Online form filling.
- குறைந்த செலவில். விரைவில் பயணம்.
- Bank Balance 100%
- குறைந்த தகைமை O/L

**Swiss, France**
செல்ல வழிகாட்டல்

**Royal Visa Consultants & Education Service**

No.128, Jampettah Street,
Colombo -13
Email: rvces_consultants@yahoo.com

Haarini : 077 791 1649
Office : 0113 020 892

## கண்ணீர் அஞ்சலி



22.02.2019 ஆம் திகதி இறைபதம் அடைந்த எமது பிரதேச செயலகத்தில் கிராம உத்தியோகத்தராக கடமையாற்றும் **செல்வி இ.ஜெனுயா** அவர்களின் அன்புத் தந்தையார்

**விசுவாசம் இராசரத்தினம்**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பிரதேச செயலரும் உத்தியோகத்தர்களும்**
**ஊழியர் நலன்புரிச் சங்கம், பிரதேச செயலகம், ஊர்காவற்றுறை.**

## MASSIVE VEHICLES AUCTION SALE



**05th of March**

LOLC VEHICLE FACILITY CENTRE
STATION ROAD, VAIRAVAPULIYANKULAM,

**VAVUNIYA**

Thimothi - 0766 58 23 29
Nelum - 0245 11 81 81

**On View – 02nd, 03rd & 04th March**

(Please refer the Udayan On 01st of March 2019 For the Full List Of Vehicles)

LOLC FINANCE

**SCHOKMAN & SAMERAWICKREME**
*One Country. One Auctioneer. Celebrating 127 Years of Service Excellence.*

Head Office & Showroom
24, Torrington Road, Kandy.
Tel: 081 2227593
Fax: 081 2224371
Email: schokmankandy@slt.lk

City Office & Showroom
No.6A, Fairfield Gardens, Colombo 8
Tel: 011 2502680, 2585408
Tel/Fax: 011 2588176
Email: schokman@samera1892.com

Web: www.sandslanka.com

## மஹா சக்தியுள்ள வசிய மாந்திரிகம்

எதையும் எதையும் அறியாத மாந்திரிகர்களிடம் ஏமாறாதீர்கள், என்னுடைய வசிய மாந்திரிகத்தினால் நான் அவர்களுக்கு சவால் விடுகிறேன்.

★காதலால் நீங்கள் வேதனைப்படுகிறீர்களா?
★காதலனால் - காதலியால் கைவிடப்பட்டவரா?
★பெற்றோர் விருப்பமின்மையா?
★கணவன் மனைவிக்கிடையில் முரண்பாடா?
★வேலைத்தளத்தில் பிரச்சினையா?
★காணி, சொத்து தொடர்பான பிரச்சினையா?

- இரகசியம் பேணப்படும்.
- நம்பிக்கை-உத்தரவாதம் கடைப்பிடிக்கப்படும்.
- உங்கள் உள்ளங்களில் எழும் பிரச்சினைகளை என்னிடம் தெரிவியுங்கள்.
- நேரடியாக வரமுடியாதவர்களுக்கு பதிவுத்தபால் மூலம் செய்து அனுப்பப்படும்.

ஆண், பெண் வசியம்

அனைத்து வசிய மாந்திரிகங்கள் மூலம் மக்களின் மனம் கவர்ந்தவர்
**வேலு ராஜேஸ்வரி** அவர்கள்
மாத்தளை.

**0778 432 602 / 075 302 4239**

என்னைத் தொடர்புகொள்பவர்களுக்கு ஒருநாளும் தோல்வியில்லை.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

திருமதி
**சிவக்கொழுந்து ஆறுமுகம்**



தோற்றம் 10 . 02 . 1932
மறைவு 20 . 02 . 2018

நீங்கள் இவ் உலகை விட்டு நீங்கி
ஆண்டு ஒன்று சென்றாலும்
எம்மை விட்டு நீங்காத உங்கள் நினைவுகள்
என்றும் பசுமையாகவே இருக்கும்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகின்றோம்

இல.3, பண்டாரக்குளம் மேற்கு வீதி,
நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்.
077 477 1218

குடும்பத்தினர்.

(CS 23603)(4.17)

## பெண் வேலையாள்கள் தேவை

மல்லாகத்தில் இயங்கும்
எமது தொழிற்சாலைக்குப்
பெண் வேலையாள்கள் தேவை.
(வயதெல்லை 18 - 30 வரை)
வேலைநேரம் - 7.30 am 5.30pm

**076 118 4010**

(CS/23560)(11,17)

## ES Printers

GRAPHIC design

2019 இற்கான அனைத்து வகையான கலண்டர்களையும் குறைந்த விலையில் செய்து பெற்றுக்கொள்ள நாடுங்கள்.

அனைத்தும் தனித்துவமான கணினி வடிவமைப்புடன்



357. கஸ்தூரியார் வீதி.
யாழ்ப்பாணம்.
021 492 7471 / 021 492 7472
esprintersjaffna@gmail.com

நவீன சந்தை, முதலாம் மாடி, சாவகச்சேரி.
021 222 7432

## சம்பத் சவிலிய

மகளிர் உங்களின் இன்றைய உத்வேகத்துடன் - பலம் பொருந்திய நாளையை உருவாக்கிட



### மகளிர் உங்களுக்காக உருவாக்கப்பட்ட விசேட வியாபாரக் கடன்

நீங்களும் சொந்த வியாபாரம் ஒன்றை ஆரம்பிக்க ஆவலுடன் காத்திருக்கின்றீர்களா? அல்லது நீங்கள் ஆரம்பித்த வியாபாரத்தை மேலும் மெருகூட்டும் எதிர்பார்ப்பில் உள்ளீர்களா? அதற்கு தேவையான பலத்தை பெற்றுக்கொடுப்பதற்காகவே சம்பத் வங்கி சவிலிய வியாபாரக் கடன் வசதியை மகளிர் உங்களுக்காக அறிமுகப்படுத்தியுள்ளது. பிற்போடப்பட்ட உங்கள் வியாபாரக் கனவை இப்போதே நனவாக்கிடுங்கள். உங்கள் நிதியியல் தேவைகளை நாம் சந்திக்கின்றோம். நீங்களும் உங்கள் வியாபாரத்தில் வெற்றிகொள்ளுங்கள்.

- வியாபாரத்திற்கு தேவையான வாகனங்கள் மற்றும் இயந்திரங்களுக்கு போட்டிமிக்க வட்டி வீதத்தின் கீழ் லீசிங் வசதி.
- வியாபாரத்தை ஆரம்பிக்க மற்றும் மேம்படுத்த தேவையான பயிற்சிகள்
- சம்பத் விஷ்வ சேவைக்கு முதல் வருடத்திற்கான வருடாந்த கட்டணம் இல்லை.
- சம்பத் கடனட்டைக்கு ஆரம்ப கட்டணம் இல்லை.

**சம்பத் வங்கி**
எதிர்காலத்தின் முன்னோடிகள்

0112 30 30 50   www.sampath.lk

# 31 ஆம் நாள் நினைவும் நன்றி நவிலலும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம் 14 . 08 . 1943

மறைவு 29 . 01 . 2019

கடந்த 29.01.2019 இல் வல்வெட்டித்துறையில் சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி

## திருமதி சாந்தமூர்த்தி கமலவதனா

அவர்களின் மரணச் செய்தி கேட்டு அவரின் இறுதிச் சடங்கில் பங்கு பற்றிய அனைவருக்கும் சகல வழிகளிலும் எமக்கு உதவி புரிந்த அனைத்து நல் உள்ளங்களுக்கும் அலைபேசி மூலம் தொடர்பு கொண்ட அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு, நாளை (28.02.2019) வியாழக்கிழமை அதிகாலை 5.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் தொடர்ந்து இடம்பெறும் சபிண்டீகரண கிரியைகளிலும் கலந்து கொள்வதோடு மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று இந்நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.**

**காந்தி வீதி,**
**நெடியகாடு,**
**வல்வெட்டித்துறை.**

**கணவர் : ப.சாந்தமூர்த்தி**
**மகள்கள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

(AC 965)(14.17)

---

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



அன்னை மடியில் 08 . 02 . 1950

ஆண்டவன் அரவணைப்பில் 28 . 01 . 2019

## அமரர் அருளம்பலம் கமலசேகரம்

(இளைப்பாறிய உத்தரவு பெற்ற நில அளவையாளரும், நீதிமன்ற ஆணையாளரும்)

திதி : 27.02.2019

எம்மை எல்லாம் நீங்காத நினைவில் தவிக்கவிட்டு
எம்மை விட்டுப் பிரிந்து முப்பத்தொராம் நாள் ஆகிவிட்டதே அப்பா !
இறைவனின் பாதடியில் நிரந்தர ஓய்விற்காக
சென்ற எங்கள் அன்புத் தெய்வமே அப்பா !
முப்பத்தொரு நாள் அல்ல ஓர் ஆயிரம் ஆண்டுகள் சென்றாலும்
நாம் உங்களை மறவோம் அப்பா !
தாங்காத துயரோடு தவிக்கின்றோமே அப்பா !
தரணியில் உங்களை எப்போ காண்போம் அப்பா !
உங்கள் பணியைத் தொடர இனி யார் வருவாரோ ?
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

அன்னாரின் ஆத்மசாந்தி கூட்டுப்பிரார்த்தனை நிகழ்வுகள் 02.03.2019 சனிக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் காளிகோயில், பலாலிவீதி, உரும்பிராய் "காமாட்சி அம்பாள் மண்டபத்தில்" நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

அத்துடன் எமது துயரில் நேரடியாகப் பங்கு கொண்டவர்களுக்கும் எல்லா வகைகளிலும் எமக்கு உதவியவர்களுக்கும் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் மற்றும் அனைத்து உள்ளங்களுக்கும் மனமார்ந்த நன்றிகள்.

**"பிரபை மஹால்"**
**உரும்பிராய் சந்தி,**
**உரும்பிராய்.**

(CS 23617)(14.17)

**மனைவி : நாகப்பிரபா - 0094 21 223 0813**
**பிள்ளைகள் : சோபனா அன்ரனி ஞானறால் 0094 223 0813**
**: மோகனா முகுந்தன் 0044 208 5821 240**

---

## தவறிவிட்டது

தாவடி, மானிப்பாய் வீதியில் 22.02.2019 வெள்ளிக்கிழமை ரவலிங் பாக் ஒன்று தவறவிடப்பட்டுள்ளது. இதனைக் கண்டெடுத்தவர்கள் கீழ் உள்ள தொலைபேசி இலக்கத்துக்கு தொடர்பு கொள்ளவும்.
(தகுந்த சன்மானம் வழங்கப்படும்)

**077 059 1767**

(CS 23610)(14.17)

## தேவை

**சிற்றுண்டி** செய்வதற்கு ஆள் தேவை.
ஆண் / பெண் இருபாலாரும்
யாழ்ப்பாணம்.

**021 222 1775 / 076 656 6981**

## நாகபூஷணி திருமண சேவை

மிகப் பொருத்தமான மணமக்கள்
ஜாதகங்கள்
உடன் தரப்படும்.

**257, பலாலி வீதி, கந்தர்மடம்,**
**யாழ்ப்பாணம்.**
**021 222 9306/077 138 7596**

(CS 23615)(14.17)

---

"ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ"

## மரண அறிவித்தல்

### திருமதி யோகேஸ்வரி சின்னத்துரை



மூளாயைப் பிறப்பிடமாகவும் இல. 5, கலட்டி அம்மன் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி யோகேஸ்வரி சின்னத்துரை 24.02.2019 ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரையின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற தயாகரன் மற்றும் ராஜினி, சுபாகரன், சதீஸ்கரன், தயந்தினி, நிஷாந்தினி ஆகியோ ரின் அன்புத் தாயாரும் வாசுகி, சிவராஜன், பிரபா, திருமகள், தபேஸ், சந்திரகாசன் ஆகியோரின் அன்பு மாமியாரும் தவமணிதேவி, இராஜேஸ்வரி, சுலோசனா, ஞானேஸ்வரி, கிரிஷாதேவி, காலஞ்சென்றவர்களான இரத்தினசபாபதி, சிவசுப்பிரமணியம், இர்ாமகிருஸ்ணன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் துயந்தியா, மகீசன், நதுர்ஷன், தர்மிதன், தனுசியா, உமாசுதன், காலஞ்சென்ற அபிராஜ் மற்றும் ஹரிஸ், கிஷன், மிதுஷா, துஷாரகா, தரணியா, சரபின், ரிகேஷ், தாட்ஷாயினி, பிரியவர்த்தன், பேருஜன், ஜெரூபினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.02.2019) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


**இல. 5, கலட்டி அம்மன் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS 23590)(15.17)

---

## மரண அறிவித்தல்



மண்ணக வாழ்வில் 25 . 09 . 1940

விண்ணக வாழ்வில் 23 . 02 . 2019

### வீரவாகு கபிரியேல் கனகசிங்கம்

**" நான் நல்லதொரு போராட்டத்தில் ஈடுபட்டேன். என்ஓட்டத்தை முடித்துவிட்டேன். விசுவாசத்தை காத்துக்கொண்டேன் "** (2 திமொத்தேயு 4:7)

யாழ். வீதி உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வீரவாகு கபிரியேல் கனகசிங்கம் கடந்த (23.02.2019) சனிக்கிழமை கர்த்தருக்குள் நித்திரை அடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சாமுவேல் பொன்னையா வீரவாகு - மேபல் நேசரத்தினம் தம்பதியினரின் சிரேஷ்ட புத்திரனும் ஜெரின் புவனேஸ்வரியின் அன்பு கணவரும் அருட்திரு V.N தர்மகுலசிங்கம், ஜோயல் ராஜசிங்கம் (ஜேர்மனி) காலஞ்சென்றவர்களான V.G பாலசிங்கம் எலிசபேத் ஜெயராணி, ஜோய்ஸ் அதிசயராணி ஆகியோரின் அன்பு சகோதரனும் மேரி தேவபுஷ்பம், ராஜவினோதினி (ஜேர்மனி), தவராஜா (பிரான்ஸ்) மற்றும் காலஞ்சென்றவர்களான லில்லி மலர்ராணி, விஜயதாசன் ஆகியோரின் மைத்துனரும் பொறியியளாலர் கலாநிதி வி.நோயல் விஜயரூபன் (U.S.A ) அருட்பணி வி. டானியல் ஜெயரூபன் (ஆன்மீககுரு -ஆசிரியர்-சென். ஜேன்ஸ்கல்லூரி) ஜஸ்ரின் ஜெபதர்ஷன் (பிரான்ஸ்) ஆகியோரின் தாய்மாமனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (27.02.2019) புதன்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு யாழ். வீதி உடுப்பிட்டியில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:குடும்பத்தினர்.**

**யாழ். வீதி, உடுப்பிட்டி**

**021 790 2509, 077 786 5512**

## கண்ணீர் அஞ்சலி

தேசிய கல்வி நிறுவக கல்வி டிப்ளோமா
யாழ்ப்பாணப் பிராந்திய நிலைய விரிவுரையாளர்
திருமதி சித்திராதேவி ஞானசுப்பிரமணியம்
அவர்களின் அன்புத் தாயார்.

**திருமதி பரமேஸ்வரி சுப்பிரமணியம்**

அவர்கள் 23.02.2019 இறைபதம் எய்தியமையிட்டு துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.



**தேசிய கல்வி நிறுவக யாழ்ப்பாண பிராந்திய நிலைய இணைப்பாளர், விரிவுரையாளர்கள், ஆசிரிய மாணவர்கள்.**

## மரண அறிவித்தல்

### கதிரவேலு துரைசிங்கம் (துரை)



சண்டிலிப்பாய் மேற்கைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் அத்தியடியை வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேலு துரைசிங்கம் நேற்று 26.02.2019 காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரவேலு - சோதிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - சின்னம்மா தம்பதிகளின் மருமகனும் சரோயினி தேவியின் பாசமிகு கணவரும் சுவஸ்திகா, தீபன், அகீபன், மயூரன் (யாழ்.இந்துக்கல்லூரி,கணிதப்பிரிவு 2019) ஆகியோரின் தந்தையாரும் இந்துஜனின் (விவசாய திணைக்களம், கிளிநொச்சி) மாமனாரும் ஞானேஸ்வரி, காலஞ்சென்ற தவமணி மற்றும் சத்தியவதனா (ஆசிரியை - சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி) ஆகியோரின் சகோதரனும் ராகினி தேவி, காலஞ்சென்ற ஸ்ரீகாந்தன் ஆகியோரின் மைத்துனரும் கோபிநாத், பிரஜீனா, சுதாகர், வாகீசன், கேதீசன், ரதீசன், சுபீசன், நவநீதா, மதுரங்கன் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.02.2019) புதன்கிழமை அத்தியடியில் உள்ள அவரது இல்லத்தில் முற்பகல் 11.00 மணியளவில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தீபன் - மகன் - 077 6685083.**
**077 2717406**

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 23623/15/18)


## மரண அறிவித்தல்கள்

### செல்லையா பாலசுப்பிரமணியம்

காரைநகர் ஆயிலியை பிறப்பிடமாகவும் கூமாங்குளம் வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா பாலசுப்பிரமணியம் 25.02.2019 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா - விசாலாட்சி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற ஆறுமுகம் - மீனாட்சி தம்பதியரின் அன்பு மருமகனும், சவுந்தராம்பிகையின் அன்புக் கணவரும், வேலுப்பிள்ளை (சோதி), அன்னலட்சுமி, காலஞ்சென்ற லட்சுமணன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், பாலரஞ்சினி (ஜேர்மனி), பாலகுமார் (கனடா), பாலகுமாரி (வவுனியா) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஆறுமுகநாதன் (ஜேர்மனி), உதயா (கனடா), குறிஞ்சிராசா (வவுனியா) ஆகியோரின் அன்பு மாமனும், பிரவீன், பிரதாப், சங்கவி, அச்சனா, யாதவன், கயானி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 28.02.2019 வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கூமாங்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.



பிறப்பு 27.07.1941 இறப்பு 25.02.2019

**கூமாங்குளம், வவுனியா.**

தகவல் : குடும்பத்தினர்.

**077 944 9620**

(cs483) (13.17)

### திருமதி சுலோசனா யோகராசா



மீசாலை கிழக்கை பிறப்பிடமாகவும் இணுவில் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுலோசனா யோகராசா (இளைப்பாறிய ஆசிரியை - யா/இராமநாதன் மகளிர் கல்லூரி) நேற்று (26.02.2019) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குருசாமி - மகேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கந்தையா - மாணிக்கம் தம்பதியின் மருமகளும் கந்தையா யோகராஜாவின் (இளைப்பாறிய இ.போ.ச. வடக்கு நிர்வாக உத்தியோகத்தர்) அன்பு மனைவியும் கிருத்திகன், பிரியதர்சன் ஆகியோரின் தாயாரும் வாகினி, கல்யாணி, ஆகியோரின் மாமியாரும் சுசீலாவின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (26.02.2019) செவ்வாய்க்கிழமை பி.ப 2.00 மணிக்கு இடம்பெற்று தாவடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**
**மகன் பிரியதர்சன்- 077 811 9634**

## பொறிவெடியில்...

தில் மீன் பிடிக்கச் சென்ற அவர் மானுக்காக வைக்கப்பட்டிருந்த பொறி வெடியில் அகப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அம்பாள்புரத்தைச் சேர்ந்த 34 வயதுடைய சுரேஸ்குமார் என்பவரே உயிரிழந்துள்ளார்.

வவுனிக்குளம், 6ஆம் கட்டையில் வவுனிக்குளத்தின் அலைகலைப் பக்கம் இந்தச் சம்பவம் நேற்று மாலை 4 மணியளவில் நடந்துள்ளது. மாலை 6 மணிக்குப் பின்னர் அந்தப் பகுதிக்குச் சென்றவர்களே சுரேஸ்குமாரை மீட்டுள்ளனர்.

அவர் உடனடியாக நோயாளர் காவு வண்டி மூலம் மல்லாவி மருத்துவமனைக்குக் கொண்டு சென்றுள்ளனர். எனினும் அவர் முன்னரே உயிரிழந்துவிட்டார் என்று மருத்துவர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

உயிரிழந்தவரின் உடல், உடற்கூற்றுப் பரிசோதனைக்காக மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மல்லாவிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ-105)

## கண்ணீர் அஞ்சலி

தென்மராட்சி பிரதேச செயலகத்தில் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும் **சு. சச்சிதானந்தம்** அவர்களின் பாசமிகு தாயார்

**திருமதி அங்கயற்கண்ணி சுப்பிரமணியக்குருக்கள்**

அவர்கள் கடந்த 25.02.2019 திங்கட்கிழமை காலமானார். அன்னாரின் பிரிவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

**பிரதேச செயலக ஊழியர் நலன்புரிச்சங்கம்**
**தென்மராட்சி, சாவகச்சேரி.**

## குதிரை வண்டி ஓட்டுநர்கள் தேவை

குதிரை வண்டி கொண்டாட்டங்களுக்கு வாடகைக்கு உண்டு. இதற்கு ஓட்டுநர்கள் (சாரதி) தேவை. ஓட்டுநர்களுக்கு பயிற்சி வழங்கப்படும். சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

(CS 23551) (14.17)

தொடர்பு:
**077 560 9098/076 262 2236**

## நீதிவானை...

உரையாடினர் என்று தெரிவிக்கப்பட்டது. பின்னர் அங்கிருந்து இருவரும் வெளியேறியுள்ளனர். அவர்களில் ஒருவர் நீதிச் சேவை ஆணைக்குழுவால் பணி நிறுத்தப்பட்டவர் என்றும் அதற்கான ஆவணங்களை அவர் வைத்திருந்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

மன்னார் நீதிமன்றப் பொலிஸார் மன்னார் பொலிஸாருக்குத் தகவல் வழங்கினர். மன்னார் பொலிஸார் குறித்த இருவரையும் கைது செய்து விசாரணைக்கு உட்படுத்தினர். நேற்று நீதிமன்றில் முற்படுத்தினர். விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. (த-56)

## தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் கட்டட ஒப்பந்த நிறுவனத்திற்கு கணக்காளர் (Acccountant) மற்றும் களஞ்சியக்காப்பாளர் (Store Keeper) தேவை. **தகைமை A/L சித்தி**

தொடர்பு - 076 316 5730, 077 592 5371
Email - careers@decon.lk

## மரண அறிவித்தல்

மலர்வு 16 . 05 . 1930



உதிர்வு 24 . 02 . 2019

### திருமதி ரேவதி நாகநாதி


உடுப்பிட்டியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ரேவதி நாகநாதி கடந்த (24.02.2019) ஞாயிற்றுக்கிழமை சிவபதம் அடைந்தார்

அன்னார் காலஞ்சென்ற வள்ளிநாகநாதியின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற கனகராசா மற்றும் தேவராசா, நாகம்மா (இந்திரா) அழகம்மா, ஜெனிதா ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற மான்குட்டி மற்றும் சுசீலா, நிரஞ்சினிதேவி, வஸ்தலகுமாரன், சிவராசா சிறீகாந்தன் ஆகியோரின் அருமை மாமியாரும் சின்னமணி நல்லதம்பி, பசுவம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.02.2019) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வல்லை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**Proctess Lane, உடுப்பிட்டி**

தகவல்:
குடும்பத்தினர்.



# நம்பிக்கையை கைவிடக்கூடாது

உலக அளவில் பூனைகளுக்கான குத்துச் சண்டைபோட்டிநடைபெற்றது. அனைத்து நாட்டு பூனைகளையும் வீழ்த்தி அமெரிக்கப் பூனை முன்னனியில் இருந்தது.

இந்தியப் பூனை, பாகிஸ்தான் பூனை, ஜெர்மனி பூனை, ஆஸ்திரேலியப் பூனை இப்படி அத்தனை நாட்டு பூனைகளும் அமெரிக்கப் பூனையிடம் அடிவாங்கி சுருண்டு கிடந்தன.

அமெரிக்கா பூனையல்லவா?

பாலும். இறைச்சியும் அளவிற்கு அதிக மாக உண்டு கொழு.கொழுவென இருந்தது.

கடைசி சுற்று....

இந்தச் சுற்றில் அமெரிக்கப் பூனையிடம் சோமாலியா நாட்டுப் பூனை மோதப்போவதாக அறிவித்தார்கள்.

பார்வையாளர்களுக்கு வியப்பு!

சோமாலியா நாட்டுபூனை நோஞ்சானாக மெலிந்து நடக்கவே தெம்பற்று, தட்டுத்தடுமாறி முக்கி முணங்கி மேடையேறியது. இதுவா அமெரிக்கப் பூனையிடம் மோதப்போகிறது? பார்வை யாளர்கள் கேலியும் கிண்டலுமாய் சிரித்தார்கள்.

போட்டி தொடங்கியது.

அமெரிக்கா பூனை அலட்சியமாக சோமாலியா பூனையின் அருகில் நெருங்கியது. சோமாலியா பூனை முன்னங்காலை சிரமப்பட்டு தூக்கி.... ஒரேஅடி!

அமெரிக்க பூனைக்கு மண்டைக்குள் ஒரு பல்புப்பளீச்என்றுஎரிந்துபடாரெனவெடித்து சிதறியது. கண்கள் இருண்டு மயங்கி சரிந்தது. பார்வையாளர்கள் அதிர்ச்சியில் வாயடைத்து நின்றார்கள்.

சற்று நேரம் சென்றபின், மெதுவாக கண் விழித்து பார்த்த அமெரிக்கப் பூனைக்கு ஒன்றுமே புரியவில்லை...

சோமாலியா பூனையின் கழுத்தில் தங்கப்பதக்கம் தொங்கி யது. போட்டியில் வென்றதற்காக சோமாலியா பூனையை எல்லோரும் கைகுலுக்கி பாராட்டிக் கொண்டி ருந்தார்கள்.

மெதுவாக எழுந்து....


சோமாலியா பூனையின்அருகில் சென்று இவ்வளவு பலசாலி யான என்னை நோஞ்சான் பூனையான நீ வீழ்த்தியது எப்படி? என்று கேட்டது அமெரிக்கப் பூனை.

அமெரிக்கா பூனையின் காதில் மெதுவாக சோமாலியா பூனை சொன்னது....

"நான் பூனையே இல்லை, புலி! பஞ்சத்தில் இப்படியாகி விட்டேன்".

பாலும்,கறியும் உண்டாலும் பூனை பூனைதான்! பட்டினி கிடந்தாலும் புலி புலிதான்! எல்லோருக்கும் நேரம் எப்போதும் கைகொடுப்பதில்லை ... நம்பிக்கையோடு செயற்படுங்கள் வெற்றி உங்களுக்குத்தான்.

## வழிகாட்டுவோம்




## மாம்பழம்

குண்டு குண்டு மாம்பழம்
யாழ்ப்பாணத்து மாம்பழம்
வண்டு துளைத்த மாம்பழம்
உண்டால் இனிக்கும் மாம்பழம்

கன்னம் போலச் சிவப்பு
கண்ணைப் பறிக்கும் வனப்பு
கற்கண்டு போல இனிப்பு

தங்க நிறத்து மாம்பழம்
உங்களுக்கு வேண்டுமா?
வெட்டி வெட்டி தின்னலாம்
பங்கு போட்டுக் கொள்ளலாம்





## ஆங்கிலம் கற்போம்


Head - தலை
Eyes - கண்கள்
Ears - காதுகள்
Nose - மூக்கு
Brain - மூளை
Heart - இதயம்
Lung- நுரையீரல்
Mouth - வாய்
Neck - கழுத்து
Shoulder - தோள்
Fingers - விரல்கள்
Leg- கால்
Skin - தோல்
Hair - முடி
Face - முகம்
Lip - உதடு
Cheek - கன்னம்





## பற்பசை உருவான வரலாறு

சாப்பிடும் உணவுப் பொருட்களால் கிருமிகள் வளர்ந்து, பற்களைச் சேதப்படுத்துவதை கி.மு. 5 ஆயிரம் ஆண்டிலேயே எகிப்தியர்கள் அறிந்திருந்தனர். அதனால் பற்களைச் சுத்தம் செய்வதற்குப் பல விதத்தில் ஆய்வுகளை மேற்கொண்டிருந்தனர். பாரோ மன்னர்கள் சாணத்தின் சாம்பல், பொடித்த முட்டை ஓடுகள், பால் வடியும் குச்சிகள், மாவுக் கல் போன்றவற்றைப் பல் துலக்கப் பயன்படுத்தினர்.



வாஷிங்டன் வென்ட்வொர்த் ஷெஃப்பீல்ட்

ரோமானியார்களும் பொடித்த சிப்பி ஓடுகள், கரித்தூள், மரப் பட்டைகள் போன்றவற்றை வைத்துப் பல் துலக்கினார்கள். அந்தக் கால உரோம மருத்துவர்கள் மனிதர்களின் சிறுநீரில் பற்களைச் சுத்தம் செய்யும் உப்பும் அமிலமும் இருப்பதாகச் சொல்லி, அதையும் பயன்பாட்டில் வைத்திருந்தனர்.

கி.மு. 5ஆம் நூற்றாண்டில் இந்தியாவிலும் சீனாவிலும் கரித்தூள், சாம்பல், வேப்பங்குச்சி, ஆலங்குச்சி போன்றவற்றை வைத்துப் பல் துலக்க ஆரம்பித்தனர்.

கி.பி. 4ஆம் நூற்றாண்டில் சாம்பலும் கரித்தூளும் பற்களுக்கு உகந்தது அல்ல என்ற முடிவுக்கு வந்தார்கள் எகிப்தியர்கள். அதனால் புதினா, உப்பு, மிளகு உட்பட ஏராளமான பொருள்களை இடித்து, முதல் பற்பொடியை உருவாக்கினார்கள். அதன் செய்முறையையும் எழுதி வைத்தனர்.


கி.பி. 9ஆம் நூற்றாண்டில் பாரசீகத்தைச் சேர்ந்த அறிஞரும் கலைஞருமான ஸிர்யாப், எகிப்தியர்களின் பற்பொடி தயாரிக்கும் முறையை வைத்து, ஐரோப்பாவில் முதல் பற்பொடியைத் தயாரித்தார். நறுமணம் மிக்க இந்தப் பற்பொடியில் பல் துலக்கிய பிறகு புத்துணர்ச்சியும் கிடைத்தது. ஸிர்யாப் பற்பொடிதான் உலகில் ஏற்றுக்கொள்ளப்பட்ட முதல் பற்பொடி. இவரும் தனது தயாரிப்பு முறையை ரகசியமாகவே வைத்திருந்ததால் அவருக்குப் பிறகு அந்தப் பற்பொடி காணாமல் போனது.

கி.பி. 18ஆம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் படிகாரம், லவங்கப்பட்டை, பாக்குத்தூள் போன்றவற்றைச் சேர்த்துப் பற்பொடிகள் தயாரிக்கப்பட்டன. இந்தப் பற்பொடியில் தண்ணீர் சேர்த்து மக்கள் பயன்படுத்த ஆரம்பித்தபோது, 1850ஆம் ஆண்டில் பற்பசை உருவானது. இது ஜாடிகளில் அடைத்து விற்கப்பட்டது. 1873ஆம் ஆண்டு நியூயார்க்கைச் சேர்ந்த கோல்கேட் நிறுவனம், பெரிய அளவில் பற்பசை தயாரிக்கும் தொழிலில் இறங்கியது.

இங்கிலாந்தைச் சேர்ந்த வாஷிங்டன் வென்ட்வொர்த் ஷெஃபீல்ட் என்ற பல் மருத்துவர் கால்ஷியம் புளோரைடு வைத்து பற்பசையைத் தயாரித்தார். இவரே 1892ஆம் ஆண்டு குழாய்க்குள் பற்பசையை அடைத்து விற்கும் முறையையும் உருவாக்கினார். ஆனால் ஷெஃப்பீல்ட் தன்னுடைய பற்பசைக்கும் குழாய்க்கும் காப்புரிமை பெறுவதற்குள் கோல்கேட் நிறுவனம் குழாய் பற்பசைகளைப் பெருமளவில் விற்பனைக்குக் கொண்டுவந்துவிட்டது. இன்றுவரை ஷெஃபீல்டின் பற்பசைத் தயாரிப்பு முறையே பெருமளவில் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக கரியால் பல் துலக்கி வந்ததை ஆரோக்கியம் குறைவு என்று பற்பொடிகளும் பற்பசைகளும் வந்தன. இன்று கரியும் உப்பும் நல்லது என்று பற்பசைகளில் சேர்த்துவிட்டனர்.

எதிர்கால நிலை,..



மரங்களை அழிப்பது தொடர்ந்தால் வருங்கால சந்ததியின் எதிர்காலம் இப்படியாகும்.....




சிறிய அளவிலான 'எயார் கூலர்கள்' அறிமுக மாகியுள்ளன. இவை 900 ரூபாவுக்கு விற்பனையாகின்றன.

twitter

SMILEY AZAM @AZAM_TWITZ

முற்பகலில் நம் வண்டியை வெயிலில் விட்டுவிட்டு பிற்பகலில் நம் வண்டியை எடுக்கும் போது சூடு தாங்க முடியாமல் பின்விளைவுகள் நன்றாகவே விளையும்!!!!










## 2 நாள்களில் 5 கோடிக்கு மேல் வசூல் பெற்ற எல்.கே.ஜி.!

எல்.கே.ஜி.படம் வெளிவந்த இரண்டு நாள்களில் 5 கோடி ரூபாய்க்கு மேல் வசூல் செய்துள்ளது. ஆர்.ஜே பாலாஜியின் நடிப்பில் கடந்த 22ஆம் திகதி வெளிவந்த படம் எல்கேஜி. அரசியலை மையக் கருவாகக் கொண்ட இந்தப் படத்தை கே ஆர்.பிரபு இயக்கியுள்ளார். இந்தப் படத்தில் பிரியா ஆனந்த், ஜி.கே. ரித்தேஷ், நாஞ்சில் சம்பத் உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர். இந்த நிலையில் இந்தப் படம் வெளி வந்த இரண்டு நாள்களில் ரூ.5.69 கோடி வசூல் செய்துள்ளது.

## நம்பிக்கை இழப்பது அனைத்தையும் இழந்ததற்குச் சமம்

இன்றைய மனிதர்களில் அதிகமானோர் பேர் ஏதாவது ஒரு கவலை யுடன்தான் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். சிறு தடையையும் பெரிதாக எண்ணி கவலைப் படுகிறார்கள். இதற்கெல்லாம் காரணம் அவர்கள் மேல் அவர்களுக்கு நம்பிக்கை இல்லாததுதான்.

நமக்கு நண்பனும் நாமே; பகைவனும் நாமே என்று சொல்வ துண்டு.. அதாவது, எவன் ஒருவன் தன் பலவீனங்களை முறியடித்து வெற்றி பெறுகிறானோ, அவன் தனக்குத்தானே நண்பனாவான். யார் ஒருவன் தன் பலவீனங்களை வெற்றி பெற முடியாமல் தவிக் கிறானோ அவன் அவனுக்கு எதிரியாவான் என்று அர்த்தம்.

பெரும்பாலான சம்பவங்களை ஆராய்ந்து பார்த்தால், ஒவ்வொரு தடையும் ஒவ்வொரு வெற்றியை மறைத்து வைத்திருக்கிறது என்பது புரியும். அது போன்றுதான் தோல்வியும். தோல்வி என்பது எம்மை மாற்றி அமைத்துக் கொள்ள வேண்டிய அறிவிப்பு என்று சொல்ல லாம். செல்வத்தை இழப்பது ஒன்றையும் இழப்பதாகாது. உடல் நலத்தை இழப்பது சிறிதளவு இழந்ததாகும். ஆனால் நம்பிக்கை இழப்பது எல்லாவற்றையும் இழந்ததற்குச் சமம் என்று சொல்வார் கள்.

ஓர் எறும்பு தன் வாயில் நீளமான உணவுப் பொருளைச் சுமந்து கொண்டு சென்றது. தரை வழியே சென்று கொண்டிருந்த அந்த எறும்பு ஒரு வெடிப்பைப் பார்த்துவிட்டு திடீரென்று நின்றுவிட்டது. மேலே செல்ல முடியாமல் தவித்தது. சிறிது நேரம் கழித்து, தான் சுமந்து வந்த இரையை வெடிப்பின் மேல் வைத்து அதன் மீது ஊர்ந்து சென்று வெடிப்பைக் கடந்தது. பின்பு அந்த இரையைக் கவ்விக் கொண்டு சென்றது.

துன்பம் ஏற்பட்டால், அந்தத் துன்பத்தையே பாலமாக வைத்து முன்னேற வேண்டும் என்பதை நாம் எறும்பிடம் இருந்து கற்றுக் கொள்ள வேண்டியிருக்கிறது. ஒரு மிகச் சிறிய உயிரியான எறும் பின் தன்னம்பிக்கை எமக்கு இருந்தால் கூடப் போதும் எந்தத் தடை யையும் வெல்ல முடியும். கவலையும் காணாமல் போய்விடும்.






## சிக்கனம்

சிக்கனம் என்பது ஒருவன் பணத்தை எவ்வளவு குறைவாகச் செலவு செய்கிறான் என்பதைப் பொறுத்தது அல்ல. அதை அவன் எவ்வளவு உபயோகமாகச் செலவிடுகிறான் என்பதைப் பொறுத்தது ஆகும்.

கர்ணனைப் போல் நண்பனை தேர்ந்தெடு; நீ வீழ்கின்ற நிலை வந்தபோதும் உனக்காகப் போராடுவான்.



வெளிப்படையாகப் பூத்து பூமிக்கடியில் காய்க்கும் நிலக்கடலையைப் போல பணியை வெளிக்காட்டிப் புகழைப் புதைத்து வைப்போம்.

# பிடித்துச் சென்ற பெண்களை கொன்று குவிக்கிறது ஐ.எஸ்.

## தோற்கும் தறுவாயில் கொடூரங்கள்

லண்டன்.பெப்.27
ஐ.எஸ். அமைப்புச் சிரியாவிலிருந்து பாலியல் அடிமைகளாகப் பெண்களைக் கடத்திச் சென்றிருந்தது.



கடத்திச் சென்ற பெண்களில் 50 பேர் கொல்லப்பட்டுள்ளனர். அவர்களின் தலைகள் ஐ.எஸ். ஆயுததாரிகள் மறைந்திருந்த குகைகளில் கண்டெடுக்கப்பட்டதாகப் பிரிட்டனின் சிறப்புப் படைச் சேவையினர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


ஏற்கெனவே 'டெய்லி மெய்ல்' தனது செய்தி அறிக்கையில், யாஜிடியைச் சேர்ந்த பெண்களைக் கடத்திச் சென்று அவர்களைப் பாலியல் அடிமைகளாகப் பயன்படுத்திப் பிறகு அவர்களைக் கொன்று தலைகளை வீசியிருப்பதாகத் தெரிவித்திருந்தது.

சிரியாவில் ஐ.எஸ். அமைப்பினர் குறுகிய நிலப்பரப்புக்குள் ஒடுக்கப்பட்டிருக்கும் நேரத்தில், தோற்கும் தருணத்தில் அப்பாவிப் பெண்களைக் கொன்று அவர்கள் தலைகளை ஆங்காங்கே போட்டு விட்டுச் செல்கின்றனர் என்று பிரிட்டனின் அறிக்கை மேலும் தெரிவிக்கிறது. +



கொலம்பியா - வெனிசுலா எல்லை மூடப்பட்டுள்ளது. குறித்த எல்லையிலுள்ள டி பாலா சாந்தந்தர் பாலம் பகுதியில் ஏற்பட்ட கலவரத்தின்போது வெனிசுலாவின் பாதுகாப்புப் படைகளை எதிர்க்கட்சி ஆதரவாளர்கள் தாக்கிய காட்சி இது.

# 2 சதவீத மூளையுடன் பிறந்து 6 ஆண்டுகள் வாழும் சிறுவன்





லண்டன்:பெப்.27
இங்கிலாந்தின் வடமேற்கிலுள்ள கம்ப்ரியா நகரைச் சேர்ந்த ராப்-ஷெல்லி தம்பதியினருக்கு 2013ஆம் ஆண்டில் பிறந்த குழந்தைக்கு 2 சதவீத அளவுக்கே மூளை இருப்பது பரிசோதனைகளில் தெரியவந்தது. 2 சதவீத மூளையுடன் பிறந்த அந்த ஆண் குழந்தைக்கு நோவா வெல் எனப் பெயரிட்டுப் பெற்றோர் வளர்த்து வந்தனர். அந்தக் குழந்தை பார்வையின்றி, பேசும், கேட்கும் திறனின்றி வளர்ந்தது. பின்னர், ஆஸ்திரேலிய மருத்துவர்களின் கண்காணிப்பில் வளர்க்கப்பட்டது. 3 வயதுக்குப் பின் நோவாவுக்கு அளிக்கப்பட்ட சிறப்பு மருத்துவ சிகிச்சையால், அவனது மூளை வளர்ச்சி அதிகமானது. தொடர்ந்து பார்வைப் புலன் தொழிற்பட்டது. தற்போது 6 வயதாகும் நோவாவின் மூளை 80 சதவீத அளவை எட்டியுள்ளது. தொடர் சிகிச்சையின் மூலம் நோவா முழுமையான மூளை வளர்ச்சியைப் பெற்று சராசரி மனிதர்கள் போல நீண்டகாலத்துக்கு உயிர் வாழ்வான் என மருத்துவர்கள் நம்பிக்கை தெரிவித்தனர்.

## ஏமனில் ஏவுகணைத் தாக்குதல் 12 இராணுவச் சிப்பாய்கள் சாவு

சனா.பெப்.27
ஏமனில் போராட்டக்காரர்கள் நடத்திய ஏவுகணைத் தாக்குதலில் 12 இராணுவச் சிப்பாய்கள் சாவடைந்தனர்.

ஏமனின் சாடா மாகாணத்தில் சவூதி அரேபியாவின் எல்லையையொட்டி உள்ள அல்புக்கா நகரில் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த இராணுவச் சிப்பாய்களைக் குறிவைத்துக் ஹவுத்திப் போராளிகள் ஏவுகணை தாக்குதல் நடத்தியதிலேயே இந்தச் சாவுகள் சம்பவித்திருக்கின்றன.

அத்துடன் 60க்கும் மேற்பட்ட சிப்பாய்கள் பலத்த காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

ஏமனில் அரச படைக்கும், ஹவுத்திப் போராளிகளுக்கும் இடையே 4 ஆண்டுகளாக உள்நாட்டு போர் நடந்து வருகிறது. ஹவுத்திப் போராளிகளுக்கு எதிராகச் சவூதி அரேபியா தலைமையிலான அரபு நாட்டுக் கூட்டுப்படைகள் வான்தாக்குதலை நடத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

# 'ஹைபர் சொனிக்' ஏவுகணை மூலம் 5 நிமிடங்களில் அமெ.வைத் தாக்கலாம்

## ரஷ்ய ஊடகம் தெரிவிப்பு




மொஸ்கோ.பெப்.27
அணு ஆயுதப் போர் ஒன்று ஏற்படுமாயின் தாங்கள் தற்போது தயாரித்துக் கொண்டிருக்கும் 'ஹைபர் சொனிக் அணுசக்தி ஏவுகணை' மூலம் அமெரிக்க இராணுவ நிலைகளை 5 நிமிடங்களுக்குள் தாக்கி அழித்துவிடலாம் என்று அமெரிக்க இராணுவ மையங்களைப் பட்டியலிட்டு ரஷ்யத் தொலைக்காட்சி ஊடகம் ஒன்று தனது செய்தி அறிக்கையில் தெரிவித்தது.

தாக்குதல் இலக்கில் பெண்டகன், மேரிலேண்ட் கேம்ப் டேவிட் ஆகிய இடங்களையும் அந்தச் செய்தி அறிக்கை குறிப்பிட்டது.

பனிப்போர்க் காலகட்டத்தில் ரஷ்யாவுக்கும் அமெரிக்காவுக்கும் இருந்து வந்த ஆயுதக்கட்டுப்பாட்டு ஒப்பந்தத்தில் இருந்து ரஷ்யா விலகியநிலையில் இந்தச் சம்பவம் பதிவாகியுள்ளது. ஐரோப்பாவில் அமெரிக்காவின் அணு ஆயுதத் தளங்கள் நிறுவப்பட்டால் அமெரிக்கக் கடல்பகுதியில் நீர்மூழ்கிக் கப்பல்களில் 'ஹைபர் சொனிக்' அணுசக்தி ஏவுகணைகளை நிறுத்துவோம் என்று ரஷ்ய அதிபர் புடின் கூறிவருகிறார். அமெரிக்காவுக்கு அப்படிப்பட்ட திட்டம் எதுவும் இல்லை என்று அமெரிக்கா தெரிவிக்கிறது. இந்த நிலையில் தற்போது 5 நிமிடங்களில் அமெரிக்க இராணுவ நிலைகளைத் தாக்கி அழிக்க முடியும் என்று ரஷ்யத் தொலைக்காட்சி தெரிவித்திருப்பது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. போர் முழக்கங்களை ரஷ்யா ஆரம்பித்துள்ளதாக விமர்சனங்கள் எழுந்துள்ளன.









வடகொரிய அதிபர் கிம் ஜோங் உன் மற்றும் அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் இருவரும் வியட்நாம் தலைநகர் ஹனோயில் சந்தித்துப் பேசுவதற்காக வியட்நாம் நோக்கிய பயணத்தை நேற்றைய தினம் ஆரம்பித்திருந்தனர். இன்றும் நாளையும் இந்தச் சந்திப்புகள் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன. வடகொரியத் தலைநகரில் இருந்து தனி ஒரு தொடருந்தில் வியட்நாமுக்குப் பயணித்த கிம் 2 நாள்களாக 4 ஆயிரம் கிலோ மீற்றர்கள் (2500 மைல்) பயணம் செய்து நேற்று வியட்நாம் எல்லையில் உள்ள டாங் டாங் நகரை வந்தடைந்தார். அவருக்கு வியட்நாமில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. அமெரிக்க அதிபர் ட்ரம்ப் நேற்றைய தினம் இந்தச் சந்திப்புக்கான வியட்நாம் நோக்கிய தனது வானூர்திப் பயணத்தை ஆரம்பித்தார்.

# பாகிஸ்தானுக்குள் ஊடுருவி இந்திய வான்படை தாக்குதல்


## ஆயுததாரிகளின் நிலைகள் அழிப்பு இந்தியா - பாக். எல்லையில் பதற்றம்

புதுடெல்லி, பெப்.27

பாகிஸ்தானின் கட்டுப்பாட்டுப் பகுதியான பாலக்கோட்டுக்குள் புகுந்து அங்கு பதுங்கியுள்ள ஆயுததாரிகளின் நிலைகள் மீது இந்திய வான்படை அதிரடித் தாக்குதல் நடத்தியதாக இந்திய அரச ஊடகம் செய்தி வெளியிட்டது.

இந்தியாவின் போர் வானூர்திகள் எல்லை கடந்து சென்று பாகிஸ்தானுக்குள் பதுங்கியுள்ள ஆயுததாரிகளின் நிலைகள் மீது நேற்றைய தினம் அதிகாலை 3.30 மணியளவில் தாக்குதல் நடத்தின. இந்தியாவின் 12 மிராஜ் ஜெட் ரக வானூர்திகளே இவ்வாறு எல்லை தாண்டிச்சென்று பாலாகோட் பகுதியில் தாக்குதல் நடத்தின. இந்தத் தாக்குதலின் போது சுமார் ஆயிரம் கிலோ வெடிகுண்டுகளை வீசி ஆயுததாரிகள் பதுங்கியிருந்த முகாம்களை முற்றிலுமாக அழித்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தத் தாக்குதலில் ஜெய்ஷ் இ முகமதின் ஏராளமான ஆயுததாரிகள் பயிற்சியாளர்கள், மூத்த தளபதிகள் மற்றும் தற்கொலைப் படையினர் கொல்லப்பட்டனர் என்று இந்தியாவின் அயலுறவுத்துறைச் செயலர் விஜய் கோகலே தெரிவித்தார். இந்தத் தாக்குதல் சம்பவம் இந்திய வான்படையினரின் மிகப்பெரிய வெற்றியாகப் பார்க்கப்படுகிறது. பலாகோட், சாக்கோட், முஸாவ்பராபாத் ஆகிய இடங்களில் தாக்குதல்கள் நடந்துள்ளன. அங்கு இயங்கிவந்த ஆயுததாரிகளின் முகாம்கள் அழிக்கப்பட்டுள்ளன.





எல்லைப் பகுதியில் இந்திய வான்படை அத்துமீறி நுழைந்து தாக்குதல் நடத்தியதாகப் பாகிஸ்தான் இராணுவ ஊடகப்பிரிவும் தெரிவித்தது. இந்தியத் தரப்பின் தாக்குதலில் உயிரிழப்போ, பொருட்சேதமோ ஏற்படவில்லை என்றும் அதற்குப் பதிலடி கொடுப்பதற்குப் பாகிஸ்தான் வான்படை உடனடியாகப் புறப்பட்டதால் இந்திய வான்படை திரும்பிச் சென்றதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜம்மு காஷ்மீரின் புல்வாமாவில் கடந்த 14ஆம் திகதி இந்தியச் சிப்பாய்கள் பயணித்த பேருந்து மீது ஜெய்ஷ் இ முகமது அமைப்பைச் சேர்ந்த ஆயுததாரி தற்கொலைப் படைத் தாக்குதல் நடத்தினார். இதில் 40 சிப்பாய்கள் கொல்லப்பட்டனர். இந்தத் தாக்குதல் சம்பவத்தைத் தொடர்ந்து இந்தியா - பாகிஸ்தான் இடையே மோதல் போக்கு உருவாகியுள்ளது.

## வான்படையின் தாக்குதலுக்கு குவியும் பாராட்டுகள்!









புதுடெல்லி.பெப்.27

பாகிஸ்தானுக்குள் புகுந்து இந்திய வான்படையினர் தாக்குதல் நடத்தியமைக்கு இந்தியத் தரப்பின் பல்வேறு மட்டங்களில் இருந்தும் பாராட்டுகள் குவிந்த வண்ணமுள்ளன. நாடு பாதுகாப்பான கரங்களில் உள்ளது என்று இந்தியத் தலைமை அமைச்சர் மோடி கூறியுள்ளார்.

"ஆகாய வீர்ர்களே! அசகாய சூரர்களே!" என்று விழித்து இந்திய வான் படையினருக்குக் கவிஞர் வைரமுத்து புகழாரம் சூட்டினார். அவர் தனது கீச்சகப் பக்கத்தில் "போர்மீது விருப்பமில்லை. ஆனால், தீவிரவாதத்தின் மீது தீ வைப்பதைத் தவிர வேறு வழியில்லை. ஆகாய வீரர்களே! அசகாய சூரர்களே! அண்ணாந்து பார்த்து வணக்கம் சொல்கிறோம்' எனப் பதிவிட்டார். வான்படையினரின் இந்தத் தாக்குதல் தலைமை அமைச்சர் மோடியின் துணிச்சல் மிக்க செயல்பாடு என்று தமிழக முதல்வர் பழனிசாமி புகழ்ந்து பேசினார். இந்திய வான்படையினர் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியிருப்பதாக இந்தியக் கிரிக்கெட் அணியின் முன்னாள் அணித்தலைவர் வீரேந்திர சேவாக் பாராட்டுத் தெரிவித்தார். இந்திய இராணுவம் எவருக்கும் குறைந்தது அல்ல என்று நடிகர் விஜயகாந்த் பாராட்டினார். நம்மை ஆயிரம் துண்டுகளாக்க நினைத்த பாகிஸ்தான் மீது ஆயிரம் குண்டுகள் போட்டது சரியானதே என்று இந்தத் தாக்குதல் குறித்துச் சுப்பிரமணியன் சுவாமியும் கருத்துரைத்தார்.

இவர்களுடன் தமிழ்த் திரைத்துறையினர் தமிழக அரசியல் வாதிகள் எனப் பலரும் இந்திய வான்படையினரின் அதிரடித் தாக்குதலுக்குப் பாராட்டுத் தெரிவித்துள்ளனர்.

## இரு தரப்பாரும் மாறி மாறி புகழாரம்!

புதுடெல்லி.பெப்.27

பாகிஸ்தானுக்குள் ஊடுருவித் தாக்குதலில் ஈடுபட்ட இந்திய மிராஜ் போர் வானூர்திகளின் அளவைப் பார்த்துப் பயந்து பாகிஸ்தான் வானூர்திகள் திரும்பிச் சென்றதாக இந்தியத் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது. அத்தோடு தமது பதில் தாக்குதலுக்குத் தாக்குப் பிடிக்க முடியாமல் இந்திய வானூர்திகள் தப்பி ஓடியதாகப் பகிஸ்தான் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

பாகிஸ்தானின் 'எப்16' ரக வானூர்திகள் இந்தியத் தரப்பைத் தாக்க வந்தன. ஆனால் மிராஜ் 2ஆயிரம் வகை போர் வானூர்திகளின் அணிவகுப்பு அளவைப் பார்த்த பாக். வானூர்திகள் பயந்து திரும்பி விட்டன. என்று இந்திய ஊடகம் செய்தி வெளியிட்டது.

இந்தத் தாக்குதல் குறித்துப் பாகிஸ்தான் இராணுவத் தளபதி ஆசிவ்ப் கபூர் தன்னுடைய கீச்சகப் பக்கத்தில், இந்திய வான்படை எல்லையை அத்துமீறிப் பாகிஸ்தானுக்குள் நுழைந்தது.

ஆனால், பாகிஸ்தான் வான் படை உடனடியாகப் பதில் தாக்குதல் நடத்தியது. இதனால், இந்திய வானூர்திகள் திரும்பிச் சென்றன என்று பதிவிட்டுள்ளார்.

## எந்த நேரத்திலும் பாகிஸ்தான் தாக்கலாம்

### தயார் நிலையில் இந்திய வான்படை

காஷ்மீர்.பெப்.27

இந்திய வான்படை பாகிஸ்தானுக்குள் அத்துமீறித் தாக்குதல் நடத்தியதைத் தொடர்ந்து பாகிஸ்தான் எந்த நேரத்திலும் பதிலடி கொடுக்கலாம் எனும் சூழல் நிலவி வருகிறது. இதனால் இந்திய வான்படை தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது. இந்திய வான்படையினர் மேற்கொண்ட தாக்குதலைத் தொடர்ந்து, பாதுகாப்புத் தொடர்பான அமைச்சரவைக் குழுவுடன், இந்தியத் தலைமை அமைச்சர் மோடி அவசர ஆலோசனை நடத்தினார்.

இந்திய வான்படை நடத்திய தாக்குதலுக்குப் பிறகு எல்லைப்பகுதியில் ஏற்பட்டுள்ள சூழல் மற்றும் அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து அந்தக் கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டதாகவும் இந்தியா நடத்திய தாக்குதலுக்குப் பாகிஸ்தான் பதிலடி கொடுக்க வாய்ப்பு உள்ளதால் எல்லைப்பகுதியில் இந்திய இராணுவத்தையும், வான் படையினரையும் தயார் நிலையில் வைத்துக்கொள்ளுவது பற்றி ஆராயப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் எல்லைப் பகுதியிலுள்ள ஏனைய இந்தியத் துருப்புகளை எந்த நேரமும் தாக்குதல் நடத்துவதற்குத் தயார் நிலையில் இருக்குமாறு இந்திய வான்படைப் பணித்திருக்கின்றமையும் குறிப்பிடத்தக்கது.

## பாக். உளவு வானூர்தியும் சுட்டு வீழ்த்தப்பட்டது

குஜராத்.பெப்.27

இந்தியாவின் குஜராத் மாநிலத்தில் உலவிய பாகிஸ்தானுக்குச் சொந்தமான ஆளில்லாத உளவு வானூர்தியை இந்திய இராணுவம் சுட்டு வீழ்த்தியது. பாகிஸ்தானின் எல்லைப் பகுதியான குஜராத்தின் கட்ச் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு சுற்றித் திரிந்த் இந்த உளவு வானூர்தியை இந்திய இராணுவம், அம்பாசா கிராமத்தில் வைத்துச் சுட்டு வீழ்த்தியது. சுடப்பட்ட வானூர்தியின் பகுதி கள் உடைந்து கீழே சிதறின. வானூர்தியின் பாகங்களைச் சேகரித்து, அவற்றைப் பரிசோதிக்கும் பணி நடந்து வருகிறது.

## இந்தியத் தாக்குதல் குறித்துச் சீனா அதிருப்தி

பீஜிங்.பெப்.27

இந்தியாவும், பாகிஸ்தானும் கட்டுப்பாட்டுடன் நடந்து கொள்வதன் மூலம் இந்தப் பகுதியில் அமைதி நிலவ ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் எனச் சீனா வலியுறுத்தியுள்ளது. பாகிஸ்தானின் கட்டுப்பாட்டில் உள்ள பால்க்கோட் பகுதிக்குள் புகுந்து இந்திய வான் படை தாக்குதல் நடத்தியது குறித்துச் சீனா கருத்துத் தெரிவித்துள்ளது. இது குறித்துச் சீன அயலுறவுத்துறைச் செய்தித்தொடர்பாளர் லு ஹாங் தெரிவித்ததாவது:

"இந்தியாவும், பாகிஸ்தானும் தங்கள் நடவடிக்கையை நிறுத்திக் கொண்டு இந்தப் பகுதியில் அமைதி நிலவ ஒத்துழைப்பு அளிக்கும் என நம்புகிறோம். மீண்டும் நல்லுறவுஏற்படவும், இணக்கமான சூழல் நிலவவும் அனைவரும் ஒத்துழைப்பு அளிப்பது அத்தியாவசியமானது. இதை உணர்ந்து செயற்பட வேண்டும்" எனக் கூறினார்.

# ஆள்க்கொணர்வு மனுக்கள் தாக்கல் செய்தால் இறப்புச் சான்றிதழ் தருகிறோம் என்கிறது அரசு

- பிரதி மன்றாடியார் யாழ்.மேல்நீதிமன்றில் தெரிவிப்பு
- மனுதாரர் தரப்புச் சட்டத்தரணிகள் கடும் எதிர்ப்பு

யாழ்ப்பாணம், பெப். 27

காணாமல் ஆக்கப்பட்டவர்களைத் தேடி உறவினர்கள் ஆள்க்கொணர்வு மனுத் தாக்கல் செய்திருந்த நிலையில், காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு இறப்புச் சான்றிதழ் வழங்குவதாகவும் அதற்கு விண்ணப்பிக்குமாறும் சட்டமா அதிபர் திணைக்களம் தெரிவிக்கிறது.

யாழ்ப்பாண மேல்நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட ஆள்க்கொணர்வு மனு மீதான விசாரணையின்போதே சட்டமா அதிபர் திணைக்களம் சார்பில் முற்பட்ட பிரதி மன்றாடியார் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தென்மராட்சி நாவற்குழியில் 1996ஆம் ஆண்டுஜூலை19 ஆம் திகதி கணேசலிங்கம் கிரு பாகரன்,பொன்னம்பலம் கண்ணதாசன்,யேசுதாஸ் ஸ்டாலின் ஜீவா ஆகியோர் இராணுவத்தால் கைது செய்யப்பட்டு காணாமல் போயிருந்தனர். அது தொடர்பில் அவர்களுடைய பெற்றோர், சகோதரர்கள் ஆள்க்கொணர்வு எழுத்தாணை மனுவை யாழ்ப்பாண மேல்நீதின்றில் தாக்கல் செய்திருந்தனர்.

யாழ்ப்பாண மேல்நீதிமன்றில் நீதிபதி அ.பிரேமசங்கர் முன்னிலையில் நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. மனு தொடர்பான ஆட்சேபனை எதிர் மனு தாரரால் முன்வைக்கப்பட்டது. குறித்த ஆள்க்கொணர்வு மனுக்களில் எதிர்மனு தாரர்களாக நாவற்குழி இராணுவ முகாமின் பொறுப்பதிகாரி, கொழும்பு இராணுவ தலைமையக கொமாண்டர், சட்டமா அதிபர் ஆகியோர் குறிப்பிடப்பட்டி ருந்தனர். ஆ ள் க்கொணர்வு மனுதாரர் சார்பில் சட்டத்தரணி சுபாஜினியின் அனுசரணையில் சட்டத்தரணி கு.குருபரன் மன்றில் முற்பட்டார்.

### ஆதாரங்கள் இல்லை தள்ளுபடி செய்யவும்

எதிர்மனு சார்பில் பிரதி மன்றாடியார் நாயகம் செய்த்திய குணசேகரவுடன் அரச சட்டவாதி மாதினி விக்னேஸ்வரன் மன்றில் முற்பட்டார்.

அதன்போதே ஆள்க்கொணர்வு மனுக்கள் ஆரம்பநிலையிலேயே தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்பதற்கான காரணங்களை முன்வைத்தார்.

அதில், "1996 ஆம் ஆண்டு இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் 21 வருடங்கள் கழித்து மிக காலதாமதமாக மனுக்கள் மேல் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டன. மனுக்களை விசாரிக்கும் நியாயாதிக்கம் மேல் நீதிமன்றுக்கு இல்லை. உயர் நீதிமன்ற விதிகளின் 46ஆவது விதியுடன் ஒருங்கிணைவாக மூல ஆவணங்களோ அல்லது அத்தாட்சிப் படுத்தப்பட்ட ஆவணங்கள் மனுவுடன் இணைக்கப்படவில்லை. மனுதாரர்களால் போதிய ஆதாரங்கள் சமர்ப்பிக்கப்படவில்லை. அதனடிப்படையில் இந்த மனுவை ஆரம்பத்திலேயே தள்ளுபடி செய்ய வேண்டும்" என்று வாதத்தை முன்வைத்தார்.

### அரசியல் நெருக்கடி

மனுதாரர் சார்பில் முற்பட்ட சட்டத்தரணி அதை எதிர்த்தார்.

"2009 ஆம் ஆண்டுக்கு முற்பட்ட, பிற்பட்ட சூழ்நிலைகள் யாழ்ப்பாண மாவட்டத்தில் அரசியல் நெருக்கடியாகவே இருந்தது. மனுதாரர்கள் தொடர்ச்சியாக உள்நாட்டு இடப்பெயர்வுக்கு முகம் கொடுத்தமையால் கால தாமதம் ஏற்பட்டது. இவ்வாறான ஆள்க்கொணர்வு மனு தொடர்பில் காலதாமதம் பற்றி கருத்தில் கொள்ளக் கூடாது. உயர்நீதிமன்ற விதிகள் கட்டாயம் பின்பற்றப்பட வேண்டும் என்ற அவசியம் இல்லை" என்று வாதிட்டார்.

எதிர்மனுதாரர் சார்பான பிரதி மன்றாடியார், "காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான பணியகத்தினர் மனுதாரர்களால் குறிப்பிடப்பட்டுள்ள காணாமல் போனவர்களைக் கண்டுபிடிக்க முடியவில்லை என்று எழுத்து மூலமாகக் கடிதம் கொடுத்துள்ளார்கள். இது தொடர்பில் மேல் நடவடிக்கை எடுக்க முடியுமா? அப்படியாயின் இறப்புச் சான்றிதழுக்கு விண்ணப்பிக்கலாம்" என்றும் அவர் தெரிவித்தார். அதற்கு மனுதாரர் தரப்புச் சட்டத்தரணிகள் எதிர்ப்பு வெளியிட்டனர்.

"மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள நபர்கள் உயிருடன் இருக்கின்றனரா இல்லையா என்பது தெரியாத நிலையில், இறப்புச் சான்றிதழுக்கு விண்ணப்பிப்பது எப்படி?" என்று மேல்நீதிமன்றில் கேள்வியெழுப்பினார்.

இருதரப்பு வாதப் பிரதி வாதங்களை அவதானித்த மேல்நீதிமன்று, மனு தொடர்பான மேலதிக எழுத்துமூல சமர்ப்பணத்துக்காக வழக்கு எதிர்வரும் 18 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தது. எழுத்து மூலமான சமர்ப்பணத்தின் பின்னர் குறித்த ஆள்க்கொணர்வு மனு தொடர்பான கட்டளைகள் வழங்கப்படும் என்றும் மேல்நீதிமன்று தெரிவித்தது. (த-8)

---

## வளப்பற்றாக்குறைகளை நீக்கி கல்வி வளர்ச்சிக்கு உதவுங்கள்

பாடசாலை அபிவிருத்திச் சங்கம் நாடாளுமன்ற உறுப்பினரிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், பெப்.27

எமது பாடசாலையில் காணப்படும் வளப்பற்றாக் குறை மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு மிகப் பெரும் தடையாக உள்ளது. எனவே எமது பிள்ளைகளின் எதிர்காலத்தைக் கருத்தில்கொண்டு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று வரணி கரம்பைக் குறிச்சி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனுக்கு எழுதிய கடிதத்தில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

எமது பாடசாலை வரணி கரம்பைக்குறிச்சி மேற்கில் உள்ளது. பெரும்பாலும் கூலித் தொழிலை நம்பி வாழும் நிரந்தர வருமானமற்ற குடும்பங்களின் பிள்ளைகள் அதிகம் கற்கின்ற பாடசாலையாகும். தற்போது 102 பிள்ளைகள் கற்று வருகின்றனர்.

ஆயினும் எமது பாடசாலை கற்றலுக்குப் போதுமான வசதியற்ற பாடசாலையாகவே உள்ளது.

இந்த ஆண்டு நூற்றாண்டு காணும் பாடசாலையாக இருக்கின்ற போதிலும் கணினிக் கூடம், விளையாட்டு முற்றம், நூலக வசதி, திறன் வகுப்பறை, பிரார்த்தனை மண்டப இருக்கை போன்றவை இல்லாத நிலையில் இயங்கி வருகிறது.

2017ஆம் ஆண்டு முதன் முதலாகப் புலமைப்பரிசில் பரீட்சையில் இரண்டு மாணவர்கள் சித்தி பெற்றுள்ளனர்.

அதேபோல 2018ஆம் ஆண்டு எமது கடும் முயற்சியால் ஒரு சில உதவும் உள்ளங்களின் உதவியுடன் மாணவர்களை பயிற்றுவித்ததையடுத்து தரம் 5 செயற்பட்டு மகிழ்வோம் அணி முதன் முதலாக தேசிய போட்டி வரை செல்லும் வாய்ப்பைப் பெற்றிருந்தது.

எனவே எமது திறமையுள்ள மாணவர்களின் வளர்ச்சிக்கு பாடசாலையில் காணப்படும் வளப்பற்றாக் குறை நிவர்த்தி செய்யப்பட வேண்டும்.

எனவே கணினி கூடம், விளையாட்டு முற்றம், நூலக வசதி, திறன் வகுப்பறை, பிரார்த் தனை மண்டபத்துக்கான இருக்கை வசதி உட்பட 7 அம்சக் கோரிக்கைக்கு எமது நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் முன்னின்று உதவ வேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ-50)

---

யாழ்ப்பாண மாவட்டத்தில்

## இரு சமுர்த்தி வங்கிகள் கணினி மயமாகியுள்ளன

யாழ்ப்பாணம், பெப். 27

யாழ்ப்பாண மாவட்டத்தில் முதற்கட்டமாக இரண்டு சமுர்த்தி வங்கிகள் கணினி மயப்படுத்தப்பட்டுள்ளன.

வங்கிப் புத்தகங்கள் கணினியில் அச்சிடப்பட்ட விவரங்களு டன் வழங்கப்படுகிறது என்று மாவட்டச் செயலக சமுர்த்திப் பிரிவு தெரிவித்துள்ளது.

இது பற்றி மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

மக்களுக்குக் குறைந்த வட்டியில் இலகு கடன்கள், குழு கடன்கள், வாழ்வாதாரக் கடன்கள் போன்றவற்றைச் சமுர்த்தி வங்கிகள் வழங்கி வருகின்றன. ஆனால் ஏனைய வங்கிகள் போன்று வங்கிப் புத்தகங்கள் கணனி மயப் படுத்தப்பட்ட அச்சு பதிவில் வரவு செலவுகள் பதியப்பட்டு வழங்கப்படுவதில்லை. சமுர்த்தி வங்கிப் புத்தகங்கள் வரவு அல்லது செலவுத் தொகை வைப்பிலிடப்படும் போது வங்கிப் புத்தகத்தில் கையால் எழுதப்பட்டே தற்போது வழங்கப்பட்டு வருகிறது.

ஏனைய் வங்கிகள் போன்று கணினி மயப்படுத்தப்பட்ட வங்கிப் புத்தகங்கள் வழங்கப்படுவதில்லை. இலங்கையில் 8 வங்கிகளைக் கணினி மயப்படுத்த அரசு தீர்மா னித்துள்ளது. இது பரீட்சார்த்தமாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கை. யாழ்ப்பாண மாவட்டத்தில் கோண்டாவில் மற்றும் யாழ்ப்பாண நகர் வங்கிகள் இவ்வாறு கணினி மயப்படுத்தப்பட்டுள்ளன.

இரண்டு வங்கிகளிலும் சமுர்த்தி வங்கிப் புத்தகங்கள் கணினி மூலமான தரவுகள் உள்ளீடு செய்யப்பட்டு புத்தகத்தில் வரவு செலவு தொகைகள் அச்சிடப்பட்டு வழங்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

கோண்டாவில் வங்கியில் ஏற்கனவே இந்த நடைமுறை ஆரம்பிக்கப் பட்டுள்ளது. யாழ்ப்பாண நகர் கிழக்கு வங்கியில் நேற்று இந்தச் சேவை முழுமையாக நடைமுறைக்கு வந்துள்ளது.

பரீட்சார்த்தமாக ஆரம்பிக்கப் பட்டுள்ள இந்த நடைமுறை எதிர் காலத்தில் அனைத்து சமுர்த்திவங்கிகளிலும் கணினி மயப்படுத்தப்பட்டு சேவை கள் நடைபெறலாம்என்று தெரிவிக்கப்பட்டது. (த-7)

---

## வழிகாட்டல் கையேடு வெளியீடு

யாழ்ப்பாணம்,பெப் 27

மாணவர்கள், இளையோருக்கான உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அடங்கிய வழிகாட்டல் கையேட்டின் வெளியீட்டு விழா யாழ்ப்பாணம் சுண்டிக்குளி மகளிர் கல்லூரியில் நாளை வியாழக்கிழமை முற்பகல் 9 மணிக்கு நடைபெறும் என்று மாகாண கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

கல்வி அமைச்சின் செயலர் எஸ்.சத்தியசீலன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் முதன்மைவிருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் கலந்துகொள்ளவுள்ளார். (ஐ-7)

---

## அரச அதிகாரிகளுக்குப் பயிற்சி

யாழ்ப்பாணம்,பெப்.27

தேசிய சமாதானப் பேரவையின் அனுசரணையுடன் சொன்ட் நிறுவனத்தால் நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் சமூக ஒற்றுமை மற்றும் நல்லிணக்க செயற்திட்டத்தின் கீழ் அரச அதிகாரிகளுக்கான ஒரு நாள் பயிற்சிப்பட்டறை தெல்லிப்பழை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

பயிற்சிப்பட்டறையினை தெல்லிப் பழை பிரதேச செயலக உதவித்திட்டமிடல் பணிப்பாளர் திருமதி.ரதி நகுலேஸ்வரன் ஆரம்பித்து வைத்தார். வளவாளராக உளவியல் ஆலோசகர் செல்வி.யுடித் ஜெயரட்ணம் கலந்து கொண்டார்.


நிகழ்வில் தெல்லிப்பழை பிரதேச செயலக அதிகாரிகள், பிரதேச சபை அதிகாரிகள், சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையின் அலுவலகர்கள், என்.பி.சி நிறுவன திட்ட அதிகாரி திருமதி வி. முகுந்தினி, சொன்ட் நிறுவன பணியாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.பயிற்சிப்பட்டறையின் இறுதியில் கலந்துகொண்டவர்களுக்கு சான்றிதழ்களும் நாள் குறிப்பேடும் வழங்கப்பட்டன. (ஐ)



# யாழ்ப்பாணத்தில் நெல்லைச் சேமிப்பதற்கு கூட்டுறவுச் சங்கங்களும் இணக்கம்

யாழ்ப்பாணம், பெப் 27

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் நெல்லை கொள்வனவு செய்து சேமிப்பதற்கு கூட்டுறவுச் சங்கங்களும் இணக்கம் தெரிவித்துள்ளதாக மாவட்ட செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.



இது பற்றி மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

யாழ்ப்பாண மாவட்டத்தில் நெல் விளைச்சல் கடந்த காலத்தை விட இந்த வருடம் சிறப்பானதாக அமைந்துள்ளது. கடந்த வருடங்களில் கால நிலை மாற்றத்தால் நெல் அழிவுக்கு உள்ளானது. இதனால் விளைச்சல் குறைவடைந்து. இம்முறை சிறப்பாக அறுவடை நடைபெற்று வருகிறது.

நெல் சந்தை படுத்தும் சபை இம்முறை ஆயிரம் மெற்றிக் தொன் நெல்லை கொள்வனவு செய்ய தீர்மானித்துள்ளது.

ஒரு கிலோ சம்பா 41 ரூபாவுக்கும் ,ஒரு கிலோ நாடு 38 ரூபாவுக்கும் கொள்வனவு செய்யப்படுகிறது. நெல் விளைச்சல் அதிகம் என்பதால் நெல்லை சேமித்து பருவ காலத்தில் அதனை விற்பனை செய்வதன் மூலம் விவசாயிகளுக்கும் இலாபம் கிடைக்கும்.

ஆகவே கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் நெல் சந்தை படுத்தும் சபை ஆகியன இணைந்து இந்த முறை 2 ஆயிரம் மெற்றிக் தொன் நெல்லை கொள்வனவு செய்யத் தீர்மானித்துள்ளன.

இதற்காக 80 மில்லியன் ரூபா நிதி அமைச்சிடம் கேட்கப்பட்டது. அதில் 50 மில்லியன் ரூபா நிதி முதற் கட்டமாக கிடைத்துள்ளது. கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் கொள்வனவு செய்து சேமிக்கப்படும் நெல் சில மாதங்களின் பின்னர் அவை கேள்வி கோரல் மூலம் விற்பனை செய்யப்படும். இதன் மூலம் விவசாயிகளுக்கும் நெல்லின் உரிய விலை கிடைப்பதோடு கூட்டுறவு சங்கங்களுக்கும் இலாபம் கிடைக்கும்.

இவ்வாறு சங்கங்கள் கொள்வனவு செய்யும் நடைமுறை 2015,16 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இருந்தது என்று தெரிவிக்கப்பட்டது. (க-7)

## பொது அறிவும் நுண்ணறிவும் போட்டி

சாவகச்சேரி, பெப்.27

உலகவிஞ்ஞானதினத்தை முன்னிட்டு புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களின் நலன்கருதி பொது அறிவும் நுண்ணறிவும் போட்டி நுணாவில் பொது நூலக மண்டபத்தில் நாளை வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறும்.

சாவகச்சேரி நகரசபையின் நுணாவில் பொது நூலகத்தினர் மாதாந்தம் நடத்திவரும் நூலக விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இந்தப் போட்டி இடம்பெறவுள்ளது.

நூலக எல்லைக்குட்பட்ட ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களை இந்தப் போட்டியில் கலந்து கொள்ளுமாறு நூலகத்தினர் அறிவித்துள்ளனர்.

போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெறும் மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்படுமெனவும் அறிவித்துள்ளனர். (ஐ-9)

## செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,பெப்.27

யாழ்ப்பாணம் கோண்டாவில் றோ.க.த.பாட சாலையின் செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு நிகழ்வுகள் பாடசாலை மைதானத்தில் நாளை வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அதிபர் க.நித்தியானந்தன் தலைமையில் நடைபெறும். நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன், சிறப்பு விருந்தினர்களாக யாழ்ப்பாண வலயக் கல்வி அலுவலக ஆரம்பப் கல்விப் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.சசிகுமார், கோண்டாவில் பிரதேச பொது சுகாதார பரிசோதகர் த.சுரேஸ் குமார், பாடசாலை ஓய்வுநிலை ஆசிரியர் திருமதி விமலாதேவி சர்வானந்தா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஐ)

## உந்துருளி விபத்தில் தம்பதியினர் காயம்

சாவகச்சேரி, பெப் 27

வீதியால் பயணித்தவேளை உந்துருளிச் சில் சறுக்கியதில் வீழ்ந்த தம்பதியினர் காயமடைந்தனர்.

காயமடைந்த இருவரும் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு சாவகச்சேரியில் இடம்பெற்றது.

அதே இடத்தைச் சேர்ந்த தெய்வேந்திரம் சத்தியமோகன் (வயது -39), அவரது மனைவியான சத்தியமோகன் சிந்துஜா( வயது -36 ) ஆகிய இருவருமே காயமடைந்தனர். (ஐ-9)

## ‘வடிவேலு’ பாணியில் நேற்று தெல்லிப்பழையில் திருட்டு

யாழ்ப்பாணம், பெப்.27



தென்னிந்தியத் திரைப்பட நடிகர் வைகைப் புயல் வடிவேலு பாணியில் யாழ்ப்பாணம் தெல்லிப்பழைப் பகுதியில் திருட்டுச் சம்பவம் ஒன்று இடம் பெற்றுள்ளது.

பெண்ஒருவர் தனிமையில் வாழ்ந்து வந்த வீட்டை நோட்டம்விட்ட திருடர்கள் அங்கு தமது கைவரிசையைக் காட்டியுள்ளனர்.

வீடு பிரித்து இறங்கிய திருடர்கள் சமையல் அறையில் உள்ள பொருள்கள், பாத்திரங்கள் என அனைத்தையும் திருடியுள்ளனர். எண்ணெய்யைக் கூட விட்டுவைக்காமல் திருடிச் சென்றுள்ளனர். அலுமாரியில் வைக்கப்பட்டிருந்த புடவைகள் அனைத்தும் திருடப்பட்டுள்ளன. படுக்கையறையில் இருந்த கட்டில், மெத்தையை அப்படியே தூக்கிச் சென்றுள்ளனர். போகும் போது திருடியது யார் என்று பொலிஸார் கண்டுபிடிக்காதவாறு தமது கையடையாளங்கள், கால் பட்ட இடங்களுக்கு மிளகாய்த் தூள் தூவிவிட்டுத் தப்பித்துள்ளனர்.

வைகைப்புயல் வடிவேலு இதே போன்று திரைப்படம் ஒன்றில் நடித்திருந்தார். ஆனால் வடிவேலுவின் சகாக்களின் முட்டாள் தனத்தால் பொலிஸாரிடம் அவர் சிக்குவது போன்று அந்தத் திரைப்படத்தின் கதை அமைந்திருந்தது. (21,26)

## அறுகுவெளியில்
# உப்பளம் அமைக்கும் பணிகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,பெப் 27

பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்றுவதை அடிப்படையாக கொண்டு தென்மராட்சி தெற்கு அறுகுவெளிப் பகுதியில் உப்பளம் அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக சாவகச்சேரி பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

குப்பிளான் பிரதேசத்தை சேர்ந்தவரும் லண்டனில் வசித்து வருபவருமான ஒருவர் இதற்கான தொழிற்சாலையை அமைத்து வேலை வாய்ப்புகளை வழங்க முன்வந்துள்ளார். இதற்காக 100 ஏக்கர் நிலம் பிரதேச செயலகத்தால் வழங்கப்பட்டுள்ளது. இதில் 49 ஏக்கர் நிலப் பரப்பு நேரடியாகவும் , மிகுதி 51 ஏக்கர் நிலப்பரப்பு

பயனாளிகளுக்கு வழங்கப்பட்டு பயனாளிகள் குறித்த நிறுவனத்துக்கு குத்தகை அடிப்படையில் வழங்கியுள்ளனர்.

இந்த திட்டத்தின் மூலம் தற்போது 51 பயனாளிகளும் மாதாந்தம் 25 ஆயிரம் ரூபா வரையில் குத்தகை பணத்தை பெற்று கொள்வதுடன் வேலை வாய்ப்பையும் பெற்று கொள்ள முடியும் என்றும் பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்த திட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கான ஆலோசனைக் கூட்டம் அண்மையில் பிரதேச சபை மண்டபத்தில் உப தவிசாளர் செ.மயூரன் தலைமையில் நடைபெற்றது.

வளவாளர்களாக யாழ்ப்பாண பல்கலைக்கழக விவசாயபீட முன்னாள் பீடாதிபதி பேராசிரியர் அ.நவரட்ணராஜா, ஆனந்தா உப்பள நிறுவன ஆலோசகர் வி.சகாதேவன் ஆகியோர் கலந்து கொண்டு உப்பளத்தில் பங்குதாரர்களாக மக்கள் இணைவதன் நன்மகளையும் மக்களின் பங்களிப்புடன் ஆரம்பிக்கப்படும் திட்டம் பெரு வெற்றியளிப்பதுடன் உப்பள உற்பத்தியால் பல குடும்பங்களின் பொருளாதாரத்தில் ஏற்படும் நன்மை தொடர்பிலும் விளக்கமளித்தனர்.

நிகழ்வில் சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர்கள் வை.ஜெகதாஸ் அ.நிமலரோகன் சிவனேசன் க.அசோகலிங்கம் க.யோகராசா க.குமார் திருமதி ம.பொன்னம்பலம், திருமதி சிவகுணசோதி ஆகியோரும் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளும் கலந்து கொண்டனர். (ஐ-7,159)



# கைதடி சாந்தி நிலையத்துக்குப் புதிதாக அத்தியட்சகரை நியமிக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம்,பெப் 27

கைதடி சாந்தி நிலையத்துக்கு பொறுப்பு வாய்ந்த அதிகாரி இது வரை நியமிக்கப்படாததால் முதியவர்களுக்கு உதவிகள் செய்வது தொடர்பாக உரிய தகவல்களைப் பெறமுடியவில்லையென பொதுமக்கள் கவலை தெரிவித்தனர்.

சாந்தி நிலையத்தில் கடமையாற்றிய அத்தியட்சகர் கடந்த தை மாதம் 31 ஆம் திகதி சேவையிலிருந்து இளைப்பாறியுள்ளார். அவரின் இடத்துக்கு இன்னமும் அத்தியட்சகர் நிய மிக்கப் பட வில்லை.

தற்போது இலங்கை நிர்வாக சேவையைச் சேர்ந்த சமூக சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் பதில் கடமையாற்றிவருகிறார்.

நிலையத்தில் சுமார் 200 முதியோர்கள் தங்கியுள்ளனர் அத்துடன் 60க்கு மேற்பட்ட அலுவலர்கள் கடமை புரிகின்றனர்.

இந்த நிலையில் அங்குள்ள முதியோர்களுக்கு உணவு மற்றும் உடுபுடவைகள் வழங்குவது தொடர்பாக செல்லும் பொதுமக்கள் நிலையத்தின் பொறுப்பு வாய்ந்த அதிகாரியான அத்தியட்சகர் இல்லாததால் உதவிகள் வழங்கமுடியாத நிலையில் திரும்பி வருவதாக கவலை தெரிவித்தனர்.

இதுதொடர்பாக சமூகசேவை கள் அலுவலர்களிடம் விசாரித்த போது சாந்தி நிலை யத்துக்கு சமூக சேவைகள் அலவலர்களில் சேவைமூப்பு அடிப்படையில் முன்னிலையில் உள்ளவர் சாந்தி நிலைய அத்தியட்சகராக நியமிக்கப்படுவது வழமை. அந்த வகையில் ஓய்வுபெற்றுச் சென்ற அத்தியட்சகர் ஆறு மாதங்களுக்கு முன்னர் ஓய்வுபெறுவதற்கான விண்ணப்பத்தை வழங்கி அனுமதி பெற்று கடந்த ஜனவரி 31 ஆம் திகதி சேவையிலிருந்து ஓய்வுபெற்றுச் சென்றுள்ளார்.

அந்த ஆறு மாத கால இடைவெளியில் தற்போது கடமையில் உள்ள சேவைமூப்பு அடிப்படையில் முன்னிலையில் உள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரி பெப்ரவரி முதலாம் திகதி தொடக்கம் புதிய அத்தியட்சகர் நியமிக்கப்பட்டிருக்க வேண்டும் ஆனால் அவ்வாறு நடைபெறவில்லை.

இந்த விடயம் தொடர்பில் மாகாண சமூக சேவைகள் திணைக்களத்திடம் தொடர்பு கொண்டு கேட்ட போது சுதேச சமூக சேவை அலுவலர்கள் மாவட்டத்துக்கு தலா ஒருவர் என்ற வீதமும், இந்த நிலையத்துக்கு அத்தியட்சகர் உட்பட அனைவரையும் நியமிப்பதற்கு நேர் முகத் தேர்வு மாகாண பொதுச் சேவை ஆணைக் குழுவால் நிறைவு பெற்றுள்ளது.

விரைவில் அதற்கான நியமனங்கள் வழங்குவதற்கு வாய்ப்புக்கள் உள்ளன. முதியோருக்கான உதவிகளை செய்பவர்கள் நிலையத்தில் உள்ள அலுவலர் அல்லது சமூக சேவைகள் திணைக்களத்திடம் தொடர்பு கொண்டு வழங்க முடியும். அத்தியகட்சர் இல்லாததால் இத்தகைய உதவிகள் வழங்குவதில் எந்த தடைகளும் நடைபெறவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-7,9)

# ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து கவனவீர்ப்புப் போராட்டம்

யாழ்ப்பாணம்,பெப் 27

இலங்கை ஆசிரியர் சேவைகள் சங்கம், அதிபர் சேவை சங்கத்தின் ஏற்பாட்டில் ஐந்து அம்ச கோரிக்கைகளை முன்வைத்து கவன வீர்ப்பு போராட்டம் ஒன்று யாழ்ப்பாணம் முதன்மை பேருந்து நிலையத்துக்கு முன்பாக நேற்று மதியம் இடம்பெற்றது.

முரண்பாடுகளை நீக்கி சம்பள அதிகரிப்பை செய், கொள்ளையடித்த 30 கோடி ரூபா சம்பளத்தை உடனடியாக வழங்குக.மாணவர்களின் ஒழுக்கத்தை பேணும் வகையிலான ஆசிரியர் நியமனத்தை வழங்குக.கற்பித்தலுக்கு இடையூறு வழங்கும் மேலதிக வேலையயை இல்லாமல் செய், இல்லாமல் செய்த ஓய்வூதியத்தை மீண்டும் வழங்குக என்ற கோரிகையை முன்வைத்துப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதில் தமது கோரிக்கை அடங்கிய பதாகைகளைக் கையில் ஏந்திய வண்ணம் போராட்டத்தில் ஈடுபட்டனர். (ஐ-7)










## வவுனியா நகரசபை உறுப்பினரின் மக்கள் சந்திப்பு

வவுனியா,பெப்.27

வவுனியா நகர சபையின் முதலாம் வட்டாரத்தின் உறுப்பினர் சுந்தரலிங்கம் காண்டீபன் தலைமையில் திருநாவற்குளம் மக்கள் மற்றும் சமூகமட்ட அமைப்புகளின் ஒழுங்கமைப்பில் மக்கள் சந்திப்பு ஒன்று கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நடைபெற்றது.

நகரசபையின் ஒரு வருட நிறைவில் மக்களுக்காக மேற்கொள்ளப்பட்ட பணிகள் தொடர்பாகவும், இனிவரும் காலங்களில் முன்னெடுக்கப் படும் பணிகள் தொடர்பாகவும் விளக்கமளிக்கப் பட்டதுடன்,மக்களின் பிரச்சினைகளுக்கான தீர்வுகளை எவ்வாறு பெற்றுக்கொள்வது என்பது தொடர்பான விளக்கமும் மக்களுக்கு வழங்கப்பட்டன. (க-110)



## ஐம்பது ஆயிரம் ரூபா பெறுமதியான விளையாட்டு உபகரணங்கள் வழங்கல்

வவுனியா,பெப்.27

வெங்கலச்செட்டிகுளம் பிரதேச செயலகத்துக் குட்பட்ட சின்னச் சிப்பிகுளம் இளையோரின் விளையாட்டு நடவடிக்கைகளை ஊக்குவிக்கும் முகமாக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தானின் நிதி ஒதுக்கீட்டிலிருந்து ஐம்பது ஆயிரம் ரூபா பெறுமதியான விளையாட்டு உபகரணங்கள் விளையாட்டு கழகத்தினரிடம் கையளிக்கப்பட்டன.

இதே வேளை சின்னச்சிப்பிகுளம் பகுதி முன்பள்ளியின் மலசல கூட அமைப்புக்காக இரண்டு இலட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டு வேலைகள் முழுமை பெற்றுள்ளன.

மேலும் இப்பகுதி மக்களின் விவசாயக் கிணறுகளின் திருத்த வேலைகளுக்காக இரண்டு இலட்சம் ரூபா நிதி காதர் மஸ்தானால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன், பாவற்குளம் கிராம அல் மாஸ் விளையாட்டு கழகத்துக்கு விளையாட்டு உபகரணங்களும் வழங்கி வைக்கப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-222)



## மருந்தகங்களில் மருந்தகர்கள் கட்டாயம் கடமையாற்றவேண்டும்

### ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் பணிப்பு

யாழ்ப்பாணம்.பெப் 27

வடக்கு மாகாணத்தில் இயங்கும் அனைத்து மருந்தகங்களிலும் மருந்தகர்கள் கட்டாயம் கடமை ஆற்ற வேண்டும் என்று ஆளுநர் கலாநிதீ சுரேன் ராகவன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்திலுள்ள மருந்தகங்களின் நிலைமையினை நேரில் ஆராயும் பொருட்டு ஆளுநர் யாழ்ப்பாண நகரிலுள்ள சில மருந்தகங்களுக்கு நேற்று முன்தினம் இரவு திடீர் பயணம் ஒன்றை மேற்கொண்டார்.

இதன்போது மருந்தக உரிமையாளர்களுடன் சிநேகபூர்வமாக கலந்துரையாடிய ஆளுநர் , கடையடைப்பு நாளானாலும் மக்களின் அத்தியாவசிய தேவையைப் பூர்த்திசெய்யும் நோக்கில் மருந்தகங்கள் திறந்திருந்தமையை பாராட்டினார். அத்தோடு வடக்கு மாகாணத்தில் உள்ள அனைத்து மருந்தகங்களிலும் மருந்தகங்களின் உரிமம் கட்டாயம் காட்சிப்படுத்தப்பட வேண்டியதுடன் மருந்தாளர்கள் கட்டாயம் கடமையில் இருக்கவேண்டும் என்றும் ஆளுநர் உத்தரவு பிறப்பித்தார். (ஐ-7)

## மண் அகழ்வுக் குற்றச்சாட்டில் இருவர் கைது

வவுனியா.பெப்.27

சட்டவிரோதமாக மண் அகழ்வில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவம் வவுனியா இரட்டைப் பெரியகுளம் கல்கமுவ பகுதியில் நேற்றுமுன்தினம் இடம் பெற்றது. கல்கமுவ பகுதியில் சட்டவிரோதமான முறையில் மண் அகழ்வில் ஈடுபடுவதாக கிடைத்த தகவலையடுத்து அந்தப் பகுதிக்குச் சென்ற மடுகந்தை சிறப்பு அதிரடிப் படையினர் மண் அகழ்வில் ஈடுபட்ட பெக்கோ இயந்திரம் மற்றும் டிப்பர் வாகனம் என்பவற்றைக் கைப்பற்றியுள்ளனர்.

குறித்த நடவடிக்கையில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் இரட்டைப் பகுதியைச் சேர்ந்த 23,32 வயதுடைய இருவரைக் கைது செய்து இரட்டைபெரியகுளம் பொலிஸாரிடம் பாரப்படுத்தியுள் ள னர். சந்தேகநபர்களை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது. (ஐ-110)

## மாதாந்த உதவி வழங்கல்

கொடிகாமம், பெப். 27

யேர்மனி ஸ்ருட்கார்ட்டில் இயங்கும் உறவுகளுக்கு கரம் கொடுப்போம் அமைப்பின் உறுப்பினர் திருமதி பாபுஜி தனம், ஒரே குடும்பத்தைச் சேரந்த மூன்று மாணவர்களுக்கு மாதாந்த உதவித் தொகையை 21 ஆம் திகதி வழங்கியுள்ளார்.

உலக தமிழர் மாணவர் ஒன்றிய மன்னார் மாவட்ட இணைப்பாளர் சிவானந்தன் கலந்து கொண்டு இந்த உதவியை வழங்கி வைத்தார். யேர்மனி ஸ்ருட்கார்ட் உறவுகளுக்கு கரம் கொடுப்போம் அமைப்பின் உறுப்பினர் ஈழத் தமிழர் ஒருவர் கல்விக்கு உதவும் நோக்குடன், புதுக்குடியிருப்பு தேவிபுரத்தை சேர்ந்த தனது ஒரு காலை இழந்த பகிலன் என்பவரின் பிள்ளைகளான இரண்டு மாணவர்களுக்கு மாதம் ஐயாயிரம் ரூபா வீதம் அவர்கள் படித்து முடியும் வரை தொடர்ந்து வழங்குவதாக உறுதியளித்து,

அதன் முதல் மாத பணத்தை உலக தமிழர் மாணவர் ஒன்றிய முல்லை மாவட்ட இணைப் பாளர் அனோஜன் மூலமாக வழங்கியுள்ளனர். (க-159)




## சக்கர நாற்காலி வழ்ங்கல்

வவுனியா.பெப்.27

வவுனியா கூமாங்குளத்தைச் சேர்ந்த முச்சக்கர வண்டி சாரதியான அன்ரனி சிறி என்பவருக்கு வீ 3 பவுண்டேசன் ஊடாக சிக்ஸ் ரூ ரென் ஸ்ரோர்ஸ் நிறுவனம் சக்கர நாற்காலி ஒன்றை வழங்கி உதவியுள்ளது.

மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தர் ஊடாக இந்த உதவி கோரப்பட்டபோது மலசல கூட வசதியுடன் கூடிய சக்கர நாற்காலி கடந்த 22 ஆம் திகதி வழங்கி வைக்கப்பட்டது.

நிகழ்வில் அபிவிருத்தி உத்தியோகத்தர் கிறிஸ் வசந்தனுடன்

மாவட்ட சமூகசேவை உத்தியோகத்தர் செ.சிறிநிவாசனும் கலந்து கொண்டார்.

பயனாளி நெல்மூட்டை தூக்கியபோது கால் தவறி கீழே விழுந்ததால் கால் முறிந்து நடக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. (க-222)

## பிரதிப் பொலிஸ்மா அதிபர் – வடக்கு ஆளுநர் சந்திப்பு

### பொலிஸ் பயிற்சி நிலையம் ஆரம்பிப்பது குறித்து பேச்சு

யாழ்ப்பாணம்.பெப் 27

வடக்கு மாகாண மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் ரொஷான் பெர்ணாண்டோ மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவனை ஆளுநர் செயலகத்தில் நேற்று சந்தித்தார்.

இந்தச் சந்திப்பின்போது வடக்கு மாகாணத்தில் நிலவும் தமிழ் பேசும் பொலிஸ் உத்தியோகத்தர்களின் குறைபாடு தொடர்பிலும் , வடக்கு மாகாணத்தில் பொலிஸ் சேவையை தமிழ் மொழி மூலம் முன்னெடுத்து செல்வதில் காணப்படும் குறைபாடுகள் தொடர்பிலும் ஆராயப்பட்டது. வடக்கு மாகாணத்தில் பொலிஸ் பயிற்சி நிலையம் ஒன்றை ஆரம்பிப்பது தொடர்பாகவும் இதன்போது அவதானம் செலுத்தப் பட்டமை குறிப்பிடத்தக்கது. (க-7)



வடக்கு மாகாண மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் ரொஷான் பெர்ணாண்டோவும் மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவனும் கலந்துரையாடினர்...

# பெண்களின் முன்னேற்றத்துக்காக நகரசபையில் புதிய குழு அமைப்பு

## நேற்றைய அமர்வில் தீர்மானம்

வவுனியா, பெப். 27

பெண்களின் முன்னேற்றம் தொடர்பான செயற்பாடுகளை மேற்கொள்வதற்குக் குழு ஒன்று உருவாக்கப்படவுள்ளது. வவுனியா நகரசபை பெண் உறுப்பினர்களை உள்ளடக்கியதாக அந்தக் குழு உருவாக்கப்படவேண்டும் என்று சபையில் கோரிக்கை முன்வைக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

நகரசபையின் அமர்வு தவிசாளர் இ.கௌதமன் தலைமையில் நேற்று நடைபெற்றது. அதில் கருத்துத் தெரிவித்த உறுப்பினர் சமந்தா செபநேசராணி, நகரசபையின் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் ஆலோசனைக் குழுக்களில் ஒன்றாக பெண்களுக்கான அலகு ஒன்று உருவாக்கப்படவேண்டும். பெண்கள் சிறுவர்களுக்கு ஏற்படும் வன்முறைகளைத் தடுப்பதற்கும் அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கும் இந்த அமைப்பு அவசியமானது. இந்தக் குழுவில் சபையின் பெண் உறுப்பினர்கள், ஊழியர்கள், வவுனியாவைச் சேர்ந்த நிபுணத்துவம் கொண்ட பெண்களுடன் இணைந்து ஒரு வலுவானதாக அந்தக் குழுவை உருவாக்கவேண்டும் என்று தெரிவித்தார்.

அதைச் சபை ஏற்றுக்கொண்டது.

**கொள்ளை விலையில் மாட்டிறைச்சி விற்பனை**

வவுனியாவில் மாட்டிறைச்சி அதிக விலையில் விற்பனை செய்யப்படுகிறது என்ற விடயத்தை உ்றுப்பினர் செந்தில்ரூபன் சபையின் கவனத்துக்குக் கொண்டு வந்தார்.

இதனால் நுகர்வோர் பாதிக்கப்படுகின்றனர். கடந்தபத்தாம்மாதம் நடைபெற்ற சபை அமர்வில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கமைய எலும்புடனான இறைச்சி 650 ரூபாவுக்கும் தனி இறைச்சி 750 ரூபாவுக்கும் விற்பனை செய்யவேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டிருந்தது. இது வரை நடைமுறைப்படுத்தப்படவில்லை. தீர்மானிக்கப்பட்ட விலையைவிட அதிகவிலையில் விலைப்பட்டியல் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. இதற்குச் சபை பதிலளிக்கவேண்டும் என்று தெரிவித்தார்.

சபைவரையறைசெய்த விலையின் படி விலைமனுக் கோரி கடைகள் வழங்கப்பட்டுள்ளன. அதிக விலைக்கு விற்பனை செய்வதற்கு எதிராக நடவடிக்கை எடுத்துவருகிறோம் என்று தவிசாளர் தெரிவித்தார்.

**சொற்போர்**

நான்கு மாதங்களாக நடவடிக்கைகள் எடுக்கிறீர்களா என்று செந்தில்ரூபன் கேள்வி எழுப்பினார். மாதத்துக்கு ஒருமுறை வருகின்ற உங்களுக்கு அது பற்றி தெரியுமா என்று தவிசாளர் கூற இருவருக்கும் இடையில் சற்றுநேரம் சொற்போர் நடைபெற்றது.

மற்றொருஉறுப்பினரானமதியழகன், கடல் உணவுகளும் அதிக விலைக்கு விற்பனை செய்யப்படுகின்றன. அது தொடர்பாக யாரும் முறையிடுவதில்லை. குறித்த விடயத்தில் மாடு வளர்ப்பாளர்களையும் அழைத்துக் கலந்துரையாடிவிட்டே தீர்மானம் எடுக்கவேண்டும் என்றார். குறுக்கிட்ட செந்தில்ரூபன், கடந்த கூட்டத்தில் அது பற்றித் தீர்மானம் எடுத்தபோது நீங்கள் எதிர்ப்புத் தெரிவித்திருக்க வேண்டும்.

எடுக்கப்பட்ட தீர்மானத்தை நடைமுறைப்படுத்தாமை தொடர்பாகவே கதைக்கிறேன் - என்றார். இறுதியில் குறித்த விடயம் தொடர்பாகச் சட்டநடவடிக்கை எடுக்குமாறு தவிசாளர் சபைச் செயலாளருக்குத் தெரிவித்தார்.

அதற்குப் பதிலளித்த செயலாளர் இ. தயாபரன், மாட்டிறைச்சியில் பல வகைகள் உள்ளன. மாறுபட்ட விலைகளில் விற்கப்படுகின்றன. சபை ஒரு குழு அமைத்து பண்ணையாளர்கள், இறைச்சி விற்பனையாளர்களை அழைத்துக் கலந்துரையாடி தீர்மானத்தை மீளாய்வு செய்யமுடியும் - என்றார்.

**பொலிஸ் மீது குற்றச்சாட்டு**

வவுனியா நகருக்குள் பொலிஸாரின் செயற்பாடுகள் அநாகரிகமாகவுள்ளது என்று சபையில் உறுப்பினர் சு.காண்டீபன் விசனம் தெரிவித்தார். முக்கிய வீதிகளில்போக்குவரத்துப்பொலிஸார் போக்குவரத்தைச் சீர்ப்படுத்தாமல் வாகன பரிசோதனைகளில் ஈடுபடுகின்றனர். கண்டிவீதி, மன்னார் வீதி போன்ற பகுதிகளில் வாகனம் நிறுத்துவதற்குத் தடையான இடங்களில் மறிக்கின்றனர். இதனால் நகரில் போக்குவரத்து நெரிசல் அதிகரிக்கின்றது. அவர்கள் நெரிசல் குறைந்த இடங்களில் பரிசோதனை நடவடிக்கையில் ஈடுபட முடியும். கிராமத்தின் உள்ளூர் வீதிகளில் வந்துநின்று கள்ளனைப் பிடிப்பதுபோல ஒழிந்து நின்றுவாகன ஆவணங்களைப் பரிசோதனை செய்கின்றனர்.

பொதுமக்கள் அசௌகரியங்களைச் சந்திக்கின்றனர். இவை முற்றாக நிறுத்தப்படவேண்டும். பாடசாலை நேரங்களில் கனகர வாகனங்கள் நகருக்குள் பயணிப்பதைப் பொலிஸார் நிறுத்த வேண்டும். சிறு பிள்ளைகளுக்குத்தலைக்கவசம் அணிந்து பெற்றோர் கூட்டிச்செல்ல வேண்டும் என்று தெரிவித்து இந்த விடயங்களை நகரசபை கவனத்தில் எடுக்கவேண்டும் - என்றார்.

இது தொடர்பாகபிரதிப்பொலிஸ்மா அதிபருக்கு சபை மூலமாகத் தெரியப்படுத்துவது என்று தீர்மானிக்கப்பட்டது.

**மீன் வாங்கப் பற்றுச்சீட்டு**

வவுனியாவில் மீன் வாங்குபவர்களுக்குப் பற்றுச் சீட்டுக் கொடுக்கும் நடைமுறை தொடர்பில் உறுப்பினர் பா. ஜெயவதனி கருத்து முன்வைத்தார்.

சில வியாபார நிலையங்களில் விற்கப்படும் மீன்களை வாங்கி வீடு சென்று பார்க்கும்போது பழுதடைந்துள்ளன. இரசாயனம் கலந்த நிலையிலும் உள்ளன.

பழுதடைந்த மீன் உணவுகளை மீண்டும் கொண்டுவந்து கொடுக்க முடியாத நிலை உள்ளது. அதனைக் கருத்திற்கொண்டு கடல்உணவுகள் விற்பனை செய்வோர் பற்றுச்சீட்டுக் கொடுக்கும் நடைமுறையை ஏற்படுத்த வேண்டும் என்று தெரிவித்தார். இந்த விடயம் தொடர்பாக சபையில் ஆராய்ந்து முடிவெடுக்கப்படும் என்று தீர்மானிக்கப்பட்டது.

**தனியார் கல்வி நிலையங்கள்**

தனியார் கல்வி நிலையங்கள் ஞாயிற்றுக்கிழமைகளில் இயங்க முடியாது. இரவு ஏழு மணிக்கு முன்பாக அனைத்துத் தனியார் கல்வி நிலையங்களும் தங்கள் சேவையை முடித்துக்கொள்ள வேண்டும். தனியார் கல்வி நிலையங்களில் மாணவர்களின் சுகாதார நலன்கள், வசதிகள் குறித்தும் நகரசபை கவனத்தில் எடுத்து அதனை நிவர்த்தி செய்யுமாறு வவுனியாவில் இயங்கி வரும் தனியார் கல்வி நிலையங்களுக்குஅறிவுறுத்தல்வழங்கியுள்ளது. இதனை மீறும் தனியார்கல்விநிலையங்கள்மீதுஇனி மேல் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று தவிசாளர் தெரிவித்தார். (து-110)

# ஆன்மீகச் சொற்பொழிவு

வவுனியா.பெப்.27

கொழும்பு அகில இலங்கை இந்து மாமன்றத்தின் அனுசரணையுடன் வவுனியா இந்துமாமன்றத்தால் நடத்தப்படும் ஆன்மீகச் சொற்பொழிவு வவுனியா சிறி சிந்தாமணிப் பிள்ளையார் ஆலய கலாசார மண்டபத்தில் இன்று புதன்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு நடைபெறும்.

வவுனியா இந்துமாமன்றத் தலைவர் தர்மலிங்கம் பரதலிங்கம் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக வவுனியா மாவட்ட மேலதிக செயலர் திருச்செல்வம் திரேஸ்குமார் கலந்துகொள்ளவுள்ளார்.

ஆன்மீக சொற்பொழிவுகளை தமிழ்நாடு தூத்துக்குடி இந்தியாவைச் சேர்ந்த இந்து மத ஆன்மீக தலைவர் கலாநிதி தமிழருவி பேராசிரியர் வேலாயுதம் சங்கரநாரயணன், பண்டிதர் செல்வி.சோமசுந்தரம் யோகலட்சுமி, பண்டிதர் வீரசிங்கம் பிரதீபன், நவரத்தினம் திலகன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.


இதேவேளை ஆன்மீக சொற்பொழிவுகளை கலாநிதி தமிழருவி பேராசிரியர் வேலாயுதம் சங்கரநாரயணன் இன்றும் நாளையும் பல இடங்களில் நிகழ்த்தவுள்ளார்.

இன்று சிறி சிந்தாமணிப்பிள்ளையார் ஆலய கலாசார மண்டபம், கோவில்க்குளம் சிவன் ஆலயம், வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரி, வவுனியா புதுக்குளம் மகா வித்தியாலயம் மற்றும் வவுனியா தேசிய கல்வியல் கல்லூரி ஆகியவற்றில் காலை 8 மணி தொடக்கம் இரவு 6.30 மணி வரை நடத்தவுள்ளார்.

அத்துடன் நாளை வியாழக்கிழமை வவுனியா நெடுங்கேணி மகா வித்தியாலத்தில் காலை 8 மணி தொடக்கம் 9.30 மணி வரை நடத்துவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

இந்த தொடர் ஆன்மீகச் சொற்பொழிவு நிகழ்வில் பொது மக்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

(ஐ-222)



# பாடசாலைக்கு குழாய்க்கிணறு அமைப்பு

முல்லைத்தீவு.பெப்.27

முல்லைத்தீவு தண்டுவான் அ.த.க.பாடசாலை மாணவர்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்வதற்காக கடந்த 23 ஆம் திகதி சிவன் அறக்கட்டளை கனடா அமைப்பால் குழாய்க் கிணறு அமைக்கப்பட்டு கையளிக்கப்பட்டது.

எண்பது ஆயிரம் ரூபா பெறுமதியான குழாய்க் கிணறு ஒன்றினை அமைத்து அதற்கான நீர் இறைக்கும் இயந்திரமும் பொருத்தப்பட்டு பாடசாலை அதிபர். கு. பஞ்சலிங்கத்திடம் கையளிக்கப்பட்டுள்ளது. (க-222)



*நல் நிலைக்கான பயணத்தின்*

# இறுதி நாள் நிகழ்வு முள்ளியவளையில்

வவுனியா.பெப்.27

குடும்ப மறுவாழ்வு நிலையத்தால் "நல் நிலைக்கான பயணம்" எனும் தலைப்பில் நடைபெறும் விழிப்புணர்வு நடைபயணம் நேற்று ஐந்தாம் நாளாக முள்ளியவளையில் ஆரம்பமாகி நிறைவடைந்தது.

இப்பயணமானது வவுனியாவில் இருந்து முல்லைத்தீவு வரையுள்ள நகரங்கள் மற்றும் கிராமங்களை கடந்துசென்று சமூக மத்தியில் உள்ள ஆரோக்கியத்தின் முக்கியத்து வத்தையும், மக்களின் உள ஆரோக்கியத்தை வலியுறுத்துவதுடன் அதனை மேம்படுத்தும் நோக்கில் ஏற்பாடு செய்யபட்டுள்ளது.

முள்ளியவளை பிரதேசத்தில் இருந்து காலை 9 மணியளவில் ஆரம்பமான பேரணி நீராவிப்பிட்டி வரை சென்றடைந்தது.

அதனை தொடர்ந்து மாலை 2 மணியளவில் சிலாவத்தை சந்தியில் இருந்து ஆரம்பமான பேரணி கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்தை சென்றடைந்தது. (ஐ-ரி3)

# மாலைநேர கல்வி நிலையம் ஆரம்பம்

கிளிநொச்சி,பெப்.27

கிளிநொச்சியில் பன்னங்கண்டி கிராமத்தில் மாணவர்களின் நலன் கருதி கிளி மாவட்ட மக்கள் அமைப்பினரின் நிதி அனுசரணையில் கல்வி வளர்ச்சி அறக்கட்டளையின் ஒழுங்குபடுத்தலில் மாலைநேர கல்வி நிலையம் 24 ஆம் திகதி பன்னங்கண்டி பொதுநோக்கு மண்டபத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

ஆசிரியர் சத்தியானந்தன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் ஓய்வு நிலை கோட்டக்கல்விப் பணிப்பாளர் ந.சோதிநாதன், கல்வி வளர்ச்சி அறக்கட்டளை செயலர் சிறிகௌரிபாலா,கிராம அலுவலர், பன்னங்கண்டி அ.த.க பாடசாலை அதிபர்,சனசமூக நிலைய தலைவர்,கிராம அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள்,ஆசிரியர்கள், கிராம மக்கள், மாணவர்கள் எனப்.பலரும் கலந்து கொண்டனர். (க-222)



## காணாமலாக்கப்பட்ட குற்றச்சாட்டுள்ள கரன்னகொடவுக்காக வழிபாடு

கொழும்பு, பெப். 27

கொழும்பில் 11 இளைஞர்கள் கடத்தப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்ட வழக்கில் 14 ஆவது சந்தேக நபராகச் சேர்க்கப்பட்டுள்ள இலங்கையின் முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் வசந்த கரன்னகொடவுக்கு ஆசி வேண்டி சிறப்பு வழிபாடுகள் நடத்தப்பட்டுள்ளன.

கொழும்பு 7 கிரகரி வீதியில் உள்ள சம்போதி விகாரையில் நேற்றுமுன்தினம் மாலை 5 மணி தொடக்கம், அட்மிரல்வசந்தகரன்னகொடவுக்கு ஆசி வேண்டி சிறப்பு வழிபாடுகள் நடத்தப்பட்டன.

பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலர் கோத்தபாய ராஜபக்சவே இதற்கான ஒழுங்குகளை மறைமுகமாகச் செய்துள்ளார்.

கோத்தபாய ராஜபக்சவின் பேச்சாளரான மிலிந்த ராஜபக்ச, இந்த வழிபாடுகளில் பங்கேற்குமாறு சமூக வலைத்தளங்களின் ஊடாக அழைப்பு விடுத்துள்ளார்.

அட்மிரல் வசந்த கரன்னகொடவைக் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கைது செய்யவுள்ளனர் என்று தகவல்கள் வெளியாகியுள்ள நிலையிலேயே அவருக்காக வழிபாடு நடத்தப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (கு)

# இலங்கைக்கு அழுத்தம் கொடுக்கும் தீர்மானம் எதுவும் வரவாய்ப்பில்லை

### *கலாநிதி ஜெஹான் பெரேரா தெரிவிக்கிறார்*



கொழும்பு, பெப். 27

ஜெனிவாவில் நடக்கும் ஐ.நா மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தொடரில் இலங்கைக்கு அழுத்தம் கொடுக்கும் புதிய தீர்மானம் ஒன்று இந்தமுறை வரப்போவதில்லை. புதிய தீர்மானம் முன்வைக்கப்பட்டாலும்கூட அது கடந்த கால தீர்மானங்களை விடவும் அழுத்தம் குறைந்ததாகவே அமையும் என்று தேசிய சமாதானப் பேரவையின் தலைவர் கலாநிதி ஜெஹான் பெரேரா தெரிவித்தார்.

கடந்த கால ஆட்சியைப் போலல்லாது இந்த ஆட்சியில் பன்னாடுகளின் ஆதரவு அரசுக்குக் கிடைத்துள்ளது.

இலங்கையின் இக்கட்டான நிலைமைகளில் பன்னாடுகளின் உதவிகளைப் பெற்றுக்கொள்ள முடிந்துள்ளது.

கடந்த காலங்களில் இதற்கு முந்தைய கூட்டத்தொடர்களில் இலங்கை அரசு கொடுத்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்படுவதில் கால தாமதம் ஏற்பட்டுள்ளது.

எனினும் மெதுவான பயணம் ஒன்றை ஆரம்பித்தேனும் இலக்கை நோக்கிப் பயணிக்கின்றது என்ற காரணத்தை பன்னாடுகள் ஏற்றுகொண்டுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (கு)

## சிறிசேனவும் விக்கிரமசிங்கவும் தீர்மானங்களை மாற்றுகின்றனர்

### *மகிந்த ராஜபக்ச கூறுகிறார்*



அரசதலைவரின் தீர்மானத்தை தலைமை அமைச்சர் மாற்றுகின்றார். அதேபோன்று தலைமைஅமைச்சரின் தீர்மானத்தை அரசதலைவர் மாற்றுகின்றார். இவ்வாறு செயற்படுவதால் நாடு முழுவதும் நிலையில்லாத ஒரு தன்மை காணப்படுகிறது என்று எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

கொக்கலயில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

"நாட்டுக்குள்ளும் அரசுக்குள்ளும் நிலையில்லாத தன்மை காணப்படுவதால் முடிவெடுக்கப்பட வேண்டிய சந்தர்ப்பத்தில் தேவையான முடிவுகள் எடுக்கப்படாமல் ஒருவரின் கையிலிருந்து இன்னொருவரது கைக்குச் சென்றே தீர்மானங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

இதனால் காலதாமதம் அதிகரித்துள்ளது. மக்களுக்கான செயற்றிட்டங்களைக்கூட உரிய முறையில் நிறைவேற்ற முடியாத நிலமை உருவாகியுள்ளது. இதனை விரைவாக முடிவுக்குக் கொண்டுவர வேண்டியது மிக அவசியம்.

இதேவேளை விவசாயத்தின் ஊடாக நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பக்கூடிய காலம் மிக விரைவில் ஏற்படப் போகின்றது. அதில் மக்களின் தீர்மானமே முக்கியமாகக் காணப்படும் என்று மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார். (கு)

# மனித உரிமைகள் விடயத்தில் இலங்கை சாதகமான நகர்வு

### இருப்பினும் தீர்மானம் வரும் பிரிட்டன் தெரிவிப்பு

கொழும்பு, பெப். 27

மனித உரிமைகள் விவகாரம் தொடர்பாக இலங்கை சில சாதகமான நகர்வுகளை முன்னெடுத்துள்ளது என்று பிரிட்டன் அயலுறவு அமைச்சர் அகமட் தெரிவித்துள்ளார்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 40 ஆவது கூட்டத்தொடர் ஜெனிவாவில் நேற்றுமுன்தினம் ஆரம்பமானது. இந்தக் கூட்டத்தொடரில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

"நிலையான நல்லிணக்கத்தை எட்டுவதற்கு, ஐ.நா. மனித உரிமைகள் சபைக்கு அளித்த வாக்குறுதிகளை இலங்கை முழுமையான நிறைவேற்ற பிரிட்டன் ஊக்குவிக்கிறது.

மேலதிக காணிகளை விடுவிப்பதற்கு எடுத்துள்ள முடிவையும், இழப்பீடு வழங்கும்செயலகத்தை உருவாக்கும் முடிவையும் பிரிட்டன் பாராட்டுகிறது.

தற்போதைய 40 ஆவது கூட்டத்தொடரில், இலங்கை தொடர்பான தீர்மானம் ஒன்றை பிரிட்டன் முன்வைக்கும்." என்றும் அவர் தெரிவித்துள்ளார். (கு)

## இந்தியாவிலிருந்து தாயகம் திரும்பியவர்களுக்கு உதவி

வவுனியா பூவரசன்குளம், எருக்கலங்கல்லுப்பகுதியில் இந்தியாவிலிருந்து தாயகம் திரும்பிய இரண்டு குடும்பங்களுக்கு தற்காலிக வீட்டுக்கான தகரங்கள் உலர் உணவுப் பொருள்கள் தமிழ் விருட்சம் அமைப்பால் நேற்று முன்தினம் வழங்கிவைக்கப்பட்டுள்ளன.

போர் காரணமாக இடம்பெயர்ந்து இந்தியா சென்று, தற்போது மீண்டும் தாயகம் திரும்பி வந்தவர்கள் வீட்டுத்திட்டங்கள் வாழ்வாதார உதவிகள் இன்றி பல்வேறு துன்பங்களை அனுபவித்து வருகின்றனர். அந்தவகையில் பூவரசன்குளம் எருக்கலங்கல் பகுதியில்வசித்துவரும் இருகுடும்பங்களுக்கு, லண்டனில் புலம் பெயர்ந்து வசித்து வரும் கங்கை வேணியன் தனது மகள் கவினயாவின் பிறந்த தினத்தை முன்னிட்டு வவுனியா தமிழ் விருட்சம் அமைப்பின் தலைவர் எஸ். சந்திரகுமார் ஊடாக தற்காலிக வீட்டுக்கு தலா 20 தகரங்களும், இரு குடும்பங்களுக்கு மான உலர் உணவுப் பொருள்களையும் வழங்கி வைத்துள்ளார். (க)

## பல்கலை வளாகத்துக்கு நுழையத் தடை

யாழ்ப்பாணம், பெப்.27

யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் தொழில்நுட்ப பீடத்தைச் சேர்ந்த மாணவர்கள் அறிவியல் நகரில் அமைந்துள்ள யாழ். பல்கலைக்கழக தொழில்நுட்ப பீட வளாகம், யாழ். பல்கலைக் கழகத்தின் ஏனைய பீட வளாகங்கள் மற்றும் பிரதான வளாகம் என்பற்றுள் உள்நுழைவதற்குத்தற்காலிகதடை விதிக்கப்பட்டுள்ளது .உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் யாழ். பல்கலைக்கழகத்துணைவேந்தர்விடுத்துள்ள அறிவித்தலுக்கமைய விடுதிகளில் தங்கியுள்ள அனைத்து மாணவர்கள் உடனடியாக அங்கிருந்து வெளியேற வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. (எ)




## கேப்பாபிலவு காணி விடுவிப்பை வலியுறுத்தி கொழும்பில் இடம்பெறவுள்ளது ஆர்ப்பாட்டம்

### நேற்றுப் புறப்பட்டது வாகனப்பேரணி



முல்லைத்தீவு, பெப்.27

கேப்பாபிலவில் இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்ட மக்களுடைய காணிகளை விடுவிக்குமாறு வலியுறுத்தி எதிர்வரும் இரண்டாம் திகதி கொழும்பில் ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெறவுள்ளது. ஆர்ப்பாட்டத்துக்கான வாகனப்பேரணியும்காணிகளைவிடுவிக்கக் கோரிய கையெழுத்து வேட்டையும் நேற்று கேப்பாபிலவில் இருந்து ஆரம்பித்தது.

தங்கள் பூர்வீக காணிகளை விடுவிக்ககோரி 727 ஆவது நாளாக தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் மக்களுடன், காணி உரிமைக்கான மக்கள் இயக்கம் இணைந்து வட்க்கு பகுதிகளில் இன்று வரை படையினர் ஆக்கிரமிப்பில் உள்ள காணிகளை மக்களிடம் மீளக் கையளிக்க அதிகாரிகளுக்கு அழுத்தம் கொடுப்போம் என்பதை வலியுறுத்திய கவனவீர்ப்பு வாகனப் பேரணி ஒன்றை ஆரம்பித்துள்ளனர். அந்த வாகனப் பேரணி கேப்பாபிலவு வீதியால் முல்லைத்தீவு மாவட்டச் செயலகம் வரை சென்றடைந்தது. அங்கு அங்கு அரச தலைவருக்கான மனு உதவி மாவட்டச்செயலாளர் ஆ.லதுமீராவிடம் கையளிக்கப்பட்டது.

பேரணி தொடர்ந்து முல்லைத்தீவில் இருந்து பரந்தன் ஊடாக கிளிநொச்சி சென்றடைந்து அங்கிருந்து யாழ்ப்பாணம் சென்றடைந்து பூநகரி ஊடாக மன்னார் சென்று, அங்கிருந்து வவுனியா சென்றடைந்து வவுனியாவில் இருந்து நீர்கொழும் சென்று அங்கிருந்து கொழும்பு சென்றடையவுள்ளது. எதிர்வரும் இரண்டாம் திகதியன்று கொழும்பில் அரசதலைவர் செயலகத்திற்கு முன்பாக கேப்பாபுலவு மக்களுக்காக பாரியளவிலான போராட்டம்ஒன்றும்முன்னெடுக்கப் படவுள்ளது. (21,ரி3)



## காணி உரிமையை வெற்றி கொள்வோம் கையொப்பம் திரட்டும் பெரும் போராட்டம்

கிளிநொச்சி,பெப்.27

போரால் இடம்பெயர்ந்த மக்களின் காணி உரிமையை வெற்றி கொள்வோம் எனும் தொனிப் பொருளில் கையொப்பம் திரட்டும் போராட்டம் நேற்று பிற்பகல் கனகபுரம் வீதியில் முன்னெடுக்கப்பட்டது.

கிளிநொச்சி தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கம், காணி உரிமைக்கான மக்கள் ஒன்றியம், பிரஜா அபிலாச வலையமைப்பு ஆகியன இணைந்து இந்த போராட்டத்தை முன்னெடுத்தனர்.

கையெழுத்து திரட்டி நிறைவில் கொழும்பில் பல்வேறு தரப்பினருக்கும் மனு கையளிக்க உள்ளதாகவும், மாபெரும் போராட்டம் ஒன்றை முன்னெடுக்க உள்ளதாகவும் ஏற்பாட்டாளர்கள் தெரிவிக்கின்றனர்.(க-35)

# ஹெரோய்ன் கடத்தலுக்கும் மதூஷுக்கும் தொடர்பில்லை

*பொலிஸார் தெரிவிக்கின்றனர்*

கொழும்பு, பெப். 27

இலங்கையில் கைப்பற்றப்பட்ட பெருந்தொகை போதைப்பொருள் கடத்தலுக்கும், மாகந்துர மதூஷின் குழுவுக்குமிடையில் எந்த விதத் தொடர்பும் கிடையாது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

டுபாயிலிருந்தே குறித்த போதைப் பொருள் இலங்கைக்கு அனுப்பப்பட்டுள்ளது என்றும், தெற்காசிய நாடொன்றிலுள்ள போதைப்பொருள் கடத்தல் காரர் ஒருவரும் இதனுடன் தொடர்புபட்டுள்ளார் என்றும் பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பன்னாடு ஒன்றில் பதுங்கியுள்ள இலங்கைப் போதைப்பொருள் கடத்தல்காரர் ஒருவர் வழங்கிய தகவலுக்கமைய, பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்புப்பிரிவினரும், பொலிஸ் சிறப்பு அதிரடிப் படையினரும் தேடுதல் வேட்டையில் இறங்கினர். இதையடுத்தே கொள்ளுப்பிட்டி, வர்த்தகக் கட்டடத் தொகுதியின் வாகன தரிப்பிடத்தில் வைத்து இருவர் மடக்கிப்பிடிக்கப்பட்டனர்.

சிறிய ரக வாகனம் இரண்டிலிருந்து 294 கிலோ 490 கிராம் நிறையுடைய ஹெரோய்ன் கண்டுபிடிக்கப்பட்டது. இந்தப் போதைப்பொருள் 3ஆயி ரத்து 533 மில்லியன் ரூபா பெறுமதியுடையது என்று தெரிவிக்கப்பட்டது. (த)

## சிறப்புரிமை உறுப்பினர்கள் அனைவருக்கும் பொதுவானதே

*சபை முதல்வர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவிப்பு*

கொழும்பு, பெப். 27

நாடாளுமன்ற சிறப்புரிமை நாடாளுமன்ற உறுப்பினர்கள் சகலருக்கும் பொதுவானது. அமைச்சர்கள் என்பதால் அவர்களுக்குச் சிறப்புச் சலுகை வழங்க முடியாது என்று சபை முதல்வரும் அமைச்சருமான லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஹொரவப்பொத்தானை தொகுதி அமைப்பாளர் கூட்டத்தில் நேற்றுமுன்தினம் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

தற்போதுள்ள அமைச்சர்களுக்கு எதிராகப் பல்வேறு குற்றச்சாட்டுக்கள் தொடர்ந்தும் முன்வைக்கப்பட்டு வருகின்றன. அவர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் எழும்போது அவர்கள் பக்கத்தில் நியாயம் காணப்படுமாக இருந்தால் அவர்களைப் பாதுகாக்க வேண்டியது சபை முதல்வரின் கடமை. சில குற்றச்சாட்டுக்கான தகவல்கள் குற்றப் புலனாய்வுப் பிரிவிடம் கையளிக்கப்பட்டுள்ளன. ஆனால் நாடாளுமன்றில் யாரும் கொலை செய்யப்பட்டிருந்தால் அதனை மூடி மறைக்க முடியாது.

அந்தவகையில், நாடாளுமன்றிலுள்ள சொத்துக்களுக்குச்சேதம் ஏற்படுத்தியவர்கள் எவராக இருந்தாலும் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்துள்ளார். (த)

## 5 20,762 கிலோ ஹெரோய்ன் இந்தவருடத்தில் மீட்பு

இந்த வருடத்தின் ஜனவரி மாதம் முதலாம் திகதியிலிருந்து நேற்று வரையான காலப் பகுதிக்குள் 5 லட்சத்து 20 ஆயிரத்து 762 கிலோக்கிராம் ஹெரோய்ன் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

இவற்றுடன் தொடர்புடையவர்களென 6 ஆயிரத்து 651 சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவன் குணசேகர தெரிவித்துள்ளார்.

கடந்தாண்டு 7 லட்சத்து 32 ஆயிரத்து129 கிலோக்கிராம் ஹெரோய்ன் கைப்பற்றப்பட்டுள்ளது. இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர்களென 40 ஆயிரத்து 998 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இலங்கை வரலாற்றில் மிக அதிகளவாக 234 கிலோக்கிராம் ஹெரோய்ன் போதைப் பொருள் ஒரே தடவையில் கொழும்பு கொள்ளுப்பிட்டியில் மீட்கப்பட்டிருந்தது. அவற்றின் பெறுமதி 2 ஆயிரத்து 945 மில்லியன் ரூபா என்றும் தெரிவிக்கப்பட்டது. (த)

## சிறுதொழில் உற்பத்திகளை சந்தைப்படுத்த அலைபேசிப் பட்டியல்

கொழும்பு, பெப். 27

மேல் மாகாணத்தில் பரந்து வாழும் சுய தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் எதிர்நோக்கும் முதன்மைப் பிரச்சினைக்குத் தீர்வைப் பெற்றுக்கொடுக்க அவர்களது உற்பத்திகளைச் சந்தைப்படுத்த அலைபேசி பெயர்ப் பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது. அதை மேல் மாகாண முதலமைச்சர் இசுற தேவப்பிரிய அரசதலைவரிடம் நேற்றுமுன்தினம் கையளித்தார்.

சுயதொழிலில் ஈடுபட்டுள்ளவர்களும் சாதாரண நுகர்வோரும் இந்தச் செயற்றிட்டத்தின் ஊடாக ஒருவரோடு ஒருவர் தொடர்புபடுத்தப்படுகின்றனர். இதனூடாக சுயதொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு விரிவான சந்தை வாய்ப்புக் கிடைக்கும்.

மேல் மாகாணத்தின் சகல பிரதேச செயலாளர் பிரிவுகளையும், கிராம அலுவலர் பிரிவுகளையும் உள்ளடக்கும் வகையில் சுயதொழில்களில் ஈடுபட்டுள்ள நபர்கள் பற்றிய தகவல்களை ஒன்றுதிரட்டி தேர்ந்தெடுக்கப்பட்ட சுயதொழிலாளர்களின் தகவல்கள் அடங்கிய அலைபேசிப் பெயர்ப்பட்டியல், இதற்காக தயாரிக்கப்பட்ட அலைபேசி மென்பொருள் (மொபைல் அப்ஸ்) மற்றும் இணையதளத்தில் உள்ளடக்கப்படும்.

அச்சிடப்பட்ட 20 ஆயிரம் தொலைபேசி பெயர்ப்பட்டியல் மேல் மாகாணத்தின் அரச, தனியார் நிறுவனங்கள் மற்றும் அமைப்புக்களின் ஊடாக பகிர்ந்தளிக்கப்படவுள்ளது. இணையத்தளத்தின் ஊடாகவும் அலைபேசி பெயர்ப்பட்டியலைப் பெற்றுக்கொள்வதற்கான வசதிகள் காணப்படுகின்றன.

அதனை அரசதலைவர் மைத்திரிபால சிறிசேனவிடம் கையளித்தார். (த)

## பேருந்துகளில் ஒலிக்கவிடப்படும் பாடல்கள் சத்தத்துக்கு வரையறை

*தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவிப்பு*

கொழும்பு, பெப். 27

போக்குவரத்துச் சேவையில் ஈடுபடும் பேருந்துகளில் ஒலிக்கின்ற பாடல்களையும், அவற்றின் சத்தத்தையும் வரையறைக்குட்படுத்தப்படும் விதிமுறைகள் விரைவில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன என்று தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

பாடல்கள் இசைக்க விடப்படும் சத்தத்தின் அளவைக் கட்டுப்படுத்தும் நோக்கில் புதிய டெசிபள் மட்டங்கள் வரையறை செய்யப்படவுள்ளன என்று ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்தார்.

இதற்காக எத்தகைய பாடல்களை பேருந்துகளில் ஒலிக்க விடலாம் என்பதைத் தெரிவுசெய்வதற்காகக் கலைஞர்கள் அடங்கிய குழு நியமிக்கப்படவுள்ளது.

இது தொடர்பான விதிமுறைகளை முறையாக நடைமுறைப்படுத்தத் தவறும் நடத்துநர்களுக்கும் சாரதிகளுக்கும் எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார். (த)

## கொழும்புத் துறைமுகம் 18 மாதங்களில் 'ஸ்மார்ட்' துறைமுகமாக மாறிவிடும்

*அமைச்சர் சாகல தெரிவிப்பு*

கொழும்பு, பெப். 27



கொழும்புத் துறைமுகம் 18 மாதங்களுள் இலங்கையின் ஸ்மார்ட் வர்த்தக துறைமுகமாக மாற்றியமைக்கப்படும். துறைமுக செயற்பாடுகளுக்குத் தற்போது நவீன தொழில்நுட்ப முறைகள் அறிமுகப்படுத்தப்படுகின்றன என்று துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சர் சாகல ரத்னாயக்க தெரிவித்தார்.

அவர் அனுப்பிய ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது:

கொழும்புத்துறைமுகத்தை ஸ்மார்ட் துறைமுகமாக மாற்றியமைப்பது காலத்தின் தேவை என்று தெரிவித்த அமைச்சர், கொழும்புத் துறைமுகத்தின் முதன்மை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் ஆசிய அபிவிருத்தி வங்கி இந்தத் திட்டத்துக்கு ரூபா 929 மில்லியன்கள் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

கொழும்புத் துறைமுகம் ஸ்மார்ட் துறைமுகமாக மாற்றியமைப்பதன் மூலமாக ஒன்றிணைந்து கூட்டாகச் செயற்படும் திறன் அதிகரிக்கும்.

தொழில்நுட்ப அபிவிருத்தி எனும் அடிப்படை திட்டத்தை மேம்படுத்துவதன் மூலமாக நீண்டகால அபிவிருத்திச் செயற்பாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்ல இயலும்.

இந்தத்திட்டத்தின்கீழ் முனையங்களின் தொழில்நுட்ப வசதிகளை அபிவிருத்தி செய்வதன் ஊடாக முனைய முகாமைத்துவம் மற்றும் சரக்கு கையாளல் உரிய முறையில் நடத்தப்படும்.

இந்த அனைத்துச் செயற்பாடுகளும் 12-18 மாதங்களுள் நிறைவடையுமென்று அமைச்சர் தெரிவித்தார்.

உயர் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி குறுகிய காலப் பகுதியில் கொழும்புத் துறைமுக முனையம் அதிகளவு கொள்கலன்கள் செயற்பாடுகளை முன்னெடுத்து வினைத்திறனான முனையமாக செயற்படுமென்று அமைச்சர் ரத்னாயக்க தெரிவித்தார். (த)


## தரம் ஒன்று மாணவர்களுக்கு சீருடை வவுச்சா இன்னுமில்லை

கொழும்பு, பெப். 27

இந்த வருடம் தரம் ஒன்றில் சேர்க்கப்பட்ட சுமார் 3 லட்சத்து 20 ஆயிரம் மாணவர்களுக்குச் சீருடைப் பற்றுச்சீட்டு இன்னமும் வழங்கப்படவில்லை என்று இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

நாட்டில் உள்ள 42 இலட்சம் மாணவர்களுக்கான சீருடை பற்றுச்சீட்டுக்களைத் தயாரித்தபோது புதிதாகச் சேர்க்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கையைச் சேர்த்துக் கொள்ளவில்லை என்பதைக் கல்வி அமைச்சு உறுதிப்படுத்தியிருக்கின்றது என்றும் இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்தது. (த)

கேலிச்சித்திரம்



நன்றி: நாமல் அமரசிங்க

## அலுகோசு பதவிநிலைக்கு வெளிநாட்டைச்சேர்ந்தவர்!

*சிறைச்சாலைகள் அமைச்சுத் தெரிவிப்பு*

கொழும்பு, பெப். 27

தூக்குத் தண்டனையை நிறைவேற்றும் அலுகோசு பதவிக்கு வெளிநாட்டைச் சேர்ந்த ஒருவரை நியமிப்பது தொடர்பில் கவனம் செலுத்தியுள்ளதாகச் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

அலுகோசு பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. எனினும், கிடைத்துள்ள விண்ணப்பங்களின் எண்ணிக்கை தொடர்பில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாக அமைச்சின் உயர் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

இந்தநிலையில் வெளிநாட்டவரை அலுகோசு பதவிக்கு நியமிப்பதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று அவர் தெரிவித்தார்.

இதேவேளை, அலுகோசு பதவிக்கான விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் தினம் நேற்றுடன் நிறைவடைந்துள்ளதாகச் சிறைச்சாலைகள் ஊடகப்பேச்சாளர் துஷார உபுல்தெனிய தெரிவித்தார். இலங்கையில் இறுதியாக 1976 ஆம் ஆண்டு வெலிக்கடைச் சிறைச்சாலையில் தூக்குத் தண்டனை நிறைவேற்றப்பட்டது. (த)

## தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் எம்.எம்.மொஹமட் விரைவில் ஓய்வு



யாழ்ப்பாணம், பெப். 27
தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் எம்.எம்.மொஹமட் எதிர்வரும் மார்ச் மாதம் 8ஆம் திகதியுடன் ஓய்வுபெறவுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

'யாழ்ப்பாணத்திலுள்ளவர்களுக்கு மொஹமட்டை நன்றாகத் தெரிந்திருக்கும். அவர் பல தேர்தல்களுக்காக இங்கே வந்து பணியாற்றியருந்தார். தேர்தல்கள் ஆணைக்குழுவால் அவர் இங்கே சிறப்புப் பிரதிநிதியாக அனுப்பப்பட்டிருந்தார். அவர் எதிர்வரும் 8ஆம் திகதியுடன் ஓய்வுபெற்றாலும் எம்முடன் தொடர்ந்து பணியாற்றுவார் என்று எதிர்பார்கின்றேன்' என மகிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

இதன் பின்னர் கருத்துத் தெரிவித்த மொஹமட், யாழ்ப்பாணம் எனக்கு மறக்க முடியாத பிரதேசம். என் நேசத்துக்குரியமண். எனக்குத் தமிழ் படிப்பித்த ஆசிரியை இந்த மண்ணைச் சேர்ந்தவர். எனக்கு இதுவரை ஒத்துழைத்த அனைவருக்கும் நன்றி கூறுகின்றேன்,- என்றார். (ஒ.5)

## முஸ்லிம்களை வழிப்படுத்த வேண்டியுள்ளது

*அமைச்சர் எம். எச். ஏ. ஹலீம் தெரிவிப்பு*

கொழும்பு, பெப். 27
இலங்கை வரலாற்றில் ஆகக் கூடுதலான போதைப் பொருள் கடத்தலுடன் சம்பந்தப்பட்டவர்கள் என்ற குற்றச்சாட்டில் முஸ்லிம்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸாரை மேற்கோள்காட்டிச் செய்திகள் வெளியாகியுள்ளன.

பள்ளிவாசல்களில், பாடசாலைகளில் இதன் சீரழிவு கொடூரம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் மூலமாகவே இதற்கான தீர்க்கமான பரிகாரத்தைக் காண முடியும் என்று முஸ்லிம் சமயம் கலாசாரம் மற்றும் தபால் துறை அமைச்சர் எம். எச். ஏ. ஹலீம் தெரிவித்தார். கொழும்பு கசாவத்தை முஸ்லிம் பாடசாலையில் அண்மையில் நடந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

பௌத்த மக்களின் புராதன புனித இடங்களுக்குச் சென்று தூபிகளில் ஏறிப் புகைப்படம் எடுத்தல் தொடர்பாக சிலர் கைது செய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்டுள்ளனர். இளைய சமுதாயத்தைப் பொறுத்தவரையில் நாம் எங்கே நிற்கிறோம்? நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்பவை பற்றித் தெளிவாகச் செயற்பட வேண்டிய அவசரத் தேவைப்பாடு ஏற்பட்டுள்ளது.

போதைப் பொருள் பாவனையால் நாடு சீரழிந்து செல்கிறது. நகர்ப்புறப் பகுதிகளில் இருந்துவந்த போதைப் பொருள் பாவனை கிராமங்கள் உள்ளிட்ட நாடு முழுவதும் தீவிரமாகப் பரவுகிறது. இவற்றிலிருந்து பிள்ளைகளைக் காப்பாற்றவேண்டும் என்று தெரிவித்தார். (த)

## குழப்பங்கள் பற்றிய விசாரணை அறிக்கை பக்கச்சார்பாகவுள்ளது

*பிவித்துரு ஹெல உறுமய கூறுகின்றது*



கொழும்பு, பெப். 27
கடந்த நவம்பர் மாதம் நாடாளுமன்றில் இடம்பெற்ற குழப்பங்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிராக எந்தவிதக் குற்றச்சாட்டுக்களும் சுமத்தப்படவில்லை. இது பக்கச்சார்பான அறிக்கை என்று பிவித்துரு ஹெல உறுமயவின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார். கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின்போது அவர் இந்தக் குற்றச்சாட்டைச் சுமத்தினார்.

இந்தக் குழப்பம் தொடர்பாக 59பேர் மீது குற்றம்சாட்டப்பட்டுள்ளது. இதில் 54 பேர் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பைச் சேர்ந்தவர்கள். ஏனைய நான்கு பேர் ஐக்கிய தேசியக் கட்சியையும் ஒருவர் ஜே.வி.பியையும் சேர்ந்தவர்களாவர்.

இந்தநிலையில் குற்றச்சாட்டுக்கள் யாவும் பக்கசார்ப்பானவை என்பது ஊர்ஜிதமாகிறது. எனவே அந்தக் குற்றச்சாட்டுக்களை தாம் நிராகரிப்பதாக உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

மகிந்த ராஜபக்சவுக்கு தலைமைஅமைச்சர் பதவி வழங்கியதும் அதனை ஐக்கிய தேசிய முன்னணி மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஜே.வி.பி. எதிர்த்தது. நாடாளுமன்றில் வாக்கெடுப்பின்போது பெரும் குழப்பம் ஏற்பட்டது. அதன்போதே கதிரைகள் உள்ளிட்ட பொருள்கள் பல சேதமாக்கப்பட்டிருந்தன. (த)

# ஜனநாயகம் தொடர்பில் குறுந்திரைப்படப் போட்டி

## *தேர்தல்கள் ஆணைக்குழு ஏற்பாடு*

*யாழ்ப்பாணம், பெப். 27*
*தேர்தல்கள் ஆணைக்குழு 2017 - 2020 மூலோபாயத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஜனநாயகம் தொடர்பாக சமூக கருத்தாடலொன்றை ஏற்படுத்துவதற்காக ஜனநாயகம், மக்கள் இறைமை மற்றும் சர்வசன வாக்குரிமை தொடர்பில் மக்களை அறிவுறுத்துவதற்காக 'பிரஜை' என்ற பெயரில் குறுந்திரைப் படப் போட்டியை ஏற்பாடு செய்துள்ளது.*




இவ்வாறு தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்ற தேர்தல்கள் ஆணைக்குழுவின் பத்திரிகையாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனநாயகம், மக்கள் இறைமை மற்றும் சர்வசன வாக்குரிமை தொரடர்பாக பொது மக்களிடத்தில் புரிந்துணர்வை மேம்படுத்தலுடன், கலைத்துறை வல்லுனர்கள், இளம் படைப்பாளிகள் மற்றும் திரைப்படத் தயாரிப்பாளர்கள் , கல்வியியலாளர்கள் பாடசாலை மாணவ மாணவிகள் ஆகியோரை இந்தக் கருத்திட்டத்தினூடாக தேர்தல் ஆணைக்குழுவின் பங்குதாரர்களாக இணைத்துக் கொள்தல் இதன் பிரதான நோக்கமாகக் காணப்படுகின்றது.

ஜனநாயகம் தொடர்பான புதுமையான மற்றும் ஆக்கபூர்வமான படைப்புக்களின் ஊடாக மக்களை அறிவுறுத்துவதற்காக குறுந்திரைப்படங்களைத் தயாரித்துக் கொள்ள எதிர்பார்த்துள்ளோம்.

குறுந்திரைப்பட விழா போட்டியில் மும்மொழிகளிலும் குறுந்திரைப்படங்களைச் சமர்பிக்க முடியும். அவை 5 நிமிடங்களுக்கு மேற்பட்டவையாக இருக்கக் கூடாது. எச்.டி. தொழிநுட்பத்தைப் பயன்படுத்தி தயாரிக்கப்பட வேண்டும் என்ற நிபந்தனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

திறந்த பிரிவில் போட்டியிட்டு முதலாம் இடத்தைப் பெறுபவருக்கு ஒரு இலட்சத்து 25 ஆயிரம் ரூபாவும், இரண்டாம் இடத்தைப் பெறுபவருக்கு ஒரு இலட்சம் ரூபாவும், மூன்றாம் இடத்தைப் பெறுபவருக்கு 75 ஆயிரம் ரூபா பணப்பரிசிலும் வழங்கப்படவுள்ளன.

பாடசாலைகளுக்கூடாக போட்டியிட்டு முதலாம் இடத்தைப் பெறுபவருக்கு 50 ஆயிரம் ரூபாவும், இரண்டாம் இடத்தைப் பெறுபவருக்கு 30 ஆயிரம் ரூபாவும், மூன்றாம் இடத்தைப் பெறுபவருக்கு 20 ஆயிரம் ரூபா பணப்பரிசிலும் வழங்கப்படவுள்ளன. இதற்கு மேலதிகமாக குறுந்திரைப்படத்தை சமர்பிக்கும் அனைத்துப் படைப்பளிகளுக்கும் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

தயாரிக்கப்படும் குறுந்திரைப்படங்கள் மே மாதம் 15 ஆம் திகதி வரை ஏற்றுக் கொள்ளப்படுவதோடு, அவற்றை தேர்தல்கள் ஆணைக்குழு அல்லது களனி பல்கலைக்கழகத்தில் ஒப்படைக்க முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ.5)

## போதைப் பொருள் ஒழிப்புக்கு 19ஆவது திருத்தமே காரணம்

*தலைமைஅமைச்சர் தெரிவிக்கிறார்*

கொழும்பு, பெப். 27
போதைப் பொருளுக்கு எதிரான பொலிஸாரின் நடவடிக்கைக்கு 19 ஆவது அரசமைப்புத் திருத்தமே பெரிதும் உதவியாக இருக்கின்றது என்று தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அத்தோடு 19ஆவது திருத்தத்தின் விளைவாக எந்தவொரு அரசியல் தலையீடுமின்றி பொலிஸ் சுதந்திரமாக செயற்பட முடிந்தது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

புளத்சிங்களப் பகுதியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றியபோது அவர் இவ்வாறு தெரிவித்தார். 19 ஆவது திருத்தச் சட்டம் கடந்தசில நாள்களாக விமர்சிக்கப்பட்டது. ஆனால் 19ஆவது திருத்தம் இல்லாவிட்டால், போதை பொருள்கள் மீதான நடவடிக்கைகளில் பொலிஸார் ஈடுபட்டிருக்க முடியாது.

இலங்கை வரலாற்றில் மீட்கப்பட்ட மிகப்பெருந் தொகையான 294.49 கிலோக்கிராம் ஹெரோயின் போதைப் பொருள் கடந்த வார இறுதியில் கொழும்பில் கார் ஒன்றில் இருந்து மீட்கப்பட்டிருந்தது. இந்த நிலையில் தலைமை அமைச்சர்மேற்கண்டவாறுகூறியுள்ளார்.(த)

## உந்துருளி விபத்தில் மாணவன் உட்பட மூவர் படுகாயம்

உந்துருளி விபத்தில் பாடசாலை மாணவன் உட்பட மூவர் காயமடைந்தனர். இந்தச் சம்பவம் மீசாலை புத்தூர் சந்திக்கு அண்மித்த பகுதியில் நேற்று பிற்பகல் 2 மணியளவில் இடம்பெற்றது. பாடசாலையிலிருந்து மகனை உந்துருளியில் ஏற்றிக் கொண்டு சென்ற தந்தை வீதி யின் மறுகரைக்குச்செல்லமுற்பட்ட வேளையில் எதிரே வந்த உந்துருளி மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. மாணவன் உட்பட மூவர் கால்கள் முறிந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். மீசாலை கிழக்கைச் சேர்ந்த லங்கேஸ்வரன் யோகதீபன் (வயது 37) மகனான சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் தற்கும் யோகதீபன் லக்ஸன் (வயது 11), மந்துவில் மேற்கைச் சேர்ந்த ஜீவரத்தினம் நிரோபன் (வயது 26) ஆகியோரே படுகாயமடைந்தனர். (ஐ -9)

## போதைப் பொருள் வைத்திருந்தனரென்ற
# சந்தேகநபர்களின் அலைபேசி அழைப்பு விவரங்களைப் பெற்று விசாரணை நடக்கும்

கொழும்பு, பெப். 27
நாட்டில் கைப்பற்றப்பட்ட சுமார் 295 கிலோக்கிராம் ஹெரோயின் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களின் அலைபேசி கலந்துரையாடல் அறிக்கையைப் பெற்று விசாரணை நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபர்கள் பயன்படுத்திய சிம் அட்டைகள் பற்றி அவற்றுக்குரிய நிறுவனங்கள் ஊடாக, அந்த சிம்களுக்குக் கிடைத்த அழைப்புகள் குறித்து விசாரணை நடத்தப்படவுள்ளது. சந்தேகநபர்களின் வாக்குமூலத்தின் அடிப்படையில், உள்நாட்டு மற்றும் பன்னாட்டில் செயற்படும் புலனாய்வுப் பிரிவினருடன் தகவல்களைப் பரிமாறி,விசாரணைகள்முன்னெடுக்கப்படுவதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

உதயன்

புதன் பொய்கை

பெப்ரவரி 27, 2019


@UthayanPrint

எடுத்த செயலை முடிக்காமல் கைவிடும்போது வெற்றிக்கு எவ்வளவு அருகில் இருக்கிறோம் என்று பலருக்குத் தெரிவதில்லை. எனவே தோல்வியைத் தழுவுகின்றனர்.

*தோமஸ் அல்வா எடிசன்*







# 'மென்தகடு'

## காண்பியக் காட்சி

கிருபாலினி பாக்கியநாதன்

பேருந்தில் ஒரு தாய் தன் குழந்தைக்கு மூச்சு முட்டும் அளவுக்கு முத்தம் கொடுத்து மகிழ்ந்ததைப் பார்த்துக்கொண்டிருந்தேன். துரதிர்ஷ்டவசமாக, என் அம்மா என்னை முத்தமிட்டதாகவோ அடித்ததாகவோ ஒரு ஞாபகமும் எனக்கு இல்லை" எனத் தன் வாழ்வின் ஞாபகங்களினை மீட்டும் ஓவியர் கிருஷ்ணப்பிரியாவின் படைப்புகள் தன் தாயன்பை அடியொற்றியனவாகும்.

"எனது கலை வெளிப்பாடானது, யாவரும் அனுபவிப்பதும் எம்மால் நினைவுகூரப்பட முடியாதது மான ஓர் உணர்வு நிலை. ஓர் உயிரின் தொடக்க இருப்பிடமான கருவறை மற்றும் தாய்மை பற்றியதேயாகும்."

> 'மென்தகடு' எனும் தொடரிலுள்ள படைப்புகள் கித்தான், வர்ணம் என மரபார்ந்த வரைதல் ஊடகங்கள் இன்றி மிக மெல்லிய தாளின்மீது ஆணியால் சுரண்டுவதன் மூலம் உருவாகும் வெண்மையான கோடுகளால் ஆனவை.

இவ்வாறு தனது படைப்புகளுக்கான தூண்டலைக் கூறும் கிருஷ்ணப் பிரியா தருமகிருஷ்ணர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைக் கல்லூரியில் 'சித்திரமும் வடிவமைப்பும்' துறையில் தனது நுண்கலை மாணிப் பட்டத்தைப் பெற்றபின் இலங்கையில் நிகழ்ந்த பல காண்பியக் காட்சிகளில் மட்டுமல்லாது தனது படைப்புகளை ஜப்பான், பங்களாதேஷ் உள்ளிட்ட நாடுகளிலும் காட்சிப்படுத்தியுள்ளார்.

'மென்தகடு' எனும் அவரது காட்சிப்படுத்தலின் தலைப்புக்கமைய மெல்லிய தாளிலே உடலின் இழையங்கள், கலங்களின் வடிவங்களை மென்வரைதல்களாகப் பிரதிபலிப்பதனூடாகவும் சில படைப்புகளின் பின்னணியில் மட்டுப்படுத்தப்பட்ட மென்தொனி வர்ணங்களைக் 'கழுவுதல்' முறைமையில் கொண்டு வருவதன் மூலமும் அவரது மெல்லுணர்வுகளை உயிர்ப்புடன் படைப்புகளில் வெளிப்படுத்துகின்றார். இவரது 'மென்தகடு' எனும் தொடரிலுள்ள படைப்புகள் கித்தான், வர்ணம் என மரபார்ந்த வரைதல் ஊடகங்கள் இன்றி மிக மெல்லிய தாளின்மீது ஆணியால் சுரண்டுவதன்மூலம் உருவாகும் வெண்மையான கோடுகளால் ஆனவை. சில படைப்புக்கள் ஆணியால் கீறப்பட்ட வற்றின்மீது பேனா, பென்சில்போன்ற ஓவியத்துக்கான துணைக்கருவிகளின்மூலம் வரையப்பட்டுள்ளன. இவை மிக நுணுக்கமான இழையங்கள், நரம்புகள், கலங்கள், பின்னல்களின் வடிவங்களை ஒத்திருக்கின்றன. "நரம்புகளும் கலங்களும் நிறைந்த உலகை நான் எனது படைப்பினூடாக உணர்ந்துள்ளேன்" எனக் கிருஷ்ணப்பிரியா கூறுவதற்கேற்ப இவரது வரைதல்களினை நுணுக்குக்காட்டி யின்மூலம் விஞ்ஞானபூர்வமாகப் பரிசோதித்தால் இவை உயிர்த்துடிப்புடன் சுவாசிக்கும் வடிவமைப்புகளாகும்.





### தாய்க்கும் தாய்மைக்கும் முதலிடம்

'தாயே ஓர் உயிரின் உற்பத்தி. அன்பின் தொடக்கமாகத் தாய்மையே கருதப்படுகின்றது. ஒரு மனிதன் தன் வாழ்நாளில் வெளிப்படுத்தும் உணர்வுகள் யாவும் அவனது தாயிடம் இருந்தே கடத்தப்படுவதாக விஞ்ஞான ஆராய்ச்சிகள் கூறுகின்றன. மகிழ்ச்சி, துக்கம், கோபம், பயம், வெறுப்பு இவை அனைத்தையும் தாய் அனுபவிக்கும்போது கருவறையில் உள்ள குழந்தையும் அவற்றை உணர்கின்றது.' இவ்வாறு அவர் கூறுவதற்கேற்ப தாய்க்கும் குழந்தைக்குமான உறவு கருவறையிலே தொடங்குகின்றது.

அதேகுழந்தை பிறந்ததன் பின்னர் தாயின் மார்பகத்தோடு தன் பிணைப்பை ஏற்படுத்திக் கொள்கின்றது. தாய்மையின் அடையாளமாகக் கருப்பை, பாசத்தின் பகிர்வான மார்பகம் ஆகியவற்றினை ஓவியங்களில் கொண்டுவந்துள்ளார். நவீனத்துக்கு முந்தைய சடங்குடனும் நம்பிக்கையுடனும் இணைந்த காலத்தில் பெண்ணின் மார்பகம், இடைப்பகுதி போன்றவற்றினைக் வளப்பெருக்குக்கான குறி யீடாகப் பயன்படுத்துவதிலிருந்து இவர் மாறுபட்டு கருப்பை, மார்பகம் ஆகியவற்றைச் சூழ்ந் துள்ள இழையங்கள், கலங்கள் என்பனவற்றை அவரது ஆதார சுருதியாகத் தன் வரைதல்களில் கொண்டு வந்துள்ளமை இவரது கருத்து நிலையைத் தனித்துவமாக எடுத்துக்காட்டுகின்றன. அத்துடன் இவரது விஞ்ஞானபூர்வமான அணுகுமுறையின் கையாள்கை அறிவுபூர்வமான அறிதல்களை நோக்கி எம்மைப் பயணிக்க வைக்கின்றது.

> இவரது வரைதல்களினை நுணுக்குக் காட்டியின்மூலம் விஞ்ஞானபூர்வமாகப் பரிசோதித்தால் இவை உயிர்த்துடிப்புடன் சுவாசிக்கும் வடிவமைப்புகளாகும்.


இந்தக் காட்சியிலுள்ள படைப்புகள் தாய்ப்பாசத்தினைத் தாண்டி அவரது வாழ்வின் பல்வேறுபட்ட பரிமாணங்களுடன் பரிணமிக்கும் இவரது படைப்புகள் கலைப் பயணத்தின் பல்வேறுபட்ட சாத்தியங்களையும் வெளிப்படுத்தி நிற்கின்றன. அதாவது கடந்த காலத்தில் அவர் இழந்தவை, பெற்றுக்கொண்டவை மட்டுமன்றி, எதிர்காலக் கனவுகள், நம்பிக்கை ஆகியவற்றின் இணைந்த பின்னலாக இவை பிரதிபலிப்பதைக் காண முடிகின்றது. இந்தப் படைப்புகளின் உருவக் குறைப்புக் கட்டமைப்பானது, பார்வையாளனிடம் மேலோட்டமான பார்வைக்கும் அப்பால் உற்றுப்பார்த்தலினை வேண்டி நிற்கின்றது. பார்வையாளரை மிக அருகில் வரவழைக்கும் மென்மையான கோடுகள் படைப்பாளியுடன் எம்மை அண்மிக்க வைக்கின்றன. இந்தக் கணத்திலேயே இவரது படைப்புகளின் உள்ளடக்க, உருவ, ஊடக உத்திகள் படைப்பின் இலக்கினை நோக்கி நகர்த்துகின்றன. ஓவியப் பரப்பினைக் கோடுகளால் பூரணமாக்கும்போது ஓவியர் இழந்த தாய் அன்பின் வெறுமைக்கு மாறாக முழுமையை எங்களை உணரவைக்கின்றார். இவரது படைப்புகளை நோக்குகின்றபோது சிறு வயதில் தாயைப் பிரிந்து அனுபவித்த துயரங்கள், ஏக்கங்கள் அப்படைப்புகளில் உயிர்த்துடிப்புடன் ததும்பி எம்மிடமும் தொற்றுகின்றன. அது மட்டுமல்லாது இவரது பெண் சார்ந்த கருத்து நிலையும் ஓவியப் பயில்வும் இந்தப் படைப்புகளுக்கு மேலும் வலுச்சேர்த்து இன்னொரு தளத்துக்கு எம்மை இட்டுச் செல்கின்றன. கிருஷ்ணப்பிரியாவின் இந்தக் காண்பியக் காட்சியானது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நுண்கலைத் துறையின் ஏற்பாட்டில் நுண்கலைத் துறைக் கலைக்கூடத்தில் இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமாகி மார்ச் முதலாம் திகதி வரை இடம்பெறவுள்ளது.

> நவீனத்துக்கு முந்தைய சடங்குடனும் நம்பிக்கையுடனும் இணைந்த காலத்தில் பெண்ணின் மார்பகம், இடைப்பகுதி போன்றவற்றினைக் வளப்பெருக்குக்கான குறியீடாகப் பயன்படுத்துவதிலிருந்து இவர் மாறு பட்டு கருப்பை, மார்பகம் ஆகியவற்றைச் சூழ்ந்துள்ள இழையங்கள், கலங்கள் என்பனவற்றை அவரது ஆதார சுருதியாகத் தன் வரைதல்களில் கொண்டு வந்துள்ளமை இவரது கருத்து நிலையைத் தனித்துவமாக எடுத்துக் காட்டுகின்றன.

# கந்தபுராணத்தில்

## மேன்மையுறும் பெண்மையின் சிறப்பியல்புகள்

இராஜேஸ்வரன் நிஷாந்தன்





தமிழும் சைவமும் போற்றும் இலக்கியங்களில் புராணங்களும் ஒன்றாகும். இத்தகைய புராண வகுப்பில் கந்தபுராணமும் ஒன்றாகும். கச்சியப்பர் தன் கவிப் புலமையால் படைத்திட்ட இலக்கியம் இதுவாகும். சிவனது அம்சமாகத் தோன்றிய முருகனது பெருமைகளைப் பாடிச் சிறப்பித்துள்ள காப்பியம் என்று இதைக் கருதலாம். இந்தக் கந்தபுராணத்தில் கச்சியப்பர் பெண்மையின் உயரிய சிறப்பியல்புகளை அழகுற காப்பியம் செய்துள்ள தன்மை சிறப்புடையதாகும். ஆம். அவ்வாறு பெண்மையின் உயரிய மாண்பில் மேன்மையுறும் பாத்திரப் படிகங்களை இங்கு கண்ணுறுவோம்.

**ஆதி சக்தியான பார்வதி தேவி**

கந்தபுராணத்தில் இழையோடும் பெண்மையின் சிறப்பியலில் முதன்மை பெறுவது பார்வதிதேவியாவார். பார்வதி மலையரசன் இமவானின் மகளாகப் பிறந்தவள். சிறுவயதில் இருந்து சிவபெருமான் மீது அன்பு கொண்டவள். சிவபெருமானைத் தன் கணவனாகப் பெற்றிட வேண்டும் எனும் நோக்கம் கொண்டு கடுந் தவத்தினை இயற்றளாயினாள். பார்வதியின் அத்தகு தவத்தினை சோதிப்பதற்குத் திருவுள்ளங் கொண்ட எம்பெருமானும் ஒரு கிழப்பிராமணர் வேடந் தாங்கி பார்வதி தவம் புரியும் இடத்தினை அடைந்தார். அந்த முதியவரைக் கண்டதும் பார்வதியும் அவரை வரவேற்று அவருக்கு நல் உபசரிப்புக்களை முறையாகச் செய்தாள். பார்வதியின் உபசரிப்பில் அகமகிழந்த சிவனாரும் பார்வதியின் தவத்துக்கான காரணத்தை வினவினார். அதற்கு உமையவளும் கைலயம் பெருமான் வந்து என் கரம் பற்றி என்னை தன் மனைவியாக ஏற்றுக் கொள்ள வேண்டும் அதற்காகவே நான் தவம் புரி கின்றேன் என மொழிந்தாள். அதைக் கேட்ட முதியவர் வடிவில் இருந்த சிவனாரும், உங்கள் தவம் பயனற்றது. சிவபிரான் இதற்கெல்லாம் இசைய மாட்டார். அவரே எப்போதும் தியானத்திலேயே லயித்திருப்பவர். அவர் உங்கள் தவத்தினைக் கண்டு கொள்ளவே மாட்டார். மேலும் சிவனோ, சுடலைச் சாம்பலை தன் உடல் முழுவதும் பூசியிருப்பவர். பாம்புகளை அணிந்திருப்பவர். எலும்புகளை தரித்திருப்பவர். மேலும் பூதங்கள் சூழ்ந்திருக்க நடனமாடுபவர். இப்படிப்பட்ட ஒருவரையா தாம் கணவனாகப் பெற விரும்புகின்றீர்கள், இது எனக்கு வேடிக்கையாக இருக்கின்றது எனக் கூறி பரிகசித்தார். மேலும் நான் தங்கள் அழகில் மயங்கி விட்டேன். தாங்கள் என்னைத் திருமணம் செய்து கொள்ளுங்கள் எனவும் சிவனாகிய கிழவனார் உரைத்தார். அவர் கூறிய இத்தகு வார்த்தைகளை கேண்மையுற்ற பார்வதிக்கோ தாங்கிட முடியாத கோபம் குடிகொண்டது. உடனே அவரை அவ்விடத்திலிருந்து வெளியேறும் படி கட்டளையிட்டார். மேலும் உலக நாயகனாகிய எம்பெருமானை இகழ்ந்துரைத்து தாம் மன்னிக்க முடியாத பாவம் புரிந்து விட்டீர்கள். நான் எம் பெருமான் சிவனது அழகைப் பார்த்து அவர் மீது காதல் கொள்ளவில்லை. மாறாக அவரது நற்க் குணங்களையும், அவரது ஈடு இணையில்லாத பெருமைகளையும் கேண்மையுற்றே அவர் மீது காதலுற்றோன். அது பற்றி தங்களுக்கு என்ன புரிந்திடப் போகின்றது. ஆகவே இந்தக் கணமே இங்கிருந்து சென்று விடுங்கள் என கூறி நின்றாள் பார்வதி. பார்வதியின் உறுதியான மனநிலையைக் கண்டு மனமகிழ்ந்த சிவபிரான் அந்தக் கணமே தன் முதுமைக் கோலம் நீக்கி தன் உண்மையான கோலம் காட்டி நின்றார். இதைச் சற்றும் எதிர்பாரத பார்வதியோ எம்பெருமான் பாதங்களில் வீழ்ந்து தன் செயலுக்கு மன்னிப்புக் கோரினாள். தன்விருப்பத்தினை விண்ணப்பம் செய்தாள் மலையரசன் மகள். எம் பெருமானும் அதை ஏற்று உரிய காலம் கனியும் போதும் தான் வந்து உன் கைத்தலம் பற்றுவேன் என்று திருவாய்மலர்ந்து மறைந்தார். பார்வதியோ சிவனார் தன் கரம் பற்றும் நாள் வரும் வரைக்கும் தொடர்ந்து தன் தவத்தினை கைவிடாது தொடரலானாள். இவ்வாறாக, பெரியவர்களை வரவேற்று உபசரிக்கும் மனப்பாங்கும், பிராமணராக விளங்கினாலும் முழுமுதற்க் கடவுளை நிந்திப்பது தவறும் பாவமும் என்பதை எடுத்துரைத்த நாவன்மையும், சிவபிரானை அடைய வேண்டும் என்ற தவ வலிமையும், கற்பின் திண்மையும், இயல்பாகவே கொண்ட அன்பும், பணிவும், நாணமும், கோபமும் என்பனவும் பார்வதி தேவியின் பெண்மைக்கு எடுத்துக்காட்டுக்களாக விளங்குகின்ற னவல்லவா?

**மன்மதன் மனைவி ரதிதேவி**

கந்தபுராணத்தில் கச்சியப்பர் காட்டுகின்ற பெண்மையின் சிறப்பியலில் மன்மதன் மனைவி ரதிதேவி குறித்துக் காண்போம். காதலின் அதிபதி மன்மதன். அவனது மனைவி ரதிதேவி. அழகே உருவானவள். ஒரு சமயம் சிவபிரான் மேற்கொண்டுள்ள தவநிலையினைக் கலைத்திட வேண்டி தேவர்கள் எல்லோரும் சேர்ந்து மன்மதனிடம் உதவி நாடினர். இந்தச் செயல் புரிந்திட முதலில் மறுத்துரைத்த மன்மதன் பின் உலக நன்மையினைக் கருத்தில் கொண்டு அதற்கு சம்மதித்தான். அப்போது ரதியோ எம்பெருமான் தியானத்தைக் கலைப்பதற்கு அவர் மீது மலரம்புகளை செலுத்துவது முறையற்ற செயலாகும் எனவும், அதனால் எம்பெருமானின் கோபம் மேலெழும் என்பதையும் சுட்டிக் காட்டி அந்தச் செயல் புரிந்திட வேண்டாம் எனத் தன் கணவனைத் தடுத்தாள். ஆனால் மன்மதனோ அவ்வார்த்தைகளை கேண்மையுறாது சிவனது மோன நிலையினைக் கலைத்திட அவர் மீது மலர்க்கணைகளை விடுத்தான். அவ்வளவு தான். அக் கணமே சிவபிரான் தன் நெற்றிக் கண்ணைத் திறந்தார். அந் நெருப்புப் பொறியில் மன்மதன் எரிந்து சாம்பாலாகிப் போனான். தன் கணவனுக்கு நேர்ந்த இந்த நிலையினைக் கண்ட ரதியானவாள் மனம் துடிதுடித்து அழுது புலம்பினாள்.

இலக்குமியின் புதல்வனே, நான் கூறிய அறிவுரைகளை கேளாமால் சென்ற தாம் சிவனாரது நெற்றிக் கண்ணால் அழிந்து போனீரே? அந்தத் தேவர்கள் தங்கள் சுகத்திற்காக உம்மை பணயம் வைத்து என்னிடமிருந்து நிலையாக பிரித்து விட்டனரே.; தாம் என்னைப் பிரிந்து எனக்கு ஆறாத துயரத்தினை அளித்து விட்டீரே, உமது துணையின்றி நான் இனி எவ்வாறு வாழ்ந்திடுவேன், மேலும், நீர் இவ்வாறு சாம்பாலாகிப் போன குற்றம் யாரைச் சாரும், நான் எப் பாவத்தினை செய்தேனோ? அதன் பயன் தான் இந் நிலை ஏற்படக் காரணமாயிற்றோ, உம்மை இழந்தமையால் சோகமாகிய தீயில் நானும் விழுந்து எரிந்து சாம்பலாகப் போகின்றேனே எனப் பலவாறு புலம்புகின்றாள் ரதிதேவி. இவ்வாறு ரதியிடத்து குடிகொண்டிருந்த கணவன் மீது கொண்ட தீராத அன்பும், இயல்பாகக் குடிகொண்ட மென்மையும், கணவனை இழந்து பரிதவிக்கும் துயரமும், இரக்க குணமும், கணவனுக்கு அறிவுரை கூறும் நல்லியல்பும் பெண்மையின் பெருமைக்கு சான்றாய் அமைகின்றதல்லவா?

**குறமகளாகிய வள்ளி நாச்சியார்**

கந்தபுராணம் சுட்டி நிற்கின்ற வள்ளி நாச்சியார், நிலவுலகில் குறவர் குலத்தினில் குறத்திப் பெண்ணாக பிறந்து வளர்ந்தவள். முருகப் பெருமானைத் தன் கணவனாகப் பெற்றிடவே நிலவுலகில் அவதரித்தவள் இந்த வள்ளி. தன் மனதில் சிறுவயதில் இருந்தே முருகனை இருந்தி வாழ்ந்து வந்தவள். ஒரு முறை வள்ளி நாச்சியார் தினைப் புலம் ஒன்றில் காவல் புரிந்து வருகின்றாள். வள்ளியோடு குறும்புத் தனம் புரிந்திட திருவுள்ளம் கொண்ட முருகப்பெருமான் ஒரு கிழப் பருவ வேடுவர் உருவில் அங்கு வரலாயினார். வள்ளியிடம் வந்த முதியவர் நயமாக பேசி அவள் உள்ளத்தில் இடம்பிடித்திட விரும்பினார். வள்ளியிடத்தில், நான் உன்னைத் திருமணம் செய்து கொள்ள விரும்புகின்றேன் எனக் கூறி தன்னைப் பார்க்கும் படியும், தன்னுடன் உரையாடும் படியும் வற்புறுத்துகின்றார். அவள் மனதில் இடம்பிடிக்க பல சித்து விளையாட்டுக்களை புரிந்தார். ஆனால் அவை எதற்கும் வள்ளியோ இசைய மறுத்தாள். இந்த நிலையில் கிழ வடிவில் இருந்த முருகன் தன் அண்ணன் விநாயகரை தனக்கு உதவி புரியும் படி அழைத்து நின்றார். அப்போது விநாயகரும் ஒரு யானையின் உருவம் கொண்டு வள்ளியின் முன்பாக ஓடி வந்தார். இதைக் கண்டு அச்சமுற்ற வள்ளியோ தன்னைக் காப்பாற்றும் படி முதியவர் வடிவில் நின்ற முருகனிடத்து வேண்டி அவரைத் தழுவிக் கொண்டார். அப்போது முருகப் பெருமான் தன் உண்மை வடிவத்தை காட்டியருளினார். இதைக் கண்டு களிப்புற்ற வள்ளி நாச்சியார் கண்களில் நீர் வழிய முருகனது திருவடிகள் பணிந்து கரம் குவித்து வணங்கி நின்றாள். முருகனும் வள்ளியின் தூய்மையான அன்பினை கண்டு உளமகிழ்ந்து அவளைத் தன் துணையாக ஏற்றுக் கொண்டார். இவ்வாறு தன் ஆழமான அன்பினால் கந்தனையே சேர்ந்து கொண்;டாள் குறமகளாகிய வள்ளியார்.

**அசுரகுல மங்கை மாயை**


அசுர குலத்தினில் உதித்த மங்கையே இந்த மாயை. தன் அசுர குலம் தேவர்களால் நிர்மூலமாக்கப்பட்டதை கண்டு துயரமடைந்து மீண்டும் அசுர குலம் தளைத்திட வேண்டும் எனும் எண்ணம் கொண்டு அசுர குரு சுக்கிராச்சாரியாரின் வேண்டுதல் ஏற்று காசிப முனவர் ஆச்சிரமம் அடைந்தாள். அங்கு தன் மாய சக்திகளை பயன்படுத்தி அவ் இடத்தை இன்பம் பொங்கும் மலர்வனமாக மாற்றியமைத்து தன்னையும், பேரழகு பொருந்திய பெண்ணாக மாற்றி காசிப முனிவரைத் தன் மீது மோகம் கொள்ளச் செய்து அவர் வாயிலாக எண்ணற்ற அசுரர்களை பெற்றெடுக்கின்றாள். அவ்வாறு மாயைக்கும்காசிபருக்கும்பிறந்தவர்களே சூரபத்மன் முதலிய அசுரர்களாவர். இங்கு மாயையின் செயல் தவறாயினும் தன் குலம் தழைக்க வேண்டும் எனும் நோக்கம் கொண்டு செயற்பட்ட அவளது தன்மையும் பெண்மையின் சிறப்புக்கு எடுத்துரைப்பாகின்றது.

**பெண்மையைப் போற்றுவோம்**

மேற்ப் போந்தவை கச்சியப்பர் கந்தபுராணத்தில் காட்டி நிற்கின்ற பெண்மையின் மேன்மையினை எடுத்துரைக்கும் பாத்திரப் படிகங்களாவர். இவை தவிர பதும கோமளை, கார்த்திகைப் பெண்கள், தெய்வயானை, இந்திராணி போன்றவர்களும் கந்தபுராணத்தில் பெண்மையின் சிறப்பியலில் இழையோடுகின்றவர்களே. குறிப்பாக பெண்களினாலேயே இலக்கியம் என்பது அழகாகின்றது என்றால் மிகையில்லை. ஆக நாமும் பெண்மையைப் போற்றிப் புகழ்ந்திடுவோம்.

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏற்பாட்டில்

# பன்னாட்டு தாய்மொழிதினம் மட்டக்களப்பில் சிறப்புற்றது








மட்டக்களப்பு, பெப். 27
பன்னாட்டுத் தாய்மொழி தின நிகழ்வு மட்டக்களப்பு கல்லடி மீன் இசைப் பூங்காவில் அண்மையில் நடைபெற்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் இது நடத்தப்பட்டது. கல்லடிப் பாலத்தின் அருகில் அமைந்துள்ள ஔவையார் சிலைக்கு கொழும்பு கம்பன் கழகத்தின் நிறுவுநர் கம்பவாரிதி இ.ஜெயராஜ் மலர் மாலை அணிவித்து நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.
மட்டக்களப்பு மாநகர முதல்வர் தி.சரவணபவன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கலைக் கோகிலம் மாணவர்களின் கலைகலாசார நிகழ்வுகள் இடம்பெற்றன. தாய்மொழியின் தொன்மை பற்றிக் இ.ஜெயராஜ் சொற்பொழிவாற்றினார். மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான சீ.யோகேஸ்வரன், ஞா.சிறிநேசன் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கி.துரைராசசிங்கம், பொன்.செல்வராசா, கோவிந்தன் கருணாகரன், வர்த்தக சங்கத்தினர், தமிழ்ச் சங்கத்தினர், மற்றும் அரசியல் பிரமுகர்கள், பொதுமக்கள், உள்ளிட்ட பலரும் நிகழ்வுகளில் பங்குபற்றினர். (த-46)

# கிளிநொச்சியில் சிறப்பாக இடம்பெற்ற நடுகல் நாவல் அறிமுக நிகழ்வு




எழுத்தாளர் தீபச்செல்வனின் நடுகல் நாவல் வெளியீடு கரைச்சி பிரதேச சபை கேட்போர் கூட மண்டபத்தில் கடந்த 23ஆம் திகதி பிற்பகல் 3.30 மணியளவில் இடம்பெற்றது. வடமாகாண முன்னாள் கல்வி அமைச்சர் குருகுலராசா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டார். நடுகல் நாவலுக்கான விமர்சன உரையை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விரிவுரையாளர் எழுத்தாளர் செல்வமனோகரனும், எழுத்தாளர் வெற்றிச்செல்வியும் வழங்கினர். சிறப்புப் பிரதிகளை நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரனும், வடமாகாண முன்னாள் கல்வி அமைச்சர் குருகுலராசாவும் வழங்கி வைத்தனர். குறித்த நிகழ்வில் எழுத்தாளர்கள், பிரதேச சபை தவிசாளர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள் மக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.









## நிந்தவூரில் நடந்த

# பர்முடா இரகசியம்!

## சுயஅறிவியல்– புனைகதை நூல் வெளியீடு

ஏ.எல்.எம்.சலீம்





நிந்தவூர் கலை இலக்கியப் பேரவையின் வெளியீடாக வெளிவந்துள்ள இளம் எழுத்தாளர் எம்.ஏ.எம்.ஜரீத்தின் "பர்முடா இரகசியம்" எனும் சுய அறிவியல் புனைகதை நூலின் வெளியிட்டு விழா அண்மையில் வெகுசிறப்பாக நடைபெற்றது.

நிந்தவூர் கலை இலக்கியப் பேரவையின் தலைவரும் இலக்கிய வாதியுமான டாக்டர் ஏ.எம்.ஜாபிர் தலைமையில் நிந்தவூர் பிரதேச சபை மண்டபத்தில் இந்த நூல் வெளியீட்டு விழா நடைபெற்றது. விழாவில் தென்கிழக்குப் பல்கலைக்கழக தமிழ்த்துறையைச் சேர்ந்த பேரசிரியர் ரமீஸ் அப்துல்லா முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டார்.

அத்துடன் அம்பாறை மாவட்ட கலாசார உத்தியோகத்தர் ரி.முகம்மது றின்ஸான் கலை இலக்கியப் பேரவையின் செயலர் தம்பிலெவ்வை இஸ்மயில், பொறியியலாளர் பன்னூலாசிரியர் டாக்டர் எம்.எம். நௌஸாத், இலக்கியன் முர்ஷித் உட்பட நிந்தவூர் கலை இலக்கியப் பேரவை மற்றும் நிந்தவூர் பிரதேச கலாசார அதிகார சபை முக்கியஸ்தர்கள் இலக்கிய ஆர்வலர்கள் எனப் பலரும் விழவில் கலந்துகொண்டனர்.

பேராசிரியர் ரமீஸ் அப்துல்லா விழாவில் உரையாற்றுகையில், 'எழுத்துலகம் இன்று எங்கோ சென்றுகொண்டிருக்கிறது. பெறுதியானவர்கள் எழுத்துக்கள் மூலம் சமூகத்தோடு பேசுகின்றனர். இந்த வகையில் அறிவியல் கதைகள் எழுதுவது என்பது இலக்கிய ஆர்வத்தோடு சம்பந்தப்பட்டவிடயம் மட்டுமல்ல. அறிவியல் விடயங்களிலுள்ள ஈடுபாடும் மிகச் சிறந்த கற்பனை ஆற்றலும் உள்ளவர்களுக்கே அது வசப்படும். தமிழில் இத்தகைய அறிவியல் புனைகதைகளை எழுதியவர்களில் தமிழக எழுத்தாளர் சுஜாதாவுக்கு முக்கிய பங்குண்டு. இரா.நடராசா என்பவரும் சில அறிவியல் கதைகளை எழுதியுள்ளார்.

ஈழத்தில் இத்தகைய முயற்சிகளில் ஈடுபட்டவர்கள் மிகக் குறைவு. ஆதர் கிளாக் அறிவியல் ரீதியான பல்வேறு கதைகளை முன்வைத்துள்ளார். அவருடைய கதைகளினூடே விஞ்ஞானக் கருத்துக்கள் நடைமுறைகள் தொடர்பான எதிர்வுகூறலைக்கண்டு கொள்ள முடியும். இந்த வகையில் நூலாசிரியர் ஜரீத் சிறிய வயதிலிருந்தே ஒரு விஞ்ஞான ரீதியான சிந்தனை வயப்பாட்டுக்குள் அவர் ஆட்பட்டிருக்கிறார்.

ஏலியன்ஸ் என்ற வேற்றுக் கிரகவாசிகள் பற்றி அவர் முதலாவது கதையை எழுதியிருக்கிறார். அப்போது ஒன்பதாம் வகுப்புப் படிக்கும் மாணவனாக இருந்த ஜரீத்தைப் பொறுத்த வரையில் இந்த முயற்சி அபாரமானது.

பின்னர் மீண்டும் ஜரீத் விஞ்ஞானபூர்வமான கதை கதைகளை எழுதுவதில் அக்கறை காட்டுகிறார். "பர்முடா இரகசியம்" எனும் 23ஆம் நூற்றாண்டின் விசித்திரங்களை உள்ளடக்கிய சுய அறிவியல் புனைகதை என்ற இந்தத் தொகுதியை இன்று வெளிக் கொண்டு வந்துள்ளார். அவருக்கு தேசிய அங்கீகாரம் கிடைக்குமெனவும் நம்பிக்கை கொள்ளலாம். கற்பனை ஆற்றல் நிரம்பிய ஆக்கபூர்வமான எழுத்தை எழுதக்கூடிய நம்பிக்கைதரும் இளம் எழுத்தாளராகவும் ஜரீத்தைக் காண்கின்றோம் -என்றார்.

நிந்தவூர் கலை இலக்கியப் பேரவையின் உறுப்பினராக இருக்கும் நூலாசிரியர் எம்.ஏ.எம்.ஜரீத் ஆங்கில உயர் கல்வி தேசிய டிப்ளோமா கற்கையுடன் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் வெளிவாரி கலை மானிப் பட்டப் படிப்பையும் ஒருங்கே தொடர்ந்து வருபவரென்பதும் குறிப்பிடத்தக்கது. (30)







## இன்றைய நாள்

**மேடம்:** சிலர் உதவுவது போல பாசாங்கு செய்வர். சமயோசித செயல் நன்மைபெற உதவும். தொழில், வியாபாரத்தில்முன்னேற்றம்பெற அதிகம் பணிபுரிய நேரிடலாம்.

**இடபம்:** உண்மை நேர்மைக்கு முக்கியத்துவம்தருவீர்கள். துவங்குகிற பணி எளிதாக நிறைவேறும். தொழில், வியாபாரம் வியப்பூட்டும் வகையில் வளர்ச்சி பெறும். உபரிபணவரவை தகுந்த சேமிப்பாக மாற்றுவீர்கள்.

**மிதுனம்:** நிகழ்வுகளை உணர்ந்து செயல்படுவீர்கள். அவமதித்தவர்அன்பு பாராட்டுகிற நல்ல நிலை உருவாகும். தொழில், வியாபாரத்தில் நிலுவைப் பணியைநிறைவேற்றுவீர்கள்.

**கடகம்:** மனதில்இனம்புரியாதசஞ்சலம் ஏற்படலாம்.தொழில்வியாபாரவகையில் பணிச்சுமை அதிகரிக்கும். அதிக விலையுள்ளபொருள்இரவல்கொடுக்க வேண்டாம். சீரான ஓய்வு உடல்நல ஆரோக்கியம்பாதுகாக்கும்.

**சிங்கம்:** சிலர் சொல்லும் அறிவுரை சங்கடம் உருவாக்கும். புதிய முயற்சிகளை பின்னொரு அனுகூல நாளில் துவங்கலாம். பணவரவு முக்கிய செலவுக்கு பயன்படும்.

**கன்னி:** பணிகளில் அதிக நேர்த்தி நிறைந்திருக்கும். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட இலக்கு எளிதில் நிறைவேறும். வெகுநாள் காணாமல் தேடிய பொருள் புதிய முயற்சியால் கைவந்துசேரும்.

**துலாம்:** முக்கிய பணி நிறைவேறுவதில் தாமதம் இருக்கும். தொழில், வியாபாரநடைமுறையில்முழுஈடுபாடு அவசியம். பணப்பரிவர்த்தனையில் தகுந்த பாதுகாப்பு தவறாமல் பின்பற்ற வேண்டும்.

**விருச்சிகம்:** திறமைகளை வளர்த்து கொள்வீர்கள். நம்பிக்கைஇழக்கவைத்த செயல் வெற்றி பெறும். தொழி லில் உற்பத்திவிற்பனைசெழித்துவளரும்.

**தனுசு:** கருணை மனம் இல்லாதவரிடம்உதவிகேட்கவேண்டாம். தொழில், வியாபாரத்தில்போட்டிஅதிகரிக்கலாம். மனஉறுதியுடன் பணிபுரிவது நல் லது. செலவில்சிக்கனம் இருக்கும்.

**மகரம்:** நண்பரின்உதவியால்பெருமை கொள்வீர்கள். செயலில் புதிய பரிமளிப்பும் உருவாகும். தொழில் வியாபாரம்வளர்ச்சிபெறஅதிகம்பணிபுரிவீர்கள். இனிய அணுகுமுறையால் பணவரவு சீராகும்.

**கும்பம்:** பணிகளைதிறம்படசெய்வதால் எதிர்பார்த்தநன்மைகிடைக்கும். தொழில், வியாபாரம்சராசரி அளவில் இருக்கும். கூடுதல்முயற்சியினால்நிலுவைப்பணம் வசூலாகும்.

**மீனம்:** உதவி பெற்று மறந்த ஒருவரை மன்னிப்பீர்கள். தொழில், வியாபாரம் செழிக்க கடின உழைப்பு தேவைப்படும். அளவான பணவரவு கிடைக்கும். தாராள பணவரவு கிடைக்கும். நண்பருடன் விருந்துவிழாவில்பங்கேற்பீர்கள்.

## ஓக. 15க்கு...

ஆணைக்குழு வட்டாரங்களைக் கேட்டபோதே மேற்கண்டவாறு தெரிவித்தன.

இலங்கையில் மாகாணசபைத் தேர்தல் நடத்தப்படவில்லையாயின், மாகாணசபை முறைமை நாட்டில் இருக்கத் தேவையில்லை. ஆயுள் காலம் முடிவடைந்த 6 மாகாணசபைகளுக்கான தேர்தல் நடத்தப்படாமல் இழுத்தடிக்கப்படுகின்றன. தேர்தல்கள் ஆணைக்குழு 9 மாகாணசபைகளுக்குமான தேர்தலை ஒரே நாளில் நடத்தத் தயாராக இருக்கின்றது.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச உள்ளிட்ட எல்லோரும் மாகாணசபைத் தேர்தல்கள் நடத்தத் தயார் என்று கூறுகின்றார்கள். ஆனால் மாகாணசபைத் தேர்தல் நடத்தமுடியவில்லை. தூங்குபவர்களை எழுப்பலாம். ஆனால் தூங்குபவர்கள் போன்று நடிப்பவர்களை எழுப்ப முடியாது.

மாகாணசபைத் தேர்தல்களை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் நடத்த முடியும் என்று எதிர்பார்ப்பதாக தேர்தல்கள் ஆணைக்குழு வட்டாரங்கள் தெரிவித்தன. (ஒ.5)

## அரசியல்வாதிகளை...

கருத்திட்டங்களுக்கான பிரதித் தேர்தல்கள் ஆணையாளர் எஸ்.அச்சுதன், யாழ்ப்பாண மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர் ரி.அகிலன் ஆகியோரும் பத்திரிகையாளர் சந்திப்பில் பங்கேற்றிருந்தனர்.

தேர்தல்களில் தொடர்ச்சியாக வாக்களிப்பு வீதம் குறைவடைந்து வருகின்றதே என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளரிடம் கேள்வி எழுப்பப்பட்டது. அதற்குப் பதிலளித்த அவர், மக்களுக்கு அரசியல்வாதிகள் மீதான நம்பிக்கையீனம் அதிகரித்துச் செல்கின்றது. இதன் காரணமாக வாக்களிப்பு வீதம் குறைவடைகின்றது. அரசியல்வாதிகளைத் தெரிவு செய்த பின்னர் தங்களால் எதுவும் செய்ய முடியாது என்று மக்கள் நினைக்கின்றார்கள். மக்களின் எண்ணத்துக்கு அமைவாக அரசியல்வாதிகள் செயற்படத் தவறினால் எதுவும் செய்யமுடியாத நிலமை இருக்கின்றது. இந்த நிலமை மாற வேண்டும்.

இந்தியாவில் எந்தக் கட்சிகளுக்கும் தேவையில்லை என்றால், நோட்டாவுக்கு வாக்களிக்கும் ஏற்பாடு உண்டு. இங்கு அவ்வாறு தேவை என்று நினைக்கவில்லை என்றார்.

ஜனநாயகம் தொடர்பில் குறும்படப் போட்டி நடத்துவதன் ஊடாக ஜனநாயகத்தை காப்பற்ற முடியும் என்று நினைக்கின்றீர்களா? என்று ஊடகவியலாளர் கேள்வி எழுப்பினார். அதற்குப் பதிலளித்த தவிசாளர், ஜனநாயகத்தை காப்பாற்ற முயற்சிக்கின்றோம் என்றார். (ஒ.5)

## பிராந்தியத்தில்...

காஷ்மீர் புல்வாமா பகுதியில் கடந்த 14ஆம் திகதி ஆயுததாரியொருவர் நடத்திய தற்கொலைப் படைத்தாக்குதலில் 40 இந்திய் இராணுவத்தினர் உயிரிழந்தனர். இதற்கு பாகிஸ்தானும் பாகிஸ்தானில் இயங்கும் ஜெய்ஸ்இ முகமது என்ற தீவிரவாத அமைப்பும்தான் காரணம் என்று இந்தியா குற்றம் சுமத்தியது. நினையாத நேரத்தில் தக்க் பதிலடி கொடுக்கப்படும் என்று இந்தியா எச்சரித்தது. அத்துடன் எல்லையில் இராணுவத்தினருக்கு முழுச் சுதந்திரம் வழங்கப்படுகிறது என்று இந்தியத் தலைமை அமைச்சர் மோடி தெரிவித்திருந்தார். இந்தியாவிடம் இருந்து மட்டுமல்லாமல் உலக அளவில் இருந்தும் பாகிஸ்தானுக்கு கண்டனங்கள் குவிந்தன. எனினும், தன்மீதான குற்றச்சாட்டை பாகிஸ்தான் மறுத்தது. அந்த நாட்டின் தலைமை அமைச்சர் இம்ரான் கான், புல்வாமா தாக்குதலுக்கு பாகிஸ்தானோ அல்லது பாகிஸ்தான் சார் அமைப்புக்களோதான் காரணம் என்பதற்கான ஆதாரங்களை இந்தியா வழங்கினால் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்தார்.

இந்த நிலையில், எவரும் எதிர்பாரா விதமாக இந்திய போர் வானூர்திகள் பாகிஸ்தானின் கைபர் பக்துன்க்வா பகுதியில் நேற்று அதிகாலை தாக்குதலை நடத்தின. பன்னிரு மிராஜ் ஜெட் போர் வானூர்திகள் சுமார் ஆயிரம் கிலோ வெடிபொருளைச் சுமந்துசென்று இந்தத் தாக்குதலை நடத்தின என்று இந்தியாவின் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய வானூர்திகளின் தாக்குதலில் தற்கொலைப் படைத் தீவிரவாதிகளை உருவாக்கும் பாலோகோட் முகாம், பாகிஸ்தானின் முன்னாள் இராணுவ ஆட்சியாளர் ஷியா உல் ஹக் உருவாக்கிய தளம், சக்கோத்தி உள்ளிட்ட மிகப்பெரிய தீவிரவாத முகாம்கள் அழிக்கப்பட்டன என்று இந்தியா குறிப்பிடுகிறது.

இந்திய இராணுவம் ஊடுவியது என்பதை ஏற்றுக்கொண்டுள்ள பாகிஸ்தான், எனினும் இந்தியத் தரப்பில் இருந்து வெளிப்படுத்தப்படுவது போன்றதான சம்வங்கள் ஏதும் இடம் பெறவில்லை என்று குறிப்பிடுகிறது. 'இந்தியாவின் அத்துமீறலுக்கு அடுத்த சில நிமிடங்களில் பதிலடி கொடுக்க பாகிஸ்தானின் எவ்16 வகை போர் வானூர்திகள் புறப்பட்டுச் சென்றன. அவற்றைப் பார்த்ததும் இந்திய வானுர்திகள் வெற்று இடத்தில் குண்டுகளைப் போட்டுவிட்டு தப்பித்து ஓடின' என்று பாகிஸ்தானின் இராணுவத் தளபதி ஆசிப் கபூர் குறிப்பிட்டுள்ளார். ஆனால் பாகிஸ்தான் வானூர்திகள் இந்திய வானூர்திகளின் அணிவகுப்பைப் பார்த்து மௌனித்துச் சென்றன என்று இந்திய இராணுவத்தின் தரப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தியா மேற்கொண்ட தாக்குதலாலும், தாக்குதலைத் தொடர்ந்து இரண்டு தரப்பினரும் வெளிப்படுத்திய கருத்துக்களாலும் இரண்டு நாடுகளின் எல்லைகளிலும் உச்சக்கட்டப் போர்ப் பதற்றம் ஏற்பட்டுள்ளது. பாகிஸ்தான் எப்போதும் பதிலடி கொடுக்கலாம் என்ற நிலையும், இந்தியா மீண்டும் தாக்குதல் நடத்தலாம் என்ற நிலையும் தற்போது தோற்றம் பெற்றுள்ளது. இதையடுத்து இருநாடுகளின் எல்லைப் பகுதிகளில் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன் இந்தியத் தலைமை அமைச்சர் மோடி, பாகிஸ்தானின் தலைமை அமைச்சர் இம்ரான் கான் ஆகியோர் நேற்று தத்தமது அதிகாரிகளுடன் பாதுகாப்புக் குறித்து உயர்மட்டப் பேச்சை நடத்தினர். (ம)

## போர்க்...

பெற்றன என்று பல தரப்பினரும் குற்றஞ்சாட்டி வரும் நிலையில் அது தொடர்பில் பன்னாட்டு நியமங்களின் படி விசாரணை நடத்திக் குற்றவாளிகளுக்குத் தண்டனை வழங்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டு வருகின்றது. ஐக்கிய நாடுகள் மனித உரிமை சபையிலும் இந்த விடயம் பாரப்படுத்தப்பட்டு, தீர்மானமும் நிறைவேற்றப்பட்டிருந்தது. பன்னாட்டு நீதிபதிகள் அடங்கிய பொறிமுறை ஊடாகப் போர்க் குற்றங்களை விசாரணை செய்ய இலங்கை ஒப்புக் கொண்டிருந்தது. அதற்கான கால அவகாசமும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையால் வழங்கப்பட்டிருந்தது.

ஆனால் ஐ.நாவில் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் அரசு மெத்தனப் போக்கைக் கடைப்பிடித்து வருகின்றது. பன்னாட்டு விசாரணை அவசியமில்லை என்றும், இலங்கையின் நீதித்துறை ஊடாக விசாரணை நடத்தப்படும் என்றும் இலங்கை அரசு தெரிவித்து வந்தது. காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம், காணி விடுவிப்பு, அரசியல் கைதிகள் பிரச்சினை என தமிழ் மக்களின் பிரச்சினைகள் இன்னமும் தீர்க்கப்படாதுள்ளன.

தற்போது ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் 40 ஆவது அமர்வு ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது. இலங்கை அரசுக்கு வழங்கப்பட்டிருந்த கால அவகாசம் நிறைவடைந்துள்ள நிலையில் இலங்கை அரசு இந்த அமர்வில் நெருக்கடிகளைச் சந்திக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. அத்துடன் இலங்கை தொடர்பான புதிய தீர்மானம் ஒன்றை பிரிட்டன் கொண்டு வரவுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. இந்த நிலையில் இலங்கை அரசு அந்த நெருக்கடிகளைத் தணிக்கும் வகையில் அண்மைக் காலங்களில் காய் நகர்த்தல்களை மேற்கொண்டு வருகின்றது.

அண்மையில் கிளிநொச்சி வந்திருந்த தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, போரில் ஈடுபட்ட இரு தரப்பினராலும் குற்றங்கள் இழைக்கப்பட்டுள்ளன. அவை தொடர்பில் மாறி மாறி வழக்குகள் தொடுத்துக் கொண்டிருப்பதில் பயனில்லை. மறப்போம், மன்னிப்போம் என்று கூறியிருந்தார்.

தலைமை அமைச்சரின் இந்தக் கருத்துக்கு தமிழ் மக்கள் பலத்த எதிர்ப்பு வெளியிட்டிருந்தனர். போர்க் குற்றங்களில் ஈடுபட்டவர்கள் அடையாளம் காணப்படாது மன்னிப்பு வழங்குவது என்பதை ஏற்க முடியாது என்று அவர்கள் சுட்டிக்காட்டியிருந்தனர்.

முதலில் விசாரணை நடத்துங்கள், போர்க் குற்றத்தில் ஈடுபட்ட இராணுவத்தினரை அடையாளப்படுத்துங்கள். அதன்பின்னர் மன்னப்பது தொடர்பாக ஆராயலாம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் கூறியிருந்தது.

இந்தநிலையில் தற்போது அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்று அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார். போர்க் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ள இரு தரப்பினருக்கும் பொது மன்னிப்பு வழங்கக் கோரியே இந்த அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் கூறியுள்ளார். (எ)

## பனிக்கன்குளத்தில்...

கள் சொகுசுப் பேருந்து. வீதியில் தரித்து நின்ற டிப்பர் வாகனத்துடன் மோதி இந்த விபத்து நடந்துள்ளது.

பேருந்து நடத்துநரான பருத்தித்துறையைச் சேர்ந்த செல்வராசா நகுலேஸ்வரன் என்பரே உயிரிழந்தார்.

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த சொகுசுப் பேருந்து மாங்குளம், பனிக்கன்குளம் பகுதியில் ஏ9 வீதியில் "ரயர்" மாற்றுவதற்காக வீதியில் தரித்து நின்ற டிப்பர் வாகனத்துடன் மோதியுள்ளது. டிப்பருடன் மோதிய பேருந்து கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகிப் பற்றைக் காட்டுக்குள் புகுந்தது. பேருந்தின் நடத்துநர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். பயணிகள் ஐவர் காயமடைந்தனர். காயமடைந்தவர்கள் கிளிநொச்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

உயிரிழந்தவரின் சடலம் கிளிநொச்சி மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்தவிபத்துத்தொடர்பானவிசாரணைகளை மாங்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

அதேவேளை, அதிக வேகத்தாலும், அவதானமின்மையாலுமே விபத்துக்கள் ஏற்படுகின்றன என்று பேருந்தில் பயணித்த பயணிகள் விசனம் தெரிவித்திருந்தனர். (எ21,35,214)

## ஒட்டுசுட்டானில்..

ளின் வங்கிக் கணக்கில் கோடிக் கணக்கில் பணம் வைப்புச் செய்யப்பட்டுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்தப் பணம் பிரான்ஸ், ஜேர்மனி, ரஷ்யா, சீஷெல்ஸ் ஆகிய நாடுகளிலிருந்து இந்த பணம் வைப்புச் செய்யப்பட்டுள்ளது என்று பயங்கரவாத தடுப்பு பிரிவு மற்றும் விசாரணைப் பிரிவினர் நடத்திய விசாரணைகளில் தெரியவந்துள்ளது என்றும் கூறப்படுகின்றது. இந்தச் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டவர்கள் தற்போது அநுராதபுரம் சிறைச் சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். (எ)

## தொழில்நுட்ப பீட...

கழகத்தின் ஏனைய பீட வளாகங்கள் மற்றும் பிரதான வளாகம் என்பற்றுள் உள் நுழைவதற்கு நேற்றுத் தற்காலிக தடை விதிக்கப்பட்டுள்ளது.

உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் இ. விக்னேஸ்வரன் விடுத்துள்ள அவசர அறிவித்தலுக்கமைய விடுதிகளில் தங்கியுள்ள அனைத்து மாணவர்களும் உடனடியாக வெளியேற வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது

அதற்கான காரணம் அறிவிக்கப்படாத நிலையில் அங்கு நடந்த பகிடி வதை முயற்சியைத் தொடர்ந்து நடந்த பதற்றமான நிலைமையே இந்தத் தடைக்குக் காரணம் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

கடந்த திங்கிழமை புதுமுக மாணவர்களை மூத்த மாணவர்கள் பகிடி வதைக்கு உட்படுத்த முயன்றுள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பில் புதுமுக மாணவர்களின் பெற்றோர்கள் பல்கலைக் கழக நிர்வாகத்துக்குத் தெரியப்படுத்தியிருந்தனர். அது தொடர்பில் உப விடுதிக் காப்பாளர் விசாரணை செய்ய முயன்றபோது மாணவர்களுக்கும், அவருக்கும் இடையே முரண்பாடு ஏற்பட்டது. அதனால் விடுதியில் குழப்ப நிலைமையும் தோன்றியது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை உபபதிவாளர் மற்றும் விரிவுரையாளர்கள், ஒழுக்காற்று உத்தியோகத்தர்கள் நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முயன்றனர் என்றும் அப்போதும் மூத்த மாணவர்கள் குழப்பத்தில் ஈடுபட்டனர் என்று கூறப்படுகின்றது. நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முடியாத நிலையில் நேற்றுத் துணைவேந்தரால் தடை விதிக்கப்பட்டுள்ளது என்று கூறப்படுகின்றது. அது தொடர்பாகப் பல்கலைக் கழகத் துணைவேந்தரை நேற்றிரவு தொலைபேசி ஊடாகத் தொடர்பு கொள்ள முயன்றபோதும், அழைப்பை அவர் ஏற்றுக் கொள்ளவில்லை.

அதேவேளை கடந்த ஆண்டு இறுதியில் தொழில்நுட்ப பீடத்தைச் சேர்ந்த முதலாம் வருட மாணவர் ஒருவர் தவறான முடிவெடுத்து உயிரை மாய்க்க முயற்சித்திருந்தார். பளையைச் சேர்ந்த மாணவரான அவர் வீட்டிலிருந்தவர்களால் காப்பாற்றப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அவரின் தவறான முடிவுக்குப் பகிடி வதையே காரணம் என்று அந்தச் சந்தர்ப்பத்தில் செய்திகள் வெளியாகியிருந்தன. (எ) தடை விதிக்கப்பட்டமை தொடர்பாக முன்னர் வந்த செய்தி 14 ஆம் பக்கத்தில் உள்ளது.

## மைத்திரி...

அரசிடம் கோரியுள்ளோம்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

திருகோணமலை நகர சபை மண்டபத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மாலை நடைபெற்ற இலங்கைத் தமிழரசுச் கட்சியின் திருகோணமலை மாவட்டக் கிளை, பிரதேசக் கிளை பிரதிநிதிகளுடனான கலந்துரையாடலின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சகலரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய நடைமுறைப்படுத்தக் கூடிய ஒரு புதிய அரசமைப்பு கொண்டுவரப்பட வேண்டும். அதற்காக அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுடனும் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுடனும் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்சவுடனும் இணைந்து பணியாற்ற நாம் தயார். எமக்கு எவரும் எதிரிகள் அல்லர்.

இந்த நாட்டை ஆண்ட முன்னாள் அரச தலைவர்களான சந்திரிகா அம்மையார், மகிந்த ராஜபக்ச போன்றோராலும், தற்போதைய அரசாலும் பல்வேறு அரசியல் தீர்வுத் திட்டங்கள் கொண்டு வரப்பட்டன. பலவிதமான அறிக்கைகள் எம்மிடம் உள்ளன. பல நிபுணர்களின் அறிக்கைகளும் உள்ளன. இவை எல்லாவற்றையும் வைத்து நல்ல தீர்வு ஒன்று கொண்டுவரப்பட வேண்டும். அதற்காக நாம் செயற்படுகின்றோம்.

1987ஆம் ஆண்டு இந்திய அரசின் அனுசரணையுடன் கொண்டுவரப்பட்ட 13ஆவது அரசமைப்பின்படி முதன்முறையாக அதிகாரம் பகிரப்பட்டது. அன்று முதல் இன்றுவரை தீர்வுக்கான எமது பயணம் தொடர்கின்றது.

ஒரு தீர்வுத் திட்டத்தைக் கொண்டு வரும்போது மக்களின் கருத்தை நாம் கேட்போம்;, ஆலோசனைகளைப் பெறுவோம். பல்வேறு நாடுகளில் உள்ள நடைமுறைகளை ஆராய்ந்துதான் தீர்வுத்திட்டத்தை நாம் ஏற்போம்.

தற்போது நாடாளுமன்றம் ஓர் அரசமைப்பு நிர்ணய சபையாக மாற்றப்பட்டுள்ளது. உப குழுக்கள் அமைக்கப்பட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. அதன் பணிகள் தொடர்கின்றன. அதனைத் தொடர்ந்து நீட்டிக்காமல், நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதற்காக அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவையும் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவையும் நாளை வியாழக்கிழமை நேரில் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளோம். இந்தக் கலந்துரையாடலுக்கு அனைத்துக் கட்சித் தலைவர்களையும் அழைக்குமாறு அரசிடம் நாம் கோரியிருக்கின்றோம் என்றார். (ஒ.5,22)

## விளையாட்டு உபகரணங்கள் வழங்கிவைப்பு



வவுனியா, பெப். 27
வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், நாடாளுமன்றக் குழுக்களின் அவைத்தலைவருமாகிய செல்வம் அடைக்கலநாதனின் 2018ஆம் ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டில் வவுனியா மாவட்டத்தை சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு அண்மையில் விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டன. இந்த நிகழ்வில் முன்னாள் மாகாணசபை உறுப்பினர் செந்தில்நாதன் மயூரன், தமிழீழ விடுதலை இயக்க துணை மாவட்ட அமைப்பாளர் நாகராஜன், வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபை உறுப்பினர் பார்த்தீபன், வவுனியா துடுப்பாட்டச் சங்கத் தலைவர் ரதீபன், வவுனியா கால்பந்தாட்டச் சங்கத் தலைவர் மற்றும் கழக உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ம-110)



### 10 ஓட்டங்களில் சுருண்டது வவு. - மன். இணைந்த அணி

# இன்னிங்ஸால் வெற்றிபெற்ற யாழ். மாவட்ட மகளிர் அணி!

யாழ்ப்பாணம், பெப். 27
இலங்கை துடுப்பாட்ட சபையால் நடத்தப்படும் 23 வயதுப்பிரிவு பெண்களுக்கான துடுப்பாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் யாழ்ப்பாண மாவட்ட மகளிர் அணி இன்னிங்ஸ் மற்றும் 151 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

அரியாலை கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் இந்த ஆட்டம் இடம்பெற்றது. யாழ்ப்பாண மாவட்ட மகளிர் அணியை எதிர்த்து வவுனியா - மன்னார் மாவட்ட இணைந்த மகளிர் அணி மோதியது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற வவுனியா - மன்னார் இணைந்த அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாண மாவட்ட அணி 7 இலக்குகளை இழந்து 186 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்தியது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய வவுனியா - மன்னார் இணைந்த அணி 10 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. வடமாகாண பெண்கள் துடுப்பாட்டத்தில் ஓர் அணி ஓர் இன்னிங்ஸில் 10 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழப்பது இதுவே முதல் தடவை.

பந்துவீச்சில் சானு 4 இலக்குகளையும், நிதர்சனா, மதூரிக்கா இருவரும் தலா 3 இலக்குகளையும் வீழ்த்தினர். தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய வவுனியா - மன்னார் மாவட்ட இணைந்த அணி 25 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. இதையடுத்து இன்னிங்ஸாலும் 151 ஓட்டங்களாலும் வெற்றிபெற்றது யாழ்ப்பாண மாவட்ட அணி. (ம-23)

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், பெப். 27

**யாழ். லீக்கின் கால்பந்தாட்டம்**
யாழ்ப்பாணம் கால்பந்தாட்ட லீக்கின் 75ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்டுவரும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

**கலைவாணியின் கால்பந்தாட்டம்**
கம்பர்மலை கலைவாணி சனசமூக நிலையத்தின் வைரவிழாவை முன்னிட்டு அணிக்கு 7 வீரர்கள் பங்குபற்றும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் இமையாணன் மத்திய விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து பொலிகை பாரதி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

**அளவெட்டி மத்தியின் கரப்பந்துத் தொடர்**
அளவெட்டி மத்திய விளையாட்டுக் கழகம் யாழ்ப்பாண மாவட்ட ரீதியாக நடத்தும் கரப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று இரவு 8 மணிக்கு இடம்பெறும் அரையிறுதியாட்டத்தில் புத்தூர் வளர்மதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

**தென்றல் கழக தாச்சித் தொடர்**
நவாலி தென்றல் விளையாட்டுக் கழகம் நடத்தும் தாச்சித் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.
இந்தத் தொடரில் இன்று இரவு 7.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் இளங்கதிர் அணியை எதிர்த்து ஆலடி சிந்து அணி மோதவுள்ளது. (ம-23)



## உருத்திரபுரம் அணி கிண்ணம் வென்றது

வவுனியா, பெப். 27
தாயக விருட்சம் சுவிஸ் அறக்கட்டளையானது, வவுனியா கால்பந்தாட்டச் சங்கத்தின் ஆதரவோடு நடத்திய 'வன்னி கால்பந்தாட்டச் சமர்' தொடரில் கிளிநொச்சி உருத்திரபுரம் அணி கிண்ணம் வென்றது.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற இந்த இறுதியாட்டத்தில் வவுனியா ஈஸ்வரன் அணியை எதிர்த்து கிளிநொச்சி உருத்திரபுரம் அணி மோதியது.

4:1 என்ற கோல் கணக்கில் உருத்திரபுரம் அணி வெற்றிபெற்றது. ஹரீஸ் இரு கோல்களையும், பிரதீஸ், தேனுஜன் இருவரும் தலா ஒரு கோலையும் பதிவு செய்தனர்.

அதிக கோல்களைப் பெற்ற வீரராக உருத்திரபுரம் அணியின் ஹரீஸூம், சிறந்த கோல் காப்பாளராக அதே அணியின் குனேஸூம், தொடராட்ட நாயகனாக ஈஸ்வரன் அணியின் புவியும் தெரிவுசெய்யப்பட்டனர். (ம-110)

## யாழ்ப்பாணப் பிரதேச கழகங்களின் மாவட்ட போட்டிகளின் அட்டவணை

யாழ்ப்பாணம், பெப். 27
யாழ்ப்பாணம் மாவட்ட பிரதேச செயலக பிரிவுகளுக் குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான மாவட்ட நிலை விளையாட்டுப் போட்டிகள் கடந்த ஜனவரி ஆறாம் திகதி தொடக்கம் நடைபெற்றுவரும் நிலையில் இறுதிப் போட்டிகள் நடைபெறும் தினங்கள் மற்றும் இடங்கள் பற்றிய விவரங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இதன்படி எதிர்வரும் நான்காம் திகதி பெண்களுக்கான மென்பந்துத் துடுப்பாட்டப் போட்டிகள் யாழ்ப்பாணம் கனகரத்தினம் மகா வித்தியாலய மைதானத்திலும் ஆண்களுக்கான போட்டிகள் மார்ச் 23, 24 ஆகிய திகதிகளில் மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்திலும் நடைபெறும்.

இருபாலாருக்குமான கரப்பந்தாட்டப் போட்டிகள் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழக மைதானத்தில் மார்ச் 31ஆம் திகதியும் இருபாலருக்குமான கூடைப்பந்தாட்டப் போட்டிகள் பழைய பூங்கா விளையாட்டுத் திடலில் ஏப்ரல் ஆறாம் திகதியும், பெண்களுக்கான எல்லே போட்டிகள் ஏப்ரல் 19ஆம் திகதி சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி மைதானத்திலும் ஆண்களுக்கான எல்லே போட்டிகள் வட்டுக்கோட்டை யாழப்பாணக் கல்லூரி மைதானத்திலும் இடம்பெறவுள்ளன.

கபடிப் போட்டிகள் ஏப்ரல் 20ஆம், 21ஆம் திகதிகளில் நெல்லியடி மத்திய கல்லூரி மைதானத்திலும், இருபாலாருக்குமான கால்பந்தாட்டப் போட்டிகள் மே 18, 19 ஆகிய திகதிகளில் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்திலும் இடம்பெறவுள்ளன.

தடகளப் போட்டிகள் மே 25ஆம், 26ஆம் திகதி களில் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்திலும், இறுதிப் போட்டிகள் மே மாதம் 30ஆம் திகதி சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்திலும் இடம்பெறவுள்ளன. (ம-9)

# டோனிக்கு குவியும் விமர்சனங்கள்



ஆஸ்திரேலியா - இந்தியா அணிகளுக்கிடையிலான முதலாவது ரி-20 போட்டியில் இந்திய அணி தோல்வியடைந்தது. இந்தத் தோல்விக்கு டோனியும் ஒரு காரணம் என விமர்சனங்கள் எழுந்துள்ளன. அவர் பந்துகளை வீணடித்து தோல்விக்கு காரணமாகவிருந்தார் என்று விமர்சனம் எழுந்துள்ளது. இவர் 37 பந்துகளைச் சந்தித்து 20 ஓட்டங்களை மாத்திரமே பெற்றார். இது குறித்து சமூக வலைத்தளங்களில் பல்வேறு விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

இதில் அநேகர், டோனி ரி-20 போட்டிகளில் இருந்து நாகரிகமான முறையில் ஓய்வை அறிக்க வேண்டும் என்றும், இனிவரும் காலங்களில் அவர் ஆலோசகராக இருந்தால் மட்டும் போதும் என்ற விமர்சனங்கள் எழுந்திருந்தன.

அதனோடு அவரின் ஓட்டங்களைப் பெறும் வேக வீதம் வெகுவாக வீழ்ச்சியடைந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## மே.இ.தீவுகள் இங்கிலாந்து ஒருநாள்போட்டி மழையால் கைவிடப்பட்டது

மேற்கிந்தியத்தீவுகள் - இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான ஆட்டம் மழை காரணமாக கைவிடப்பட்டது.

மேற்கிந்தியத்தீவுகள் - இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான ஐந்து போட்டிகள் கொண்ட ஒருநாள் கிரிக்கெட் தொடர் நடைபெற்று வருகிறது. பிரிட்ஜ்டவுனில் நடைபெற்ற முதல் போட்டியில் இங்கிலாந்து 6 இலக்குகளால் வெற்றி பெற்றது. இரண்டாவது போட்டியில் மேற்கிந்தியத்தீவுகள் அணி வெற்றி பெற்றிருந்தது. இரு அணிகளும் 1:1 என்று சமநிலையில் இருந்தது.

இந்தநிலையில் 3ஆவது போட்டி கிரேனடாவில் நேற்றிமுன்தினம் நடைபெறுவதாக இருந்தது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணி முதலில் மேற்கிந்தியத்தீவுகள் அணியை முதலில் துடுப்பெடுத்தாடப் பணித்தது. போட்டி தொடங்குவதற்கு முன் மழை பெய்த காரணத்தால். ஒரு பந்து கூட வீசப்படாத நிலையில் ஆட்டம் கைவிடப்பட்டது.



### பன்னாட்டு கிரிக்கெட் சபை அதிரடி

# சனத் ஜெயசூரியாவுக்கு இரண்டு ஆண்டுகள் தடை

பன்னாட்டுக் கிரிக்கெட் சபையின் ஊழல் தடுப்பு விதிமுறைகளை மீறினார் என்ற குற்றச்சாட்டில் இலங்கை அணியின் முன்னாள் துடுப்பாட்ட வீரர் சனத் ஜெயசூரியாவுக்கு இரண்டு ஆண்டுகள் தடை விதித்தது பன்னாட்டு கிரிக்கெட் சபை.

இலங்கைக் கிரிக்கெட் சபையில் முறைகேடுகள் நடைபெற்றதாக குற்றச்சாட்டு எழுந்திருந்தது. குற்றச்சாட்டு எழுந்த காலத்தில் முன்னாள் வீரர் சனத் ஜெயசூரியா தேர்வுக்குழுத் தலைவராக இருந்தார். இந்தக் குற்றச்சாட்டை பன்னாட்டு கிரிக்கெட் சபையின் ஊழல் தடுப்புப் பிரிவு விசாரணை நடத்தி வந்தி நிலையில். இவர் விசாரணைக்கு ஒத்துழைக்காத காரணத்தாலும், முக்கியமான ஆவணங்களை மறைத்து ஆதாரங்களை அழித்து விட்டார் என்று குற்றம் சாட்டப்பட்டது. இந்த நிலையில், இவருக்கு இரண்டு ஆண்டுகள் தடைவிதித்தது பன்னாட்டுக் கிரிக்கெட் சபை. இந்தக் கால கட்டத்தில் அவர் எந்தவொரு கிரிக்கெட் செயற்பாட்டிலும் செயற்பட முடியாது.

# ஒற்றுமையே வெற்றிக்குக் காரணம்

## திமுத் கருணாரத்னே நெகிழ்ச்சி



வெற்றிபெற வேண்டும் என்ற வேட்கை அணி வீரர்கள் ஒவ்வொருவரிடமுமிருந்தது. அதற்காக நாம் கடுமையாக உழைத்தோம். அந்த உழைப்பின் பயனே தென்னாபிரிக்காவுடனான டெஸ்ட் தொடரின் வெற்றி என்று இலங்கை அணித் தலைவர் திமுத் கருணாரத்னே தெரிவித்தார். தென்னாபிரிக்காவுடனான டெஸ்ட் தொடரில் வரலாற்று வெற்றி பெற்ற இலங்கை அணியின் சில வீரர்கள் நாடு திரும்பியுள்ள நிலையில் நேற்றுமுன்தினம் திமுத் கருணாரத்னே இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

அணி வீரர்களுக்கு சுதந்திரத்தைக் கொடுத்து ஒரு அணியாக வழிநடத்தியதும் கூட வெற்றிக்கு மிகப்பெரிய காரணியாக அமைந்தது. நாம் அனைவரும் ஒன்றாக செயற்பட்டோம். ஏன் உணவு உண்பதற்குக் கூட ஒன்றாகவே சென்றோம்.

அத்தோடு வெற்றிபெற வேண்டும் என்ற வேட்கையும் எம் ஒவ்வொருவரிடமும் இருந்தது. அதற்காக கடுமையாக உழைத்தோம். அந்த உழைப்பின் பயனே இந்த வெற்றி - என்றார்.

# கோக்லியை பார்த்துத்தான் வளர்ந்தேன்

## பாபர் அசாம் நெகிழ்ச்சி

இந்திய கிரிக்கெட் அணித் தலைவர் விராட் கோக்லியைப் பார்த்துத்தான் எனது கிரிக்கெட் வாழ்க்கையை ஆரம்பித்தேன் என்று பாகிஸ்தான் வீரர் பாபர் அசம் தெரிவித்தார். இவர் பன்னாட்டு ரி-20 துடுப்பாட்டத் தரவரிசையில் முதலிடத்தில் இருந்து வருகிறார். ரி-20 போட்டிகளில் 9 அரைச் சதங்கள் உட்பட ஆயிரத்து 182 ஓட்டங்களை எடுத்துள்ளார்.

இது குறித்து அவர் தெரிவிக்கையில்;

என்னை கோக்லியுடன் ஒப்பிடுவது என்பது எனக்கு கிடைத்த பெருமை. அவர் துடுப்பாட்ட நிலைத்தன்மை உடைய வீரர், நல்ல மனநிலை கொண்டவர். ஒவ்வொரு போட்டியிலும் 100 சதவீதம் தனது திறமையை வெளிப்படுத்தி விளையாடக்கூடியவர்.

நான் என்னுடைய கிரிக்கெட் வாழ்க்கையைத் தொடங்கும் போது, கோக்லியைப் பார்த்துத் தான் விளையாடத் தொடங்கினேன். பாகிஸ்தான்-இந்திய அணி விளையாடிய ஒவ்வொரு போட்டியிலும் கோக்லியின் துடுப்பாட்டத்தை ரசித்துப் பார்த்தேன்- என்றார்.



# பாகிஸ்தானை வீழ்த்துவோம்

## சச்சின் அறிவுரை

புல்வாமா தாக்குதலில் இந்திய இராணுவத்தினர் கொல்லப்பட்டதையடுத்து உலகக்கிண்ணத்தில் பாகிஸ்தானுக்கு எதிரான போட்டியில் இந்திய அணி விளையாடக் கூடாது என்று பல்வேறு தரப்பினர் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

இந்த நிலையில் இந்திய கிரிக்கெட் முன்னாள் வீரர் சச்சின் தெரிவிக்கையில்; "உலகக் கிண்ணத்தில் எப்போதுமே நாம்தான் பாகிஸ்தானை வீழ்த்தியுள்ளோம். மீண்டும் ஒருமுறை அவர்களை வீழ்த்த வேண்டும். பாகிஸ்தானை எதிர்த்து விளையாடாமல் அவர்களுக்கு இரண்டு புள்ளிகள் வழங்கி உதவி செய்வதை நான் வெறுக்கிறேன்.

என்னைப் பொறுத்த வரையில் இந்தியாதான் எனக்கு முதன்மையானது. ஆகவே, என்னுடைய நாடு என்ன முடிவு எடுக்கிறதோ, அதன்பின்னால் நான் இருப்பேன்"- என்றார்.

## ரி- 20 போட்டியில் ரெய்னா சாதனை

சையத் முஸ்தாக் அலி கிண்ண ரி- 20 போட்டி பல்வேறு நகரங்களில் நடைபெற்று வருகிறது. இதில் டெல்லியில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் இந்திய வீரர் சுரேஷ் ரெய்னா 18 பந்துகளில் ஒரு நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 12 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார். அவர் 11 ஓட்டங்களை எட்டிய போது ரி- 20 போட்டியில் 8 ஆயிரம் ஓட்டங்களை அடித்த முதல் இந்திய வீரர் என்ற சாதனையைப் படைத்தார். பன்னாட்டு அளவில் இவர் 6ஆவது இடத்தில் உள்ளார்.



# கிரேனோ - சொசைடேட் ஆட்டம் சமநிலையில்

ஸ்பானியக் கழகங்களுக்கிடையில் இடம்பெற்று வரும் லா லிகா தொடரில் நேற்று இடம்பெற்ற போட்டியில் கிரேனோ, றியல் சொசைடேட் அணிகள் மோதின. முதலாவது பாதி ஆட்டம் ஆரம்பித்து இரு அணி வீரர்களும் பரபரப்பாக ஆடிய போதும் எந்தவொரு கோல்களும் போடப்படாது நிறைவடைந்தது முதலாவது பாதி ஆட்டம்.

இரண்டாவது பாதி ஆட்டத்திலும் இரு அணி வீரர்களும் கோல்கள் எதனையும் போடாத நிலையில் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்து. இரு அணிகளுக்கும் தலா ஒவ்வொரு புள்ளிகள் வீதம் வழங்கப்பட்டன.



# மகுடம் சூடியது மான்செஸ்டர்

கராபவ் கால்பந்துக் கிண்ணத் தொடரின் இறுதிப் போட்டி நேற்றிமுன்தினம் இடம்பெற்றது. மான்செஸ்டர் சிட்டி - செல்சி அணிகள் பலப்பரீட்சை நடத்தின. மான்செஸ்டர் அணி வெற்றி பெற்று கிண்ணத்தைக் கைப்பற்றியது.

முதல் பாதி ஆட்டத்தில் மான்செஸ்டர் சிட்டி அணி ஆதிக்கம் செலுத்தியது. எனினும் இரு அணிகளாலும் முதல்பாதி ஆட்டத்தில் எந்தவொரு கோல்களையும் போட முடியவில்லை. இரண்டாவது பாதி ஆட்டத்தில் செல்சி அணி அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தியது. கோல் அடிக்கும் வாய்ப்புகள் கிடைத்தும், அதைத் தவறவிட்டது. இதனால் ஆட்டம் கோலின்றி முடிந்தது.

ஆட்ட நேரத்துக்குள் முடிவு கிடைக்கவில்லை என்பதால் இரண்டு முறை கூடுதல் நேரம் வழங்கப்பட்டது. அதிலும் இரு அணிகளும் கோல் அடிக்கவில்லை. இதனால் 'பெனால்டி' முறை கடைபிடிக்கப்பட்டது. இதில் மான்செஸ்டர் சிட்டி 4:3 என்ற கணக்கில் செல்சி அணியை வீழ்த்தி வெற்றி பெற்றது.

## இந்தியா– ஆஸி. ரி– 20 இன்று

ஆஸ்திரேலியா அணி இந்தியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு விளையாடி வருகின்றது. இரண்டு ரி-20 போட்டிகள், 5 ஒருநாள் போட்டிகளில் விளையாடி வருகின்றது.

இதில் முதலாவது ரி-20 போட்டியில் இந்திய அணியை வீழ்த்தி ஆஸ்திரேலியா அணி திரில் வெற்றி பெற்றிருந்தது.

இரு அணிகளுக்குமிடையிலான இரண்டாவது ரி-20 போட்டி இன்று பெங்களூரில் இடம்பெறவுள்ளது. இந்திய அணி இந்தப் போட்டியில் ஆஸ்திரேலியா அணிக்கு பதிலடி கொடுக்குமா? என்று ரசிகர்கள் எதிர்பார்த்துள்ளனர்.

ஆஸ்திரேலியா அணி தனது சொந்த மண்ணில் இந்தியவிடம் தொடரை இழந்தது. இதற்கு பதிலடி கொடுக்க இன்றை போட்டியில் வெற்றி பெற்று தொடரைக் கைப்பற்றுமா?. இரு ரசிகர்களுக்கு விருந்தான போட்டியாக அமையும்.

CRICKET AUSTRALIA

A/L பொருளியல் 7
சர்வதேச வர்த்தகமும் நிதியும்
2019 A/L புதிய பாடத்திட்டம் - இரு அலகுகளுக்குரியது
- பரீட்சை வினாக்களுக்கேற்ப ஒழுங்குபடுத்தப்பட்டது
- ஆசிரியர் வழிகாட்டியிலுள்ள பிழைகள் திருத்தப்பட்டு மேலதிக விடயங்கள், உதாரணங்கள், வினா - விடைகள், சிறப்புக் குறிப்புக்கள், வழிகாட்டல்கள், குறிப்புக்கள், பரீட்சை நுட்பங்கள், ஆகப்பிந்திய தரவுகள், தகவல்கள் & வர்ணப் பக்கங்களில் விளக்கப்படங்கள் அடங்கியது.
2015 A/L & 2016 A/L பரீட்சையில் 99 புள்ளிகளும்
2017 A/L & 2018 A/L பரீட்சையில் 100 புள்ளிகளும் 100/100
பெறவைத்த நூல்களின் ஆசிரியர்
வேலாயுதம் கருணாகரன்
ரூபா 400
* தந்தையின் 50ஆம் நினைவு நாள் சமர்ப்பண நூல்
2019 பழைய பாடத்திட்டப் பரீட்சைக்குரிய வினாவிடை & MCQ நூல்களும்
பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம்.

நியத ஜய நியத்த ஜய Niyatha Jaya
சீட்டிழுப்பு வாரம்: 749 வர்ணம்: ஆரஞ்சு
திகதி: 2019.02.26
வெற்றி இலக்கங்கள் 03 16 24 56 ஆங்கில எழுத்து D
அடுத்த வெள்ளிக்கிழமைக்கான ஜக்பொட் ரூ. 22,667,904/-
தொலைபேசி: 0112 333 546 - 47 web: www.dlb.lk

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 931
சீட்டிழுப்பு திகதி 2019.02.25 திங்கட்கிழமை
Q 19 29 32 44
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 51,592,452/-
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்
மஞ்சள், பச்சை, நீலம், சிவப்பு நிற டிக்கட்டுகள் முறையே திங்கட்கிழமை, வியாழக்கிழமை, சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

கோடிபதி சனிதா KOTIPATHI SHANIDA
சீட்டிழுப்பு வாரம்: 412
வர்ணம்: இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2019.02.26
அடுத்த வெள்ளிக்கிழமைக்கான ஜக்பொட் ரூ. 114,938,333/-
W 01 10 16 48
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
அல்லது தரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

அத கோடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 538
வர்ணம்: நீலம்
சீட்டிழுப்பு திகதி: 2019.02.26
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 66,932,140/-
வெற்றி இலக்கங்கள் 17 18 37 52 ஆங்கில எழுத்து A
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
அல்லது தரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

ராசி அதிர்ஷ்டம்
திகதி 26.02.2019 வெற்றி வாரம் 2465 வர்ணம் சிகப்பு
விருச்சிகம்
வெற்றி இலக்கங்கள் 14 30 43 44
புதன் கிழமை வெற்றிப் பொதி ரூ. 2, 394, 206/=
27.02.2019ம் திகதி புதன் கிழமை பச்சை நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk

## கண்ணீர் அஞ்சலி



எமது குடும்ப நண்பர்
Dr.வி.மிராஜ் அவர்களின்
அன்புத் தந்தை
ஐயாத்துரை விநாயகமூர்த்தி
அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

தோற்றம் 26.01.1959
மறைவு 25.02.2019

Dr.Mrs.R.சின்னப்பு
Dr.& Dr.Mrs விஜயகுமார்
No.09, ஆனந்தஜோதி
வைத்தியசாலை, சாவகச்சேரி.
(ACH/558)(11.17)

## மருந்தக உதவியாளர் தேவை

யாழ். நகரில் இயங்கும் மருந்தகம் ஒன்றுக்கு அனுபவமுள்ள மருந்தக பெண் உதவியாளர் தேவை.
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். தொடர்பு - 077 939 6804

## வீடு அல்லது கட்டடம் வாடகைக்கு தேவை

தனியார் கல்வி நிறுவனம் ஒன்றிற்கு யாழ். நகரப் பகுதியில் வீடு அல்லது கட்டடம் வாடகைக்கு தேவை.
075 744 4401

## ஆங்கிலம்

3 மாத சனி, ஞாயிறு மற்றும் வாரநாள் வகுப்புகள்
O/L, A/L எழுதியோர், இளைஞர், யுவதிகள், பல்கலை புகுமுகமாணவர்கள் தொழில்புரிவோர், ஆசிரியர்கள் வெளிநாடுசெல்வோர் இணையமுடியும்.
ஆங்கிலத்தில் ஓரெழுத்துத்தெரியாதவர்களும் மூன்றே மாதங்களில் சரளமாக ஆங்கிலம் பேசமுடியும்
சனி;ஞாயிறு பிரிவு ஆரம்பம் - 02.03.2019
காலை : 08 மணி (சனி)
அனுமதி, புத்தகம் மற்றும் சான்றிதழ் இலவசம்
மொத்த பயிற்சிக்கட்டணம் ரூபா 3000/- மட்டுமே
28.02.2019 வரை பதிவு செய்வோருக்கே இச்சலுகை கட்டணம் பொருந்தும்
SAAMSON Experts in English Training
403, வெலிங்டன் சந்தி, பெருமாள் கோயிலடி, யாழ்நகர்.
021 222 4282
077 621 4567

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 27.02.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.